மரியாயின் சேனை
பொன் விழா மலர்

Souvenir
Legion of Mary

1936 — 1986

9.183

1540

LEGIO MARIAE

யாழ் கொமித்சியம்
யாழ்ப்பாணம்—ஸ்ரீலங்கா

1540

பாத காணிக்கை

டபிளின் மாநகரில் முதல்தோன்றிய மரியாயின் சேனையை யாழ்நகரிலும் அடியிட்ட மேதகு வந். J. A. கியோமார் O.M.I. ஆயருக்கும், அவரது ஆணையை ஏற்று முதன்முதலாக 'இரக்கத்தின் மாதா' பிரசீடியத்தைத் தொடக்கிப் பரிபாலித்து வளர்த்த ஆன்ம இயக்குனர் அருள் திரு J.A. இராசநாயகம் O.M.I. அடிகளாருக்கும் எமதுபொன்விழாமலரைப் பாதகாணிக்கையாக்குகின்றோம்.

மன்றாட்டு

அன்பார்ந்த இலங்காமாதாவே! எங்கள் நாட்டில் அமைதியும் சமாதானமுமான நாள் விரைவில் விடிந்து நல்லதோர் ஆட்சி மலர அருள்பாலிக்க வேண்டுமென்று சேனைப் பொன்விழாவேளை தாயே! உம்மை மன்றாடுகிறோம்.

தரணியில்
தாயின் தரிசனங்கள்

கன்னிமரியாள் மீட்பருடன் ஒன்றித்து வாழ்ந்தாள். கடவுளின் திருச்சித்தத்தை அறிந்து விரும்பி நிறைவேற்றியதோடு தரணிக்கும் தெரிவித்தாள்.

1846-ல் லாசலேற்றில், மெலா, மெக்சிமின் சிறுவர்களுக்கு தம் முகத்தைக் கைகளுக்குள்ளே புதைத்து அழுதுகொண்டு ''நீங்கள் கிரமமாகச் செபிக்கிறீர்களா? மனிதர் செபிப்பது போதாது. எனது மகனின் கரம் அதிக கனமாயிருக்கிறது. அதை இனித் தாங்கிக் கொள்ள என்னால் முடியாது'' என மனிதருக்கு வரப்போகும் தண்டனையை அறிவித்தாள்.

1858-ல் லூர்துபதியில் சிறுபிள்ளைகளுக்கு மாதா தோன்றி 18 முறை அங்கு வரும்படி சொல்லி பரிசுத்த அன்னை 'பாவிகளுக்காகச் செபமும் தபமும்' வேண்டிக்கொண்டு ''மாசற்ற உற்பவம் நானே'' என்றாள்.

1871-ல் பொன்மேன் கிராமத்தில் குழந்தைகளுக்குத் தேவதாய் தோன்றி ''என் குழந்தைகளே! செபியுங்கள்; உங்கள் செபங்களைக் கடவுள் விரைவில் கேட்பார்'' என்றாள்.

1917-ல் மரியாய் மாதந்தோறும் 13-ந் திகதியில் பாத்திமா பதியில் பெரிய அடையாளங்கள் காட்டினாள்! ''செபமாலை மாதா நானே; செபமாலையைத் தினமும் தியானிக்க வேண்டும், மனிதர் தங்கள் சீவியத்தை மாற்றி மன்னிப்புப் பெறவேண்டும்'' என்றாள்.

பத்திமாவில் சில இரகசியங்களையும் சிறுவருக்கு அறிவித்தாள்,

(அ) பிரான்சிசுக்கு 'அநேக செபமாலை செபிக்கவேண்டும்' என்றாள்

(ஆ) யசிந்தாவுக்கு 'பாவிகள் மனந்திரும்புதலுக்காக ஒறுத்தல்கள் ஒப்புக்கொடுக்கவேண்டும்'' என்றாள்.

மரியாயின் சேனைக் கீதம்

அணி அணியாய் சேர்ந்தோம் - தாயுன்
இணையற்ற தாள் மலரில்
பணிபல நாம் செய்தே - தாயுன்
பண்பினில் வளர்ந்திடுவோம்

சேனையின் தலைவி நீயே - மரியே
ஞானமும் நிறைந்த தாயே
ஆதியிலே உனை ஆண்டவன் தேர்ந்தார்
அவனியில் பெருமை கொண்டோமே

சேவையின் தலைவி நீயே - தாயே
சேவையில் நாட்டம் தருவாய்
இறைவனின் தாயாய் இருந்தும் நீயே
இகமதில் சேவை செய்துயர்ந்தாய்

சேனையின் வளங்கள் பெருக தாயே
சேனைகள் உயர்ந்து நிலைக்க
ஆசிகள் அளிக்கவேண்டும் எம்மை
அரவணைத் தேற்பாய் தாயே.

ம. யேசுதாசன்

எமது கருத்து

சேவை மூலம் சமாதானம்

மனிதன் தொடக்கத்திலிருந்தே தன் துணைவியுடன் சேர்ந்து குடும்பமாகவே தம்மைப் படைத்த இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் அவரோடிருந்த உறவை முறித்துவிட்டான். என்செய்வது, நடவாதது நடந்துவிட்டது. இந்நிலையில் இறை வாழ்வுக்கும் அவனுடைய ஈனவாழ்வுக்கும் இடையே பற்பல முரண்பாடுகள் மலிந்துவிட்டன. எனவே தன்னுள்ளும்—தனக்கும் அயலானுக்குமிடையிலும்—தன் அன்புள்ள இறைவனுக்கு இடையிலும் ஒற்றுமை, உறவு, சமாதானம் எல்லாவற்றையும் இழந்த பரதேசியாகி, பாவியாகி, உண்மை வாழ்வற்று வாழ்ந்து வந்தான். அவனது சந்ததிக்கும் இன்றும் அதுவே தொடர்கிறது. முதல் அகங்காரமும் அதன்பின் காய்மகாரமும் பிறந்தது. திருவள்ளுவரும் அழுக்காறு இழுக்காததே அறமாகும் என்கிறார். பகுத்தறிவுள்ள அவனுக்களித்த 'சமாதானம்' என்னும் அருங்கொடையைத் தேடி அலைகிறான்—அலைந்து கொண்டே இருக்கிறான்.

சமாதானம் என்றால் எவ்வித முரண்பாடுகளும் இன்றி மனித இயல்புக்குரிய ஒற்றுமையும் நிம்மதியுமான வாழ்வாகும். (சம் + ஆ + தானம் = ஒன்று சேர்ந்து வாழ்தல்). அதாவது 'நான்' என்னும் அகங்காரம் நீங்கி புத்தி, சித்தம், ஐயாதீனம் எல்லாம் ஏகமனதான இசைவில் செல்லுதலாகும். மனிதனுடைய உண்மையான இன்பவாழ்வு (இறைவாழ்வு) இதுவேதான்.

இதற்கு சமயவாழ்வு இன்றியமையாதது. சமயம் மனிதனை இறைவனுடன் ஒன்றித்து அன்பு வாழ்வை வழிநடத்தும். (சம் + அயம் = ஒன்றித்துப்போதல்). எங்கே, இந்த தந்தை, சகோதரன், சமூகம் என்ற ஒன்றிப்புக்கு வாய்ப்புக் கிடைக்கும்? தேவ ஆலயத்தில்தான் உருவாக்கப்படுகிறது. யேசு, ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, தேவாலயத்தில் போதகத்தைத் தொடங்கினார் அன்றோ! (தேவ + ஆ + லி + அயம் = தேவன் முன் கட்டுப்படுத்தி அடங்கிப்போதல்). அதாவது தன்னிலுள்ள கெட்ட இயல்புகளை அவன்முன் அடக்கி அந்நிலையில் அவன் அருளை இரந்து அவனிடம் சரணடைந்து நாம் ஒரு மனமும் ஒரு வாழ்வுமுடைய சக வாழ்வு பெறுவோம்.

இங்ஙனம் ஒன்றித்து வாழும் வாழ்வுக்கு அடி அத்திவாரமானது விசுவாசம் என்னும் புண்ணியம். இது தேவ சம்பந்தமான புண்ணியம். விசுவாசம் என்றால் 'முற்று முழுதாக முழு மனதோடும் முழுச் சத்துவத்தோடும் முழுஆன்மாவோடும் இறைவனிலே தங்கி வாழ்தலாகும். (வி + சுவஸ் + அம் = நன்றாகத் தங்கியிருத்தல்). ஆனால், 'நான்', 'எனது' என்னும் அகந்தையால் மனிதன் இறைவனுக்கு எதிரியாகி சாத்தானுக்கு அடிமையாக மாறுகிறான். இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவே கடவுள் மனிதனானார்—மீட்புப்பணி புரியத் தன்னைத் தாழ்த்தினார். அன்பின் மேலீட்டால் இவ்வித திட்டத்துக்குத் திருவுளங் கொண்டார்.

ஏன்? மனிதன் அருளை இழந்தான் — இருளில் வாழ்கிறான்—விண்ணரசை உணரமுடியாதவனாயிருக்கிறான். யேசுவைப்போல் இறைவனும் மனிதனுமான ஓர் அற்புதப் பிறவி இதுவரை பிறக்கவில்லை. பிறந்த மதத்தலைவர்கள் யாவரும் மனிதர்களே மாத்திரம். ஆனால் மனிதர்களுள் தேவர்களாக அதாவது தேவனின் நிழல்களாகக்கூடிய அளவு, கடவுளைத்தேட வழிகாட்டியவர்கள். உலகம் அறிந்த

பேருண்மை "யேசு ஒருவர்தான் விண்ணக வீட்டையும் வீட்டின் தந்தையையும், அவரை அடையும் வழியையும் நேரே கண்ட இறைமகனாக எங்கள் மத்தியில் வாழ்ந்தார். அவர் போதித்தவைதான் நற்செய்தி என்னும் சுவிசேஷம். (சு+வி+சேஷ்+அம்=அதி சிறந்த நவமான செய்தி). யேசுதான், கெட்டுப்போன—மதி கெட்ட மனுக்குலத்துக்கும் 'உலகம்' என்னும் மாய்கைக்கும் இடையில், ஒளியும், உண்மையும், வாழ்வும், வழியும், உயிருமான உடன் பிறப்பாய் எங்களுக்காகப் பரிபூரண பரித்தியாகியானர். அப்படிப்பட்ட அன்பின் தெய்வத்தை மிருகத்தன மான சுயநலக்கும்பல் கொடும்பாவியாகக் கடத்திச் சென்று சிலுவையில் அறைந்து கொன்றதென்றால் மனிதனின் கொடுமையை அளக்க முடியுமா ?

மற்றப்பக்கம் ஒளியை உலகம் புறக்கணித்துவிட்டு வாழ்வாங்கு வாழ வழி யறியாது வன்செயலும் உரிமை மறுப்பும் கொலையும் கொள்ளையும் இழைத்துக் கொண்டு சமாதானத்தைத் தேடி அலைகிறது. கையிலே வெண்ணெயை வைத் துக்கொண்டு ஊரெல்லாம் காலாகாலமாய் அலைகிறது. பரிதாபம்!

கிறிஸ்தவர்கள் கிறிஸ்து கொண்டுவந்த சமாதானத்தை அவருடைய நற் செய்தி வார்த்தைகளின் மதிப்பீட்டில் வாழ்விக்கப் பிரயத்தனம் செய்கிறார்கள். இதுவே எமது மேய்ப்புப் பணியாகும். குறிப்பாக, 'பணிசெய்யவே உலகுக்கு வந்தேன்' என்ற யேசுவின் வார்த்தைகளைத் தம் விருதுவாக்காகக் கொண்டு 'சேவை' செய்து அதன்வழி உலகுக்கு யேசு குறிப்பிடும் அமைதி வாழ்வைக் கொடுக்க அயராது உழைக்கிறார்கள். சேவை, 'சேவ்' Serve என்னும் இலத்தீன் மொழியின் மூலத்தின் திரிபாகி வடமொழியில் 'சேவை' என்றாயிற்று. இது பலபொருள் தரும் ஒரு சொல். ஊழியம்—வழிபாடு—ஓதுதல்—தரிசனம்—உப சரணை—மகிமை—கீழ்ப்படிதல் என்றின்ன கருத்துடையது. சேவைமகத்துவமானது.

சேவையைச் செவ்வனே செய்து உலகில் சமாதானத்தைத் தழைக்கச்செய்ய, சமாதானத்தின் அரசியும் அருள் வரங்களின் மத்தியஸ்தியும் கடவுளால் புதிதாக வார்க்கப்பட்டவருமான மாசில்லாத புதிய ஏவாளாகிய மரியன்னையின் தலை மையில், அவளுடைய மனப்பான்மையில் சேவையே தங்கள் பணியாகவும், செபமே தங்கள் மூச்சாகவும் (மூச்சு=காற்று) கொண்டு உழைக்கும் மரியாயின் சேனை என்னும் பேரணி, 1936இல் மரியாயின் அடைக்கலத்திலும் வல்லமையிலும் பூரண விசுவாசம்கொண்ட மகா வந்தனைக்குரிய J. A. கியோமார் ஆயர் அவர் களின் நன்முயற்சியால் அடியிடப்பட்டது வரலாறு மிக்க நிகழ்ச்சியாகும். 'தாயின்றி வாழ்வில்லை'.

இன்று ஏறக்குறைய யாழ். மறைமாவட்டத்தில் இளைஞர், வளர்ந்தோ ராக 1400 ஊழிய 4500 செப அங்கத்தவர்கள் பணிக்களத்தில் தொண்டாற்றுகிறார் கள். இவர்கள் ஆலயவழிபாடு, செபம், அருட்சாதனங்கள், குடும்ப சமாதானம், சந்தித்து சமாதானம் செய்தல். மறையறிவு ஊட்டல், சரீர உதவிபுரிதல், புரிந் துணர்வை ஆக்கல், சமூகசேவை இன்னோரன்ன சேவைகளைத் தொடர்ந்து செய்து குடும்பத்தில் தனிவாழ்வில் சமூகத்தில் சமாதான வாழ்வைச் சுவைக்கச் செய்து இன்புறுகிறார்கள்.

பொன்விழா: ஆன்மஇயக்குனர், சேனையார், விண்ணகம் சென்ற சேனையா ருக்கும் சேனையால் நல்வாழ்வில் திளைப்போருமாகிய யாவருக்கும் நன்றி கூறும் நல் விழாவாகவும், எதிர்வரும் காலத்தில் மேலும் சேவையில் வளர ஊக்குவித் தும் அருள்பாலித்தும் பயனளிக்கும் பொன்விழாவாகவும் மலரட்டும்.

"சேவை பெருகிச் சமாதானம் பூத்திட
பூவை யணைப்பாள் தாய்"

இளவாலை
18–2–86

வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை
மலராசிரியன்

பொன் மலரை நுகரும் முன்...

''என் இரட்சணியமாகிய சருவேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது''. எனப் பாடி மகிழ்ந்த மாசில்லாத மரியன்னை யின் பாதத்தண்டை ஒரு பொன்விழா மலர் சார்த்துகின்றோம். இவ் அரிய மலர் 'உள்ளக்கமலமடி உத்தமனுர் வேண்டுவது' என்றுங்கு அன்னைக்குகந்த ஒரு மலர் மாலையாகும்.

மற்று, விழாவுக்குச் சிறப்பாக எடுக்கவிருந்த பொருட்காட்சி, கலைக்காட்சி, தெருக்கோலம் நாம் படைக்கவிருந்த ஆசைமேல் ஆசை யெல்லாம் நாட்டின் பதற்றமும் பயங்கரமுமான சூழ்நிலையால் கனவில் நிற்க 'பொன் விழா மலர்' ஒன்றே நனவாகிக் காட்சியளிக்கின்றது.

பரிசுத்த பாப்பரசரின் தானுதிபதி தொடக்கம் அன்புக்குரிய ஆயர் களின் ஆசிச் செய்திகள் தேனாகத் தித்திக்க; அருள்தந்தையரின் அருமை யான கட்டுரைகள் மலரின் இதழ்களாக அழகு சொலிக்க, சேனையாரின் கருத்துரைகள் ஆர்த்தொலிக்கும் வண்டுகளின் கால்களைச் செந்நிறமாக்கும் மகரந்தமாக புதுமணம் வீசும் பொன்மலராக விரிந்து செறிந்து இம்மலர் காட்சியளிக்கிறது.

குறிப்பாக மேதகு சகோ. ஃப்ருங்டஃப் அவர்களின் வரலாறு — சேனை அப்போஸ்தொலியின் சாதனைகள் — சேனையும் சமூக சேவையும் — போட்டி யில் கண்ட புதையல், சேனையாளரும் மறைக்கல்வியும் போன்றவை இம் மலருக்குப் புதுமெருகூட்டும் படைப்புகளெனலாம். எழுதியவர்க்கும் நன்றி.

மலர் வெளியிட மதிப்பிட முடியாத அளவு, ஏவா மகனும் அச்சக உப அதிபர் அ. யோண்பிள்ளை அவர்கள் மூவா மருந்தாக முன்னின்றுழைத் மைக்கு நன்றிமேல் நன்றி நவில்கின்றோம். அச்சகத்தின் செயல்வீரருக்கும் நன்றி. எல்லாம் வல்ல இறைவனின் துணை நிற்க நாம் சிறப்பாக முடித்து வெளியிடக் கிடைத்த அருள்பாலிப்பின் நன்றியுணர்வுடன் பணிந்து நிற்கின்றோம்.

மலர் ஆசிரியர்

இதோ விடய வரிசை ------

			பக்கம்
ஆசிச் செய்திகள்:	1.	யாழ். ஆயரின் செய்தி	
	2.	திருத்தந்தையின் தூதுவரது செய்தி	
	3.	செனுத்துஸ் தலைவரின் செய்தி	
	4.	மன்னார் ஆயரின் செய்தி	
	5.	திருமலை ஆயரின் செய்தி	
	6.	கொமிற்சிய ஆன்ம இயக்குனரின் செய்தி	
	7.	கொமிற்சியத் தலைவரின் செய்தி	
	8.	பொதுநிலையினர் சங்கத் தலைவரது செய்தி	
விடயங்கள்:	9.	வாழ்வதானால் — இறைவார்த்தையில் ...	9
	10.	இலங்கையில் முதற் பிரசீடியம் ...	10
	11.	எப்பொழுதும் கடமையுணர்ச்சியுடன் ...	12
	12.	உண்மையை உரைத்து ...... (பாட்டு) ...	13
	13.	யாழ். மறை மாவட்டத்தில் சேனை வளர்ச்சி ...	14
	14.	பொன்விழாவில் நாம் விரும்புவது ...	16
	15.	அன்புப் பணியிலோர் பொன்விழா ...	17
	16.	மரியாயின் சேனையாளரும் மறைக்கல்வியும் ...	19
	17.	மரியாயின் சேனையை உருவாக்கியவர் ...	21
	18.	இன்றோடு ஐம்பது ஆண்டுகள் (பாட்டு) ...	25
	19.	மரியாயின் சேவையும் சமூக சேவையும் ...	26
	20.	எடல் குயின் ...	28
	21.	மரியாயின் சேனையார் (பாட்டு) ...	31
	22.	மரியாளின் சிறப்பு ...	32
	23.	மனம் மாறுகிறபோது (கதை) ...	34
	24.	பேட்டியில் கண்ட புதையல் ...	35
	25.	சேனையின் வளர்ச்சியும் எதிர்காலமும் ...	38
	26.	சேனையின் உதயமும் வளர்ச்சியும் ...	40
	27.	மரியாயின் சேனைப் பாதுகாவலர்கள் ...	43
	28.	சேனையாரின் அர்ப்பணிப்பு ...	44
	29.	தேவதாயின் பாதையிலே ...	47
	30.	செபமும் சேவையும் சேனையரின்... (பாட்டு) ...	49
	31.	மரி. சே. சே. நா. பெ. இன்பங்கள் ...	50
	32.	மரி. சே. அப்போஸ்தல பணியும் ...	52
	33.	ஊழியம் (கதை) ...	57

மரியாயின் சேனையின் விருதுக் கொடி

VEXILLUM LEGIONIS

கடவுளின் திருவுளத்தை எதிர்ப்பவர்களே நம் எதிரிகள். எனவே இவர்களை எதிர்த்துப் போராட கடவுளின் போராயுதங்களை சேனையார் அணிந்து கொள்ளவேண்டும். வெற்றிவாகை சூடும் உரோமைப்படையின் பெயர் மரியாயின் சேனைக்குச் சூட்டப்பட்டுள்ளது. உரோமைப்படை பிரமாணிக்கம், வீரத்தன்மை, கட்டுப்பாடு, விடாமுயற்சி, வெற்றியார்வம் முதலிய பண்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டானது. இவ்வீரப்பண்புகளைச் சேனையார் கொண்டிருக்க வேண்டும்.

இந்த உண்மையை வலியுறுத்தவே சேனையின் விருதுக்கொடி பண்டைக்கால உரோமப்படையின் விருதுக்கொடியைப்போல் அமைக்கப் பெற்றது. அதன் உச்சியில் கழுகுக்குப் பதில் தூயஆவியின் சின்னமான மாடப்புறு. அதன் கீழ் தலைவியான அமலோற்பவ அன்னை—உலகத்தை வெல்லும் இலட்சியத்தைக் குறிக்க பூகோள உருண்டையும் உண்டு.

யாழ்
ஆயரின் ஆசிச் செய்தி

இலங்கையில் மரியாயின் சேனை, மதிப்புடன் நினைவுகூரப்படும் அருள்திரு. ஜே. ஏ. இராஜநாயகம் அவர்களால் 1936ஆம் ஆண்டு யாழ். மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. முதல் மரியாயின் சேனைப் பிரசீடியத்தை அவர் பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் 1936, மாசி மாதத்தில் நிறுவினார். ஆகவே இலங்கையில் சேனைப் பொன்விழா முதலில் யாழ். மறை மாவட்டத்திலேயே கொண்டாடப்படுவது பொருத்தமானதே.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக மரியாயின் சேனை இம் மறைமாவட்டத்தில் புரிந்த சிறப்பான மறைப்பணிக்காக அதைப் பாராட்டுவதுடன், சேனையின் மூலம் இம் மறை மாவட்டத்தின் மேல் இறைவன் பொழிந்த சகல நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றி கூறுகிறேன். சேனையின் வழியாக தேவதாயாரின் பக்தியும் மறைமாவட்டத்தில் அதிகரித்துள்ளது. எனவே, கடந்த ஐம்பது ஆண்டுகளாக சேனையின் மூலம் மறை மாவட்டத்துக்கு அவள் பெற்றுத் தந்த அருள் வரங்களுக்காகத் தேவதாயாருக்கும் நன்றி கூறுகின்றோம்.

எமது திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ''2ஆம் வத்திக்கான் சங்கத்துக்கு 20 ஆண்டுகளின்பின் திருச்சபையிலும் உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்'' என்பதையே 1987 இல் நடைபெறப்போகும் ஆயர் பேரவையின் மையக் கருத்தாகக் குறித்துள்ளார். தற்போது மறைமாவட்டத்தில் பொதுநிலையினரின் மறைப் பணியில் மரியாயின் சேனை முக்கிய இடத்தை வகிக்கின்றது. யாழ். மறைமாவட்டத்தில் சேனையின் பொன்விழா கொண்டாடப்படுவது மறைமாவட்டத்திலுள்ள சகல பங்குகளிலும் சேனை விருத்தியை நாம் அனைவரும் ஊக்குவிப்பதற்கு ஒரு நற் சந்தர்ப்பமாயிருக்க வேண்டும். வருங்காலத்தில் மறைமாவட்டத்திலுள்ள இளைஞரை மரியாயின் சேனைக்கும், பிற பொதுநிலை மறைப்பணிச் சபைகளுக்கும் கவர்ந்திழுப்பதற்கு விசேட முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென வற்புறுத்த விரும்புகிறேன்.

மரியாயின் சேனையினது மறைப் பணியை இறைவன் ஆசீர்வதிப்பாராக. தேவதாய் அதன் தவறாத வழிகாட்டியாக இருந்து வருவாளாக.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
11-2-86

திருத்தந்தையின் தூதுவரது

ஆசிச் செய்தி

இலங்கையில் மரியாயின் சேனையின் பொன்விழா கொண்டாடப்படும் இவ்வாண்டில், இலங்கையில் முதன் முதலில் சேனை நிறுவப்பட்ட இடமாகிய யாழ்ப்பாணத்தின் கொமிற்சியத்துக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இது போன்ற ஒரு விழா கடந்த காலத்தை உணர்ச்சிப்பாங்கான விதத்தில் நினைவூட்டும் ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல; இது ஒரு விசேட திருவருளின் காலமுமாகும். கடந்த காலத்தைப்பற்றிச் சிந்திக்கும்போது, எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே சிந்திக்கிறீர்கள். கடந்த காலத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்பவை, எதிர்காலத்தையும் அதன் சவால்களையும் எதிர் நோக்குவதற்கு வேண்டிய வளத்தையும், வலிமையும், ஞானத்தையும் உங்களுக்கு அளிக்க வல்லன.

இக்காலத்தின் விசேட அருளினால் வலுவூட்டப்பெற்ற நீங்கள் இன்னும் முழுமையாக மரியாளைப் பின்சென்று "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" (அரு. 2 : 5) என்ற அவளது கனிவான தூண்டுதலை ஏற்றுக்கொள்வீர்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் காலம் மாறிவிட்டது. இன்னும் மாறிக்கொண்டேயிருக்கிறது. சேனையின் அடிப்படை மறைப்பணி எக்காலத்துக்குமுரியது, முறைப்படி யமைந்தது. எனினும் அதன் அணுகு முறைகளில் சில திருத்தமைவுகள் செய்யவேண்டியிருக்கும்.

இந்தச் சீரமைவுகளில் யேசுவே பேசுகிறார். மரியாளைப்போல் நாம் அதனைச் செவிமடுப்போம். அவள் தனது காலத்தில் அவை பற்றிச் சிந்தித்ததுபோல் நாமும் சிந்திப்போம்.

இறைவன் தனது அன்னையும் எமது அன்னையுமான மரியாளின் பரிந்துபேசுதலால் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக, நான் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து இன்னும் பல ஆண்டுகள் நீங்கள் மறைப்பணி புரியவேண்டுமென வாழ்த்துகிறேன்.

+ அம்புறோஸ் டி பவுலி
பாப்பரசரின் தூதுவர்

செனாத்துஸ் தலைவரின் ஆசிச் செய்தி

இலங்கையில் மரியாயின் சேனை நிறுவப்பட்டதன் பொன்விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த எனது சேனைச் சகோதரருக்கு இச்செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பாண்டியன்தாழ்வில் சேனையின் முதற் பிரசிடியம் ஆரம்பித்த நாள்தொட்டு ஏனைய மறைமாவட்டங்களில் அது படிப்படியாக வளர்ச்சியுற்றதுடன், சேனை மனப்பான்மைக்கேற்ப, இலங்கையில் திருச்சபையின் மறைப்பணியைப் பொறுத்தமட்டில், அமைதியான முறையிலென்றாலும் சேனை பெருமளவில் பங்குகொண்டுள்ளது என்பது யாவருமறிந்ததே. பங்குகளில் குருவுக்கு பெருந்துணையாக இருந்ததுமட்டுமல்லாது, எத்தனையோ பொதுநிலைப் பணியாளரின் பயிற்சிக்களமாகவும் சேனை விளங்கியுள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக, வீடுகளை, வைத்தியசாலைகளை, பிற நிறுவனங்களை எண்ணற்ற முறை தரிசித்ததன் பயனாக, அவநம்பிக்கையில் மூழ்கியிருந்த எத்தனை பேருக்கு ஆறுதலளிக்கப்பட்டதென்றோ, இருளில் தடுமாறிய எத்தனை ஆன்மாக்களுக்கு நம்பிக்கை ஒளி கிடைத்ததென்றோ கணக்கிடுவது கஷ்டம். நல்ல பலன் கிடைக்கவில்லை யென்று அவநம்பிக்கை கொள்வது சேனையின் வழக்கமல்ல. கஷ்டங்களைப் பொருட்படுத்தாது இறைவனுக்கும் மனிதனுக்கும் பணிசெய்வதே அதன் மரபாகும். இறைவன் தாம் விரும்பியபடி பயன்படுத்துவதற்கு நாம் இசைந்து கொடுக்கும் கருவிகளாக இருக்கவேண்டும். இதுதொடர்பாக செய்யப்பட வேண்டியது அதிகம் உண்டு எனக் கருதுகிறேன்.

பொன்விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் இந்த உன்னதமான இயக்கத்துக்காக மூவொரு கடவுளுக்கு நன்றி கூறுவோம். அதே சமயத்தில் எமது தவறுகள், அசமந்தங்களுக்காக மன்னிப்புக்கேட்போம். எமது மோட்ச இராக்கினியின் புகழைப் பாடி, இந்த மறைப் பணியின் மூலம் எம்மைக் கிறிஸ்துவினண்டையிற் கொண்டுவர வேண்டுமென்று அவளிடம் மன்றாடுவோம்.

இக்கட்டான ஒரு சூழ்நிலையில் மறைப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவரும் சகோதரரே, உங்கள் வீரத்தையும் விசுவாசத்தையும் போற்றுகின்றேன்.

எதிர்வரும் ஆண்டுகளில் புத்தார்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் மறைப்பணி புரிய இறையருள் உங்களுக்குத் துணைநிற்க வேண்டுகிறேன். கலக்கமுற்றிருக்கும் யாழ். குடாநாட்டில் இது அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவருவதற்குத் துணைபுரிவதாக.

உங்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

நியூட்டன் பெர்னான்டோ
தலைவர்
இலங்கை செனாத்துஸ்

மன்னார் மறைமாவட்ட ஆயர்

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின்

ஆசிச் செய்தி

இலங்கையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில், எமது தாய்த் திருநாட்டில் இறையரசைப் பரப்புவதற்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள பெருந்தொகையான சேனையாளர்கள் மூலமாக இறைவன் புரிந்துள்ள அருஞ் செயல்களை நினைந்து உங்களுடன் நானும் பெருமகிழ்வடைகின்றேன். காலத்துக்குக் காலம் தோன்றிய சவால்களை, சோதனைகளை எல்லாம் எதிர்த்து நின்று, 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின்னுள்ள திருச்சபையில், சக்தி வாய்ந்த அப்போஸ்தலிக்க இயக்கமாகச் சேனை மிளிர்ந்துள்ளது. முதலாகவும் முக்கியமாகவும் தனது அங்கத்தினர்களுக்கு ஒரு உறுதியான ஆன்மீக உருவாக்கத்தைக் கொடுப்பதற்கு சேனை என்றுமே தவறியதில்லை. இந்த இன்பமான சந்தர்ப்பத்தில், சேனையாளர் அனைவருடனும் சேர்ந்து நானும் நற்செய்தியாளர் புனித லூக்காஸ் தரும் மரியாளின் பாடலில் உள்ள, '' என் ஆன்மா ஆண்டவரைப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராகிய கடவுள்மீது என் உள்ளம் பூரித்திருக்கின்றது '' என்று பாடி இறைவனைப் புகழ்ந்து நிற்கிறேன்.

+ தோமஸ் சவுந்தரநாயகம்
மன்னார் மறைமாவட்ட ஆயர்.

திருமலை—மட்டுநகர் ஆயர்

பேரருட்திரு. யோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின்

ஆசிச் செய்தி

இலங்கையில் விசேடமாக யாழ். மறைமாவட்டத்தில், பாண்டியன்தாழ்வில் காலம் சென்ற அருட்திரு. ஜே. ஏ. இராசநாயகம் அ. ம. தி. அடிகளாரால் கிளை நாட்டப் பட்டு அகில இலங்கை முழுவதும் பரந்து அரும் பெரும் பணிகளை ஆற்றி வரும் மரியா யின் சேனை பொன்விழாக் காண்பதையிட்டு நான் இறைவனுக்குப் பெரிதும் நன்றி கூறுகிறேன்.

மரியாயின் சேனைக்கு முதன் முதல் இலங்கையில் அடிக்கல் நாட்டிய அருட்தந்தை இராசநாயகத்தையும் அவருடன் இணைந்து சேனையின் பணியில் தம்மை அர்ப்பணித்த அங்கத்தவர் அனைவரையும் யாழ். மறைமாவட்டம் பெருமையுடனும் நன்றியுடனும் நினைவுகூராமல் இருக்க முடியாது.

மரியாயின் சேனையின் பொன்விழாக் காணும் சேனையாளர் உங்கள் அனைவருட னும் சேர்ந்து நானும் மகிழ்ச்சியடைகிறேன். மரியாளின் சேவையில் சேனையாளர் பல வித இன்னல்கள் மத்தியில் மக்கள் வழியாக இறைவனுக்கு அளப்பரிய சேவை செய்து மரியாளை மகிமைப்படுத்தி இருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நானும் பல சமயங் களில் அவர்களோடு ஐக்கியப்பட்டிருக்கிறேன் என்பதை நினைத்து அவற்றையெல்லாம் எனது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். மரியாளுக்கும், இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன்.

எதிர்வரும் காலத்தில் சேனையாளர் தத்தம் கருத்துக்களையும் அபிப்பிராயங்களை யும், ஒதுக்கிவிட்டு "மரியாள் வழியாகக் கிறிஸ்துவிடம்" என்பதையே மையமாகக் கொண்டு செயற்பட முனைவார்களாக. மரியாளின் நோக்கத்தையே தங்கள் நோக்க மாகக் கருதி மரியாளின் கொடியின் கீழ் அவளின் அன்பையும் விசுவாசத்தையும் துணை யாகக் கொண்டு கிறிஸ்துவின் மறையுடலைக் கட்டியெழுப்பிப் பேணிக் காக்க முற்படு வார்களாக.

வாழ்க மரியே,
வளர்க அவளின் சேனை.

+ யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை
திருமலை—மட்டுநகர் ஆயர்.

கொமிற்சிய ஆன்ம இயக்குநரின்

ஆசிச் செய்தி

2-ம் வத்திக்கான் சங்கம்தான் பொது நிலையினருக்கு உரிய இடத்தையும் மதிப்பையும் கொடுத்தது. அதன் பின்புதான் பொது நிலையினர் தமக்கான அழைப்பை உணர்ந்து செயற்படத் தொடங்கினர் என்ற நமது எண்ணத்தைத் திணறவைக்கிறது பொன் விழாக்காணும் மரியாயின் சேனை.

வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே தன் அப்போஸ்தலிக்க சேவையைத் தொடங்கிய பொது நிலையினரின் சபைகளிலே முன்னணியிலே நிற்பது மரியாயின் சேனையாகும்.

செபத்தின் மூலமும் சேவையின் மூலமும் தன் அங்கத்தவர்களைப் புனிதப்படுத்தும் நோக்கோடு செயற்படும் யாழ் மரியாயின் சேனை, தன் சேவையில் முதிர்ந்து 50 ஆண்டுகளைக் கண்டு விட்டமை பெரிய சாதனையாகும். மரியாயின் சேனையின் ஆன்ம இயக்குநராக பொறுப்பை எற்று மிகவும் குறுகிய காலத்தில் 50 ஆண்டு நிறைவிற்கான என் ஆசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் இந்தப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பே மரியாயின் சேனையின் அயராத ஊழியத்தை நன்கு அறிவேன். பொது நிலையினரின் அப்போஸ்தலிக்க சேவையில் முன்னணியில் நிற்கும் மரியாயின் சேனை இன்னும் வளர வேண்டும்; தன் சேவையில் தளராது உயர்ந்து நிற்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அகில உலக சமாதான ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்ட இந்த ஆண்டில் பொன்விழாக் காணும் உங்களுக்கு என் ஆசிச் செய்தி உங்களைச் சமாதானத்தின் தூதுவர்களாக அழைப்பதாகும். மரியாயின் சேனையின் நோக்கம்பற்றி உங்கள் கைநூலில் கொடுக்கப்பட்ட பகுதியில் 11-ம் பத்திநாதை பாப்பரசர் 1922-ல் விடுத்த "கிறிஸ்து நாதரின் சமாதானம்" என்ற நிருபத்திலிருந்து அவர் தரும் சமாதானத்திற்கான வார்த்தைகளைத்தான் உங்களுக்கு நான் திரும்பக் கூறிவைக்கிறேன். "கிறிஸ்து நாதரின் இராச்சியத்தை நிலை நாட்டவும் பரப்பவும் விசுவாசிகள் பாடுபடுவதால் உலகில் சமாதானம் நிலவத் தொண்டு புரிபவர்களாகவும் விளங்குவார்கள்."

நீதியற்ற சமுதாயத்தில் நிம்மதியற்ற சூழ் நிலைகளில் வாழும் உங்கள் பணி சமாதானத் தூதுவர்களாக விரைவதாகும். சமாதானத்தின் சேவை செய்ய விரையும் உங்களுக்கு "விடாதே" என்ற உங்கள் விருது வாக்கைத்தான் கூறி வழியனுப்புகிறேன். உங்கள் பணி சிறக்கட்டும் மரியாள் புகழ் பரவட்டும்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்,

A. C. கிறிஸ்தோப்பர்

கொமிற்சியத் தலைவரின் செய்தி

மாமரியின் பெயரால் மறைப்பணி புரியும் மரியாயின் சேனை எமது நாட்டில் நிறுவப்பட்ட பொன்விழாவை இன்று காண்கின்றது. இந்த ஐம்பது ஆண்டு நிறைவு எமது உள்ளத்துக்கு நிறைவுதரும் நிகழ்ச்சி மட்டுமல்ல, இம் மறை மாவட்ட பொது நிலையினரின் மறைப்பணியில் ஒரு மைல் கல்லுமாகும்.

முதல் சேனைப் பிரசீடியம் யாழ்நகரில் ஆரம்பிக்கப் பட்டதென்பது எமது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகின்றது. இந்த சேனையை நிறுவி அதைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்துவந்த ஆயர்கள், குருக்கள், கன்னியர், எமது மூத்த சேனையார் அனைவருக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது ஆர்வமும் உழைப்புமே சேனையின் இன்றைய வளர்ச்சிக்கு மூலகாரணமாகும் என்பது தெளிவு.

பொதுநிலையினரின் பணிக்குத் திருச்சபையில் முக்கியத்துவம் அதிகரித்துவரும் இந்நாட்களில் பொதுநிலையினரை மறைப்பணியில் ஈடுபடுத்துவதற்குச் சேனைக்கு ஈடான நிறுவனம் வேறொன்று இல்லையென்றே சொல்லலாம். ஆகவே சேனை பொதுநிலையினரான எமக்கு இறைவனால் தரப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும்.

ஐம்பதாண்டு எல்லையில் நிற்கும் எமக்குக் கடந்தகால நிகழ்ச்சிகளும் அனுபவங்களும் எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்குத் துணை புரியலாம். ஆனால், மாறிவரும் உலகில் எமது பணிகள் புதுமெருகு பெறவேண்டுமானால், புதிய அணுகுமுறைகளைக் கையாளவேண்டும். அறிவுரீதியான திட்டம் வகுத்து செயற்படவேண்டும்.

ஆனால் சேனைப்பணி இவ்வுலகிற்கு மேற்பட்டது. திருச்சபையின் பணியோடு இணைந்தது. சேனைச்சேவை செய்பவரையும் பெறுபவரையும் ஒருங்கே ஆன்மீக நெறியில் வளர்க்கின்றது. இறையருள் கூட்டுமிடத்தேதான் அது வெற்றிபடைய முடியும். ஆகவே இறையரசுக்காக மரியாயின் கருவிகளாய்ச் செயற்படும் நாம், எம்மைத் தகுந்த கருவிகளாக ஆக்கிக் கொள்வதற்கு, எம்மைப் புதுப்பித்துக் கொள்வதற்கு இந்தப் பொன்விழா ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைகின்றது.

ஆகவே இச்சந்தர்ப்பத்தில் ஐம்பது வளமான ஆண்டுகளை எமக்கு அருளிய இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

இன்னலும், ஏக்கமும் நிறைந்த இக்காலத்திலும், எதிர்வரும் ஆண்டுகளிலும் இறைவனின் அருளும், தேவ அன்னையின் ஆசியும் எம்மை வழிநடத்த வேண்டுமெனப் பிரார்த்திப்போம். எமது நாட்டில் கவிந்துள்ள இருள் நீங்கி, அன்பும் சமாதானமும் நிலவ எமது சேனைப்பணியும் ஒரு கருவியாக இருக்கவேண்டுமென இறைவனை வேண்டுவோம்.

வயலற் இம்மானுவல்
(தலைவர்)
யாழ். கொமிற்சியம்.

யாழ். மறைமாவட்டத்தின்

பொதுநிலையினர் சங்கத் தலைவரின்

வாழ்த்துச் செய்தி

கத்தோலிக்கு திருச்சபையில் தனித்துவமான இயக்கமான 'மரியாயின் சேனை' பொதுநிலையினரின் உலகளாவிய ஓர் இயக்கமாகும். சிறப்பாக யாழ். மறைமாவட்டத்தின் மரியாயின் சேனைப் பொன் விழாவுக்கு ஆசியுரை அளிப்பதற்குப் பொதுநிலையினரின் சங்கத் தலைவர் என்ற நிலையில் எமக்குக் கிடைத்த வாய்ப்பையிட்டுப் பெருமையும் பேரானந்தமும் கொள்ளுகிறோம்.

மனுக்குலத்தின் மீட்பிற்காகத் திருச்சுதனைத் தந்த மாசற்ற மரியன்னையின் சேவைக்கு ஒரு பொன்மலர். எமது மரியாயின் சேனையாளர் இந்த மலரை அர்ப்பணித்துள்ளார்கள்.

தமது வாழ்வைப் புனிதப்படுத்துவது மட்டுமன்றி ஏனையோரையும் தமது செபங்களாலும், முன்மாதிரிகை வாழ்வாலும் திருநெறிப்படுத்தி வரும் சேனையாளர் யாழ். மறைமாவட்டத்தில் ஐம்பது நிறையாண்டுகள் செய்த தூய பணியின் நினைவாக இப் பொன் மலரைத் தந்துள்ளார்கள். அன்னாரது மகத்தான பணியைப் பாராட்டி ஆசியுரை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

இன்னலும், ஏக்கமும், பயங்கரமும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் எமது ஆறுதலும், அரவணைப்பும், அடைக்கலமுமான தேவ அன்னையின் அருளை இரந்து அவர் கமல மலர்ப் பாதத்தில் இம்மலரைக் காணிக்கை வைப்பது மகிழ்ச்சி தரும் பொருத்தமான நிகழ்ச்சியாகும்.

அன்பான சேனையாளருக்கு இதயங் கனிந்த வாழ்த்து.

J. P. C. பீலிப்ஸ்
யாழ்ப்பாணம்

மரியாயின் சேனையாரின் முதற் பணிக்களம்

முதலில் ஓலைக்கொட்டிலாக இருந்து
பின்னர் ஆரோக்கியநாதர் கோயிலாக
உருவெடுத்த கட்டிடத்தின் தோற்றம்.

இலங்கையில் மரியாயின் சேனை முதன் முதல்
ஆரம்பிக்கப்பட்ட பாண்டியன்தாழ்வு
புனித அன்னம்மாள் ஆலயம்.

வாழ்வதானால் — இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டு வாழ்

— அருள்திரு இருதயராஜ்

இவ்வுலகில் ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்கு உணவு, நீர் தேவை. இருப்பினும் இவை யின்றி ஒரு சில நாட்கள் உயிரோடு வாழ்ந்து விடலாம். ஆனால் சுவாசமின்றி ஒருவன் ஒரு நிமிடம்கூட வாழ முடியாது. மனித வாழ்வுக்கு சுவாசம் இன்றியமையாதது. இதைவிட மேலாக ஒரு மனிதனது ஆன்மீக வாழ்வுக்கு இவ்வுலகிலும் மறுஉலகிலும் என்றும் வாழ்வதற்கு சுவாசத்திற்கு முன் இணைந்த ''வி'' அதாவது ''வி-சுவாசம் இன்றியமையாதது. ஒரு கிறிஸ்தவனுக்கு ''வி-சுவாச வாழ்வு தவிர்க்கமுடியாதது. வி-சுவாச வாழ்வுதான் கிறிஸ்தவம். விசுவா சம் இல்லையென்றால் கிறிஸ்தவம் இல்லை. ஏனெனில் இயேசுவின் மீதுள்ள விசுவாசம் மட்டுமே நமக்கு வாழ்வு தரக்கூடியது என்று வேதம் கூறுகின்றது. ''மகனில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ் வைப் பெறுவர் (அரு. 3:15). இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தால் மட்டுமே ஒருவன் இறைவனுக்கு ஒப்புடையன் ஆவான் (கலா. 2:16). விசுவாசத்தின் வழியாக மீட்பு அடைந் திருக்கிறீர்கள் (எபே. 2:8).

மறு உலகில் வாழ்வதற்கு மட்டும் விசுவா சம் தேவையென்று கருதக்கூடாது. இவ் வுலகிலும் மறு உலகிலும் உயிரோடு வாழ்வ தற்கு விசுவாசம் இன்றியமையாதது. அப் படியாயின் இத்தகைய விசுவாசத்தை அளிப் பவர் யார்? புனித சின்னப்பர் எபேசிய மக் களுக்குச் சொல்லுகிறார், ''இது இறைவனின் நன்கொடையே'' (எபேசி. 2:8) இறைவன் தம் மக்களுக்கு வழங்கும் மாபெரும் வரப் பிரசாதம் இந்த விசுவாசம்.

இந்த விசுவாசத்தை இறைவன் மக் களுக்கு வார்த்தையின் அடித்தளத்தில்தான் வழங்கு கிறார். இந்த உண்மையை இறைவாக்கின ரான இசையாஸ் முறையிடுவதாகப் புனித சின்னப்பர் சுட்டிக் காட்டித் தெரிவுபடுத்து கிறார். ''ஆண்டவரே நாங்கள் அறிவித்த தைக் கேட்டு எவன் விசுவசித்தான்'' அப் படியானால் அறிவிப்பதைக் கேட்பதால்தான் விசுவாசம் உண்டாகிறது என்பது தெளிவு (உரோ 10:16-17).

இறை வார்த்தை அறிவிக்கப்படுகிறது. அதைக் கேட்பதால் விசுவாசம் கொடை யாகக் கொடுக்கப்படுகிறது. இறை வார்த் தையைக் கேட்டுச் சிந்தித்து வாழும் பொழுது முடிவில்லா வாழ்வு கிடைக்கின் றது. அருளப்பர் இறைவாக்காகச் சொல்லு கிறார்: ''உண்மையிலும் உண்மையாக உங்க ளுக்குச் சொல்லுகிறேன். எனது வார்த்தை யைக் கேட்டு என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசம் கொள்பவன் முடிவில்லா வாழ் வைக் கொண்டுள்ளான்'' (அரு. 5:2)

இவண் விசுவாசத்தின் மூன்று நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இம்மூன்று நிலைகளுக்கும் அடிப்படையாக விளங்குவது இறைவார்த்தையே.

I. ஆரம்ப விசுவாசம்: இறை வார்த்தை யைக் கேட்பதனால்

நம்முள் உருவாகும் ஓர் உணர்வு. அதாவது இறைவன் என்னோடு பேசுகின்றார் என்று உணர்ந்து செவிமடுப்பதாகும். இவ்வுணர்வே ஆரம்ப விசுவாசமாகும் (உரோ. 10:17; அரு. 4:42, 5:24).

II. வளரும் விசுவாசம்: அன்னை மரியாள் போன்று (லூக்.

2:5) இன்று நாமும் கேட்ட இறைவார்த் தையை உள்ளத்தில் நிறுத்திச் சிந்தித்துத் தியானிக்கும் போது அவ்விசுவாசம் வளர் கின்றது இறைவனின் கொடையை இன் னும் ஆழமாக உணரக்கூடியதாக இருக்கும்.

III. செயல்படுத்தும் விசுவாசம்: இறைவார்த் தையில்

வாழ்ந்து காட்டல். இறைவார்த்தையைக் கேட்டுச் சிந்தித்துத் தியானித்து அதன்படி வாழ்தல். இறைவார்த்தையின் அடிப்படை யில் அமைந்த ஒவ்வொரு செயலும் உரம் போன்று அமைந்து பெற்ற விசுவாசத்தை கடின பாறைபோல் உறுதிபெறச் செய்கின் றது. எனவேதான் இயேசு கூறுகிறார்:''நான் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு அதன் படி நடப்பவன் எவனும் கற்பாறையின்மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பா வான்'' (மத். 2:24).

என்றும் நிலைத்திருக்கின்ற முடிவில்லா வாழ்வு வாழ வேண்டுமானால் அது இறை வார்த்தையில் விசுவாசம் கொண்டு வாழ்வ தாகும். ஏனெனில் இறை வார்த்தையின் வாழ்வுதான் முடிவில்லா வாழ்வு தரும். இவ்வுலகில் எத்துன்பங்கள் வந்தாலும் துய ரங்கள் சூழ்ந்தாலும் இன்னல் இடையூறுகள் அலைபோல் எழுந்தாலும் சலிக்காது மனம் தளர்ச்சி அடையாது யோபுவைப் போல், அன்னை மரியாளைப்போல் நாம் இறைவார்த் தையில் விசுவாசம் வைத்து அதன்படி வாழ் வோமானால் நாம் உலகை வென்று (1அரு. 5:5) முடிவில்லா வாழ்வடைவோம்.

இலங்கையில் மரியாயின் சேனையின் முதற் பிரசீடியம்

"மரியாயின் சேனையின் அமைப்புமுறை மிகச் சிறந்ததொன்றாகும்" இவ்வாறு கூறியவர் திருத் தந்தை 23-ம் அருளப்பர். 1921-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சேனை, மிகக் குறுகிய காலத்தில் உலகம் முழுவதும் பரம்பிமேலான நன்மைகளைச் செய்து வருவதற்கு அதன் அமைப்புமுறையே காரணமன்றோ. இந்தியாவுக்கு ஆங்கில மாதொருத்தியால் கொண்டுவரப்பட்டுப் பரப்பப்பட்ட இச் சேனை தமிழ்நாட்டில் செழித்தோங்கத் தொடங்கியது. அயல் நாடாகிய இலங்கையிலும் சேனை தன் கிளையைப் பரப்பியது. முதல் யாழ்ப்பாணத்திலுள்ள பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் இலங்கையின் முதற் பிரசீடியமாக 'இரக்கத்தின் மாதா' ஆண்கள் பிரசீடியம் தொடங்கப்பட்டது.

அக்காலத்திலிருந்த யாழ். மறைமாவட்ட ஆயர் காலஞ் சென்ற J. A. கியோமர் அவர்கள் தமது மறைமாவட்டத்தில் மரியாயின் சேனையை தாபிக்க விரும்பி பத்திக் கூட்டங்களின் பரிபாலகராகக் கடமையாற்றியவரும் பாண்டியன்தாழ்வுப் பங்கின் பங்குத் தந்தையுமாயிருந்த அருள் திரு J. A. இராசநாயகம் சுவாமியவர்களை மரியாயின் சேனைக் கிளையை தமது மறைமாவட்டத்தில் தொடக்கும்படி பணித்தார். பத்திக் கூட்டங்களை நடப்பிப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவராயிருந்த சுவாமியவர்கள் ஆயரின் பணிப்பை மிகவும் சந்தோஷமாக ஏற்று சென்னையில் உள்ள மரியாயின் சேனையின் உயர் நிருவாக சபையாகிய 'செனத்துஸ்' உடன் தொடர்பு கொண்டு சேனைப் பிரசீடியம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய கைப் புஸ்தகம், 'தெசரா' முதலிய எல்லா உதவிகளையும் பெற்றார். அக் காலத்தில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் காலஞ் சென்ற திரு. A. S. பிரான்சிஸ் ஒவ் மேரி அவர்களைத் துணைக்கொண்டு சேனை நிருவாக முறைகளையும் ஒழுங்குகளையும் சரிவரத் தெரிந்து கொண்டார். புனித கன்னி மரியாளின் பிறந்த திருநாளுக்கு முதல் நாள் மாலையில் டப்ளின் நகரில் சேனை முதல் ஆரம்பமானது போல் யாழ்ப்பாணத்திலும் முதல் மரியாயின் சேனைப் பிரசீடியம் பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் கன்னி மரியம்மாளின் சுத்திகரத் திருநாளுக்கு முன் தினமாகிய மாசி மாதம் 1-ம் திகதி ஞாயிறு பின்னேரம் 1936-ம் ஆண்டு முதல் பிரசீடியம் தாபிக்கப்பட்டது.

A. S. பிரான்சிஸ் ஒவ் மேரி
தலைவர்

வெவ்வேறு பங்குகளில் மறை பணி புரிந்து வந்த உபதேசிமாரும் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர் சிலரும் பாடசாலை ஆசிரியர்களும் பங்கு மக்களுமாகப் பத்து அங்கத்தினர் முதல் சேர்ந்தனர். முதற் தலைவராக சகோதரர் A. S. பிரான்சிஸ் ஒவ் மேரி அவர்கள் தொண்டாற்றினர். செய்வதைத் திறம்படச் செய்யும் ஆற்றலும் இவரது பிரமாணிக்கமான சேவையும் அங்கத்தவருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையுமூட்டியது. பிரசீடிய ஸ்தாபகரான அருள் திரு. இராசநாயகம் சுவாமியவர்கள் கண்ணும் கருத்துமாயிருந்து புத்திமதியாலும் முன்மாதிரியாலும் அங்கத்தினரை வழி நடத்தி வந்தார்.

'தெசரா' எனப்படும் செபத்துண்டிலுள்ள செபங்கள் யாழ்ப்பாணத் தமிழுக்கு மாற்ற

வேண்டி சென்னை செனுத்தூரசின் உத்தர வோடு காலஞ் சென்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் செபத்தில் மாற்றஞ் செய்யப்பட்டது.

இச் சேனையாளர் யாழ்ப்பாணம் குருநகரி லுள்ள 'திட்டி' என்னும் பகுதியை தமது வேலைக்களமாகத் தெரிந்து கொண்டனர். இங்கு குடும்பங்களைச் சிராக்குதல், வளர்ந் தோர்க்கும், குழந்தைகளுச்கும் திருமுழுக்கு என்னும் அருட் சாதனம் கொடுப்பித்தல் ஞாயிற்றுக்கிழமைக் கடமையை அனுசரிக் கச் செய்தல் முதலிய அரும்பணிகள் நடை பெற்றன.

முத்தையா உபதேசியார்
செயலர்

இப்பகுதியில் சேனை அங்கத்தினரான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர் வளர்ந்தோர்க்கும் சிறுவர்களுக்கும் மறைக் கல்வி வகுப்புகள் நடத்தினர். மறைக்கல்வி கற்பிக்க இடவ்சதியில்லாதபடியால் ஓலை யால் ஒரு கொட்டில் போடப்பட்டது. இக் கொட்டில் அமைப்பு வேலையல் ஆரோக்கிய நாதர் என்ற பெயருள்ள ஆசிரிய பயிற்சி மாணவன் வெகு முயற்சி செய்தபடியால் அவருடைய பெயர் கொண்ட புனிதரின் பேரால் அக் கொட்டில் 'புனித ஆரோக்கிய நாதர் மறைக் கல்விக் கொட்டில்' எனப் பெயர் வழங்கப்பட்டது. விரைவில் புனித ஆரோக்கியநாதர் சுரூபம் ஒன்று அங்கு வைக்கப்பட்டது. மறைக் கல்வி படிப்பிக்கும் இடமாயிருந்த அந்தச் சிறு கொட்டில் நாளடைவில் கொட்டிற் கோயிலாகியது.

ஆச்சரியத்தில் ஆச்சரியம் அந்தக் கோவில் யாழ். குடாநாட்டுமக்களின் பெரிய யாத் திரைத் ஸ்தலமாக மாறியது. இப்பொழுது கல்லாற் கட்டப்பட்ட புனித ஆரோக்கிய நாதர் கோவிலும், ஆரோக்கியநாதர் பாட சாலையும் அங்கு இருப்பது யாவரும் அறிந் ததே. இவ்வளவுக்கும் காரணம் முதற் பிர சீடியம் தான் என்றால் அதன் சேவையின் மகத்துவந்தான் என்னே.

ஓர் ஆலமரம் வளர்ந்து கிளைகளைப்பரப்பி நாலா பக்கமும் விழுதுகளை ஊன்றி பரந்து வளர்வதுபோல முதற் பிரசீடியத்திலிருந்து பல இடங்களுக்கும் சென்றவர்கள் ஆங் காங்கே சேனைப் பிரசீடியங்களை உண்டாக்கி னர் தற்பொழுது யாழ். மறைமாவட்டத்தி லும் மன்னார் மறை மாவட்டத்திலும் நூற் றுக் கணக்கான மரியாயின் சேனைப் பிரசீடி யங்கள் தோன்றி அருந்தொண்டாற்றி வருகின்றன.

தற்பொழுது பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயப் பங்குத் தந்தை யாகிய அருள் திரு. யோசவ் மேரி சுவாமி யவர்களது பேருக்கத்தினால் பிரசீடியம் புத் துயிர் பெற்று மிகவும் திறம்பட இயங்கி வருவது குறிப்பிடத் தக்கது.

ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களை யும் அந்தச் சிறுவன் தியாகஞ் செய்த தாலே ஐயாயிரத்துக் கதிகமானோர் வயிறார உண்டு பசியாறி மகிழ்ந்தனர். இத்தன் மையே எம்மைச் சிறுகாரியங்களில் பரித்தி யாகஞ் செய்தால், அச்சிறு பரித்தியாகங் களை யேசுநாதர் பெரிய காரியங்களாக மாற்றுவார். பல ஆன்மாக்களுக்கு பெரிய பெரிய நன்மை வரத் தக்கதாக அவர் ஆக்குவார். எனவே நாமும் சேனையில் சேர்ந்து சேனை ஒழுங்குகளைப் பிரமாணிக்க மாக அனுசரிப்பதன் மூலம் எமது தியா கத்தை சேனைக்கு அர்ப்பணிப்போம்.

சா. அந்தோனிப்பிள்ளை

எப்பொழுதும் கடமை உணர்ச்சியுடன் பணி ஆற்றல்

சேனையாளன் தன் விவேகம் கற்பிக்கும் அளவுக்கு தன் அன்றாட வாழ்க்கையின் எல்லா அலுவல்களிலும். சேனை மனப்பான்மையுடன் ஒழுகவேண்டும்.

சேனையின் பொது நோக்கத்தை நிறைவேற்றத் துணைசெய்யும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ள எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். பாவத்தின் அதிக்கத்தை ஒழிப்பதும் அதன் அடித்தளங்களைத் தோண்டி நீக்குவதும், அந்த இடத்தில் கிறிஸ்து அரசரின் வெற்றிக் கொடியை நாட்டுவதுந்தான் சேனையின் நோக்கமாம்.

நடுவழியில் உன்னை ஒருவன் சந்தித்து உன்னிடம் நெருப்புக்குச்சியைக் கேட்பான். அவனுக்கு உதவி செய்து அவனுடன் கனிவாகப் பேச சிறிது நேரத்தால் அவன் உன்னிடம் கடவுளைப் பற்றிக் கேள்விகள் கேட்பான். எத்தனையோ கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வேதத்தை அரை குறையாக மாத்திரம் கண்டுபிடித்து அரைகுறையான வேதங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறார்கள். தன் சொந்த ஆன்மாவுக்கு மட்டும் நன்மை செய்யும் தனிச் சொத்தாக, தனது முதுசொப் பொருளாக, எத்தனையோ பேர் கிறிஸ்து வேதத்தைக் கருதுகிறார்கள். அயலாரின் ஆன்மாவைப்பற்றி அவர்களுக்குக் கவலையே கிடையாது. இந்த மனப்பான்மையுடன் நடந்து கொள்வது நம் சமுதாயத்திற்கு ஒரு வழக்கமாகிவிட்டது மாத்திரமல்ல, பழக்கமாகியும்விட்டது என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

இந்த அரைவட்ட கால்வட்டக் கிறிஸ்தவத்தை பரிசுத்த பாப்பு 11ம் பத்திநாதர் எவ்வளவோ வன்மையாகக் கண்டிக்கிறார்.

நாம் கடவுளை முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனதோடும் அன்பு செய்ய வேண்டும் என்பது கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் தந்த கட்டளையாகும்.

நம்மில் அநேகருக்கு இக்கட்டளை செவிடன் காதில் சங்கு நாதமாகவே இருக்கின்றது. சேனை நமக்குக் கற்பிக்கும் இந்தக் கடமைகள், அல்லது ஊழியங்கள் பெரிய பத்திமான்கள் மட்டும்தான் நிறைவேற்றத் தகுந்தவை என்று கருதித் தங்களால் முடியாது என்று சிலர் மறுப்பது முற்றும் தவறான மனப்பான்மையைத்தான் எடுத்துக் காட்டும். இத்தக் கடமைகள் எல்லாக் கிறிஸ்தவர்களும் அநுசரிக்கவேண்டிய அடிப்படைக் கடமைகளாகும். இவை பெரிய பத்திமான்களுக்கு மாத்திரம் தான் உரியன வல்ல. இந்தக் கடமைகளைப் பெரிய பத்திமான்களுக்கென்று ஒதுக்கித் தள்ளிவிடலாம் என்று நினைக்கும் சேனையாளர் கடவுள் தந்த தேவசிநேகக் கட்டளை பிறர் சிநேகக் கட்டளைகளையும் பழுதின்றி அனுசரிக்க முடியாது. இக்கடமைகளில் தவறுபவன் கிறிஸ்தவ பண்பாட்டிலும் தவறுபவனுவான்.

இதையிட்டு பெகி என்னும் ஆசிரியர் கூறுவதாவது. ''நாமெல்லோருமாகத்தான் இரட்சணியம் அடைய வேண்டும். கடவுளிடம் நாம் ஒருமித்துத்தான் செல்ல வேண்டும். பிறரை நம்மோடு அழைத்துச் செல்லாமல் நாம்மாத்திரம் கடவுளிடம் சென்றால் மரியாயின் சேனையார் ஆகிய எம்மைப் பார்த்து என்ன சொல்லுவார் என்பதை மரியாயின் சேனையார் ஆகிய நாம் உய்த்து உணரவேண்டும்.

நம் சகோதரர் ஒவ்வொருவரையும் தனித்தனியாகவும், சமூகமாகவும் நாம் நேசிக்க வேண்டும். இந்த அன்பு வெறும் உணர்ச்சி வேகத்தின் விளைவாக மாத்திரம் இருந்தால் போதாது; அது தகாது. ஆனால் நல்ல கடமையாகவும் திறம்பட்ட ஊழியமாகவும், தன்னலமறுப்பாகவும் இருத்தல் வேண்டும்.

மரியாயின் சேனை அன்புச் சகோதர-சகோதரிகளே! உங்களுடைய பணி எப்பொழுதும் கடமை உணர்ச்சி உள்ளதாக இருக்கட்டும். உங்கள் அனைவரையும் மாதா ஆசீர் வதிப்பாளாக. சிருஷ்டிகரின் மாதா தயவால் உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

T. K. அமிர்தநாதர்

உண்மையை உரைத்து எம்மிடம் சேர்த்திடம்மா

ஆதியில் ஆண் பெண் படைத்த இறைவனனவர்
ஆதாம் ஏவாள் பாவத்தினுல் மோட்சம்தர மறுத்துவிட்டார்
ஆனலும் மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார்
ஆதலால் மோட்சம் மீட்பரால் கிடைக்குமென்றார்

இறைவனின் நாவில் எம் அன்னை உதித்தாய்
இரக்கமற்ற அலகையின் தலையை நீ மிதித்தாய்
இரக்கமே உருவான இறைவன் கொடையானவளே
இவ்வுலகினை மீட்ட மீட்பரின் தாயும் நீரே

புனிதமே நிறைந்த கன்னித்தாய் நீ
புண்ணிய வழியே புவியினில் வாழ்ந்து இப்
புவியினை மீட்ட மகனுடன் சேர்ந்து பணி செய்து
புகழேணியை அடைந்தாய் உன் தியாகத்தாலே

மனுவுருவெடுத்து யேசு பரலோகம் சென்றபின்
மந்த குண சீடருக்குத் துணையாக அன்னையுனை விட்டுச் சென்றார்
மலையான விசுவாசமுள்ள அன்னையுடன் செபித்ததாலே
மன நிறைவாய் தூய ஆவியால் நிரப்பப்பட்டனரே

கானவூர்க் கலியாண வீடதனில் சென்ற நீயும்
கானத ரசத்தை நிறைவு செய்திடவே நினைத்து
காற்றென விரைந்து உம் மகனிடம் சொல்லி
காத்திட்டீர் திருமண வீட்டாரின் மானமதை

மானிலம் போற்றும் இறைவன் ஆவணித் திங்கள்
மாமரித் தாயுனைத் திரு உடலுடன் விண்ணகம் அழைத்துச் சென்றார்
மாபரன் யேசு நிறுவிய திருச்சபையார் யாம் நம்புகின்றோம்
மாற்றுத் திருச்சபையார் மறைநூலில் இல்லையென்றே வாதிடுகின்றாரே

சேயாம் கிறீஸ்துவின் தாயாம் மரியுனை அவருடன்
சேர்த்தே சேனையார் நாமும் பணி செய்கின்றோம்
சேயையும் தாயையும் பிரித்திடவே வாதிடும்
சேராத மாற்றுத் திருச்சபையினரை எம்முடன் சேர்த்திடம்மா

ஏதமிலாக் கன்னியுமக்கு வேறுபிள்ளைகளுண்டெனக் கூறி
ஏங்கியே கண்ணீர் வடிக்க வைக்கின்றார்களெமை
ஏவையின் பாவம் போக்கவந்த கன்னித் தாயே
ஏனம்மா பொறுமை உண்மையை உரைத்து அவர்களை எம்முடன் சேர்த்திடம்மா

திருமதி M. செபஸ்தியாம்பிள்ளை

யாழ் / மறை மாவட்டத்தில்

சேனை வளர்ச்சி

அன்று எம் இரட்சகர் கிறிஸ்து, அப்போஸதலர்களுக்குக் கொடுத்த பணியைத் தொடர்ந்து நிறைவேற்ற, நாம் ஒவ்வொருவரும் உறுதிப்பூசுதல் என்னும் திருவருட் சாதனத்தைப் பெறும்போது பெற்றுக் கொண்ட கட்டளையை நிறைவேற்ற நம் கத்தோலிக்க மறைச்குப் பரிசுத்த ஆவியால் அருளப்பட்ட அரும்பெருங் கொடையே மரியாயின் சேனையாகும்.

இது அயர்லாந்தைத் தாயகமாகக் கொண்ட திரு. பிருங்டவ் என்பவரால் 1921ம் ஆண்டு தேவ அன்னை பிறந்த தினத்துக்கு முன் தினமாகிய புரட்டாசி மாதம் 7ம் திகதி 12 அங்கத்தவருடன் ஆரம்பிக்கப்பட்டது. மந்தையை விட்டு தூரச் சென்ற ஆடுகளைத் தேடிப்பிடிப்பதிலும் அவற்றைக் கண்காணிப்பதிலும் சேனையார் தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் பயன் படுத்துகின்றனர்.

இத்தகைய அரும்பெரும் பணியைக் கொண்ட சேனையானது நம் யாழ் மறை மாவட்டத்தில் 1936ல் வித்திடப்பட்டது. பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் அருட் திரு. இராசநாயகம் அடிகளார் ஞானத்தலைவராய் வழி காட்ட, சகோதரன் பிரான்சீஸ் ஒவ்மேரி ஆசிரியர் தலைவராகவும் திரு. மிச்கேல் பிள்ளை உபதேசியார், திரு. பாக்கியநாதர், திரு. ஆரோக்கியநாதர் ஆசிரியர், அங்கத்தவராகவும் இருந்தனர். இவர்களுள் திரு. முத்தையா இன்னும் சீவந்தராய் உள்ளனர்.

இப்படியே 1-2-36ல் ஆரம்பமாகிய மரியாயின் சேனை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி என்றவாறாய் யாழ் மறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவி 45 பிரஸீடியங்களைக் கொண்டதாக உள்ளது. பிரஸீடியங்களுக்கெல்லாம் மேற்சபையாக 19-9-40 கியூறியா ஆரம்பிக்கப்பட்டது. யாழ் ஆசனக்கோவிலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கியூறியாவுடன் மேலும் பல கியூறியாக்கள் ஆரம்பமாகி இணைக்கப்பட்டன. அதாவது யாழ் இளைஞர் கியூறியா 9-7-55ல் நிறுவப்பட்டது. ஊரகாவற்றுறைக் கியூறியா 19-4-59ல் நிறுவப்பட்டது. இளவாலைக் கியூறியா 8-9-48ல் நிறுவப்பட்டது. இவை எல்லாவற்றையும் அடக்கி செயல்பட்டது யாழ் கியூறியா. 21-8-55ல் கொமிற்ஸியமாக உயர்த்தப்பட்டது. மேலும் கியூறியா கொமிற்சிய ஞானத் தலைவராக அருட் திரு. இராசநாயகம் அடிகள், அருட் திரு. சாள்ஸ் அடிகள், அருட்திரு. மேரியோசப் அடிகள், அருட்திரு. பஸ்ரியாம்பிள்ளை அடிகள் என்போர் அரும்பணி ஆற்றினர்கள். தற்போது கொமிற்சிய ஞானத்தலைவராக அருட்திரு கிறிஸ்ரோப்பர் அடிகள், சேனையார் ஊக்கமும் ஆக்கமும் பெற போதனையாலும் சாதனையாலும் வழிகாட்டுகிறார். கியூறியா, கொமிற்சியத்தலைவர்களாக, திரு. பிரான்சீஸ் ஒவ்மேரி, திருமதி கிறிஸ்ரியன், திரு. அன்று, திரு. சிப்பிரியன், திருமதி M. O. பெனடிற் ஆகியோர் வழி நடத்தினர்கள். தற்போது கொமிற்சியத் தலைவராக செல்வி வயலற் இம்மனுவேல் அவர்கள் சேனைப்பணிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து மிகத்திறமையாக வழி நடத்துகிறார்.

மன்னாரைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். 1939ம் ஆண்டு மன்னாரில் ஆரம்பமாகிய மரியாயின் சேனை; யாழ் மறை மாவட்டத்துடன் இணைந்து செயற்பட்டது.

மன்னார் மறைமாவட்டமாகியபின் தனித்து செயற்படுகின்றது.

மன்னார் கியூறியா 6-7-54 முதல் செயல் பட்டது ஞானத்தலைவர், அருட்திரு. பீற்றர் அடிகள், தலைவர் அருட்திரு. யோசப் அடிகள். 1969ம்ஆண்டு முதியோர் இளைஞர் கியூறியா வாகப் பிரிக்கப்பட்டது. ஞானத்தலைவராக அருட் திரு. மைக்கேல் அடிகளார் வழி நடத்தினார்.

2ம் கியூறியா 1979ல் முருங்கனில் ஆரம்பிக்கப்பட்டது. பிரசீடியங்கள் 14 அருட்திரு. பயஸ் அடிகளார் ஞானத்தலைவ ராகக் கடமையாற்றினார். தலைவர் திரு. அல் போன்ஸ் சில்வா. 24-1-81ல் மன்னார் மறை மாவட்டமாகியது. 2-9-82ல் வேதசாட்சி களின் இராக்கினி கியூறியா கொமிற்சிய மாக்கப்பட்டது. தலைவராக திரு. மரிய தாசன் பீரிஸ் ஊக்கமாக வழிநடத்துகிறார்,

மேலும் மரியாயின் சேனை ஆரம்பித்த காலத்தில் இருந்தே காலம் சென்ற அதி மேன்மை தங்கிய கியோமார் ஆண்டகை அவர்களும் ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களும் மரியாயின் சேனை யை ஆதரித்துசேனையாளருக்கு ஊக்கமளித்து வந்தனர். தற்போது மேதகு தியோகுப் பிள்ளை ஆயர் அவர்களும் சேனையா ளருக்கு ஊக்கமளித்து அதன் வளர்ச்சிக்கு உதவுகிறார். இன்னும் யாழ் ஆசனக்கோவி லில் பங்குத் தந்தையர்களாக அருட்திரு. கில்லறி அடிகளார், அருள்திரு. அகஸ்ரீன், அருள்திரு. ஜேம்ஸ்.
அருள்திரு. கிறிசோஸ்ரம்ஜோய், அருட் திரு. பொன்னையா, அருட திரு செல்வ ராசா அடிகளும் தற்போது பங்குத்தந்தை யாகக் கடமையாற்றும் அருள்திரு. ஜெப நேசன் அடிகளும் மரியாயின் சேனைக்கு ஆதரவு அளித்து ஊக்கமளித்துள்ளார்கள். இப்படியே இறைவன் அருளாலும் தேவ தாயாரின் ஆதரவாலும் வாழையடி வாழை யாக சேனை செழித்தோங்கி வளர்வதாக.

மரியபாக்கியம் செ.

யாழ் / புனித ஸ்நாபக அருளப்பர் ஆலய சிருஷ்டிகரின் மாதா சேனையாரின் அயரா உழைப்பின் பயனாக குடும்பங்கள் திருவருடசாதனங்களுக்கு அழைத்து வரப்படும் நிகழ்ச்சிகளில் ஒன்று. இதில் ஒரு குடும்பம் திருமணம் நிறை வேற்றப்பட்டு, பிள்ளைகள் ஞானஸ்நானம், உறுதிப் பூசுதல், நற்கருணை எனும் புகுமுக திருவருட்சாதனங்களைப் பெறுகின்றனர்.

பொன் விழாவில் நாம் விரும்புவது

மரியாயின் சேனை அனுஷ்டிக்கும் பொன்விழாவிற்கு அன்புச்செய்தி கொடுக்கையில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்குப் பல காரணங்கள் உண்டு. பொதுநிலையினராகவும், குருமட மாணவனாகவும், குருவாகவும் பலவிதத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், ரோமாபுரி இவ்விடங்களில் உள்ள சேனைகளுடன் தொடர்பு கொண்டிருந்தேன்.

மரியாயின் சேனையே எமது குருத்துவ அழைத்தலுக்குக் காரணமாகவும் ஊக்கமாகவும் இருந்திருக்கின்றது. இதற்காக 1967ஆம் ஆண்டு மரியாயின் சேனையின் பிறப்பிடமாகிய டபிளின் நகரத்திற்குச் சென்று சகோதரன் ஃபிராங்டவ் அவர்களைச் சந்தித்து எனது பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்தேன்.

இன்றைய நிலையில் பொது நிலையினரின் அப்போஸ்தலத்துவத்தையும் பொது நிலையினரின் சேவையையும் ஊக்குவிக்கும் பணியிலே ஈடுபட்டிருக்கின்றேன். மேற்கண்ட காரணங்களின் வழியாக பொன்விழா கொண்டாடும் சேனை அங்கத்தவர்களுக்கு என்ன செய்தியைக் கூறுவேன்.

களிகூர்வதில் காரணம் உண்டு. ஏனெனில் நாங்கள் திடமான அஸ்திவாரத்தில் நிலையான தரத்தை அடைந்திருக்கின்றோம். இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் சேனை நன்றாகப் பரவி இருக்கின்றது. இறைவனுக்கு நன்றி. நாங்கள் கடந்த காலத்தைக் கணித்து வருங்காலத்தைத் திட்டமிடுதலே பொன்விழா கொண்டாடும் எங்களின் கடமையாகும். சரித்திரம் கற்பிக்கும் உண்மைகளைப் பயன்படுத்தினால்தான் வருங்காலத்தை உரிய முறையில் எதிர்நோக்க முடியும்.

வத்திக்கான் சங்கம் பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவத்தைப்பற்றி ஒருசில ஆணித்தரமான மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றது.

(1) பொதுநிலையினர் தங்களுடைய அப்போஸ்தலத்துவத்திற்குரிய திருவருட் சாதன அஸ்திவாரங்களை திருமுழுக்கிலும் உறுதிப்படுத்துதலிலும் நிறைவாகப் பெற்றிருக்கின்றனர்.

(2) இதன் வழியாகப் பொதுநிலையினர் அப்போஸ்தலத்துவத்தைப் புரிவதற்கு நேரடியாக இறைவனாலே அதிகார பூர்வமாக அனுப்பப்படுகின்றனர். [திருச்சபை 233]

(3) பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் கோவிலையும் பங்கையும் சுற்றியும் சார்ந்ததுமாக இருக்காது, பங்கைச் சூழ்ந்திருக்கும் சகல உலக அமைப்புக்களையும் நோக்கி இருக்கவும் வேண்டும். அதாவது திருச்சபையின் மேய்ப்புப் பணி திருவருட் சாதனப் பணி, திருவழிபாட்டுப் பணி இவைகளில் மாத்திரம் ஈடுபட்டு இருக்காது, மனித சீவியத்திற்கு இன்றியமையாத அம்சமாக இருக்கும் சமூக, அரசியல், பொருளாதார அம்சங்களில் ஈடுபட்டு இருக்கவேண்டும்.

ஆகையால் எங்களுடைய விருப்பமும், நம்பிக்கையும், செபமும் என்னவென்றால் வருங்காலத்தைக் கண்ணோக்கும் நாங்கள் வருங்காலத்திற்கு ஏற்ற திருப்பணியைச் செய்வதற்கு வேண்டிய சக்தியையும் துணிவையும் ஆவியிடமிருந்து பெறவேண்டுமென்பதும், பாரம்பரிய வழிமுறைகளில் மாத்திரம் நின்றுவிடாது இன்றைய மனிதரின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்ற பணியைச் செய்யவேண்டுமென்பதும் எமது விருப்பமாகும்.

சேனையின் சேவை வளர்க!

அருள்திரு S. J. இம்மானுவேல்

அன்புப் பணியிலோர் பொன்விழா

பரிசுத்த தந்தை பத்தாம் பத்திநாதர், கர்தினல்கள் சிலருடன் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார். ''இன்றைய உலகைக் காத்து மேம்படுத்தத் தேவையானது எது?'' ''கத்தோலிக்க கல்வி நிறுவனங்களை அதிகமாக அமைக்கலாம்'' என்று கூறினர் ஒரு கர்தினல். ''கோயில்களை ஏராளமாகக் கட்டுவோம்'' என்றார் மற்றொருவர். ''இவையெல்லாம் போதாது. உண்மையான பக்தியும், அறிவும், உறுதியும், அப்போஸ்தல ஆர்வமும் கொண்ட இல்லறத்தார் குழுவினை ஒவ்வொரு பங்குத் தளத்திலும் நிறுவவேண்டும். இன்றைய உலகிற்கு இதுவே உடனடித் தேவை'' என்று கூறினர் திருத்தந்தை அவர்கள்.

உலகில் தம் இரட்சணிய அலுவலைத் தொடர்ந்து நடத்த, கிறிஸ்து இல்லற வாசிகளையும் அழைத்துள்ளார். இப் பணி இல்லறத்தாரின் அப்போஸ்தலத்துவம் என அழைக்கப்படுகின்றது. இந்தக் கிறிஸ்தவ அழைப்பின் காரணமாக இல்லறவாசிகளும், திருச்சபையின் மறைபரப்புப் பணியில் தவிர்க்க முடியாத பங்கு பெற்றுள்ளனர். இல்லறவாசிகள் அனைவரும், குறிப்பாக, இளைஞர்கள் அப்போஸ்தலப் பணியாற்ற கிறிஸ்து விடுக்கும் அழைப்பை ஏற்றுச் செயல்பட வேண்டுமென இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம், இல்லறத்தாரின் அப்போஸ்தலத்துவம் பற்றிய தீர்மானத் தொகுப்பில் வலியுறுத்துகின்றது.

சிறு புளிக்காரத்தை மாவிலே புதைத்து வைத்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோமே! அந்தப் புளிக்காரம் என்ன செய்கிறது? மாவின் எல்லாப் பாகத்தையும் புளிக்க வைக்கின்றது. எவ்வளவுக்கு மாவு புளிக்கின்றதோ அவ்வளவுக்கு மாவு சிறக்கும்; அப்பமும் நன்றாக இருக்கும். அதுபோல், பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம், எல்லாவற்றையும் ஊடுருவிச் செல்ல வேண்டும். மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் அடைய வேண்டும். இவ்வாறு தம் புனிதத் தன்மையாலும் அன்பாலும் எல்லாவற்றையும் மாற்றி அமைக்க முடியும்.

பல்வேறு பக்திச் சபைகளில் சேர்ந்து பொதுநிலையினர் பணியாற்ற வாய்ப்பிருந்த போதிலும், மரியாயின்சேனை என அழைக்கப்படும் பக்திச்சபை பங்குத்தளங்களில் பயனுள்ள அரிய பெரிய பணிகளை ஆற்றி வந்துள்ளது என்பதைத் திருச்சபையின் அதிகார பீடம் உறுதிப்படுத்திப் பாராட்டியிருக்கின்றது. இலங்கையில் மாத்திரம் ஏழாயிரம் ஊழிய, உதவி அங்கத்தவர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

''மரியாயின் சேனை எனும் பெயர் எவ்வளவு பொருத்தமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பெயர்'' என 11ம் பத்திநாத பாப்பரசர் கூறுகிறார். ''மரியாயின் சேனை இது வரை ஆற்றியுள்ள அருந் தொண்டுகளுக்காக சேனையார்க்கு நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவிக்க இது தகுந்த சமயமாகும். வாழ்வும் வழியும் உண்மையுமான கிறிஸ்துவிடம் மக்கள் அனைவரையும் அழைத்துவரும்

பணியில் சேனையார் திருச்சபையுடன் ஒத்து ழைக்கிறார்கள்'' என்று பாப்பு 12-ம் பத்தி நாதர் சார்பில் மரியாயின் சேனைக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய செயலர் முனி சிரேஷ்டர் J. B. மொன்டீனி கூறுகிறார். ''மரியாயின் சேனை திருச்சபையின் உண்மை யான முகத்தோற்றத்தைப் பிரதிபலிக்கின் றது'' என பாப்பு 23-ம் அருளப்பர் கூறுகின் றார். ''மரியாயின் சேனை திருச்சபையின் அப்போஸ்தல இயக்கங்களுள் செயல்திறன் மிக்க தொன்றாகும்'' எனபாப்பிறையின் விசுவாசப் பரப்புதல் சபைத் தலைவர் பேர ருட் பெருந்தகை டி. எஸ். லூர்துசாமி ஆண் டகை அவர்கள் கூறியுள்ளார்கள்.

மரியாளுடை உதவியின்றி அயலாருக்கு பணிபுரிய முயற்சி செய்யவே எவராலும் முடியாது. அதேபோல், அவளுடைய கருத்து களோடு ஓரளவேனும் ஒன்றியாமல் இந்தக் கடமையைச் செம்மையாகச் செய்யவும் முடி யாது. ஆகவே மரியாளோடு நாம் எவ்வ ளவு நெருங்கி ஒன்றிக்கிறோமோ, அவ்வளவு சிறந்த வகையில் கடவுளை அன்பு செய்து, அயலாருக்குப் பணிபுரிய வேண்டு மென்ற கடவுள் கட்டளையை நிறைவேற்ற முடியும். மரியன்னை அனைவரையும் தம் திருமகனை அன்பு செய்யத் தூண்டுகிறாள். எனவேதான் ''அன்பின் அன்னை'' என அழைக்கப்படுகி றாள்.

அன்புப் பணியிலீடுபட்டு சேனைக்குப் புக ழீட்டிக் கொடுத்தவர்களில் ஓரிருவரைப் பற்றி இங்கே குறிப்பிடலாம், செல்வி எடல் குயின் 1907-ல் பிறந்தாள். திருமடத்தில் சேர ஆசைப்பட்டு, உடல் நலமின்மையால், அது கைகூடவில்லை. பின்னர், மரியாயின் சேனையில் சேர்ந்து, தன்னை முழுவதும் அர்ப் பணித்துக் கொண்டாள். நாகரீகமற்ற ஆப் பிரிக்க மக்கள் மத்தியில் எடல்குயின் ஏற் படுத்தின அநேக சேனைக் குழுக்களும், அவைகளின் அரும் பெரும் ஆன்ம ஈடேற் றப் பணியும், அந்த அம்மையார் ஆற்றிய அருஞ் செயல்களும் மறக்கமுடியாதவை, ''ஆப்பிரிக்காவில் கிறிஸ்து பிறக்க சேனை ஒரு சிறந்த கருவி'' என்று எடல் குயின் கூறினர். 1944-ல் சேனைப் பணியிலே தன் உயிரையே நல்கிய அவருக்கு முத்திப்பேறு அளிக்க ஏற்பாடாகின்றது.

திரு. ஆல்பி லாம்பா (Alfic Lambe) 1932-ல் பிறந்தார். கிறிஸ்தவ சகோதரர் சபையில் சேர முயன்று அது கைகூடாமற் போகவே, மரியாயின் சேனையின் தளபதி யாகிக் கொலம்பியா, பிரேசில், தென் அமெரிக்கா நாடுகளில் அரும்பணியாற்றிச் சேனைக் கொடியை எங்கணும் பட்டொளி வீசிப் பறக்கச் செய்து, அந்த மன நிறை வில், தமது 27வது வயதிலே மரித்தார்.

மரியாயின் சேனை மேற்கொள்ள வேண் டிய அன்புப் பணிகளில் ஒன்று: ''கிறிஸ்து வுக்காக அலைதல்''. (Peregrinatio Pro Christo) மற்றொன்றானது: மரியன்னைக் காய்ப் பயணம்'' (In Colae Mariae). கிறிஸ்துவுக்காக உற்றார், உறவினரை விட்டு தொலை தூரம் போவது என்பது அயர்லாந்து நாட்டில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கமாயிருந்தது. அந்தப் பழமையான மரபுக்கு புதுமையான விளக்கம் கொடுத்து, ''கிறிஸ்துவுக்காக அலைதல்'' என்னும் அப்போஸ்தல பணியை அறிமுகப்படுத்தினர் பிராங்க் டஃப் அவர் கள். இப் பணியில் முற்றிலும் வெற்றி யடைந்தவர்கள் செல்வி எடல் குயின், திரு. ஆல்பி லாம்பா, என்றால் மிகையாகாது.

அன்புப் பணியிலோர் பொன் விழா காணும் இலங்கை மரியாயின் சேனையாரின் அப்போஸ்தல ஆர்வத்தை இலங்கைத் திருச் சபையும் புகழ்ந்து பாராட்டியுள்ளது. எனி னும் நம் நாட்டிலுள்ள அப்போஸ்தல இயக்கங்களுள் கடல் கடந்து சென்று சேவை யாற்றக் கடமையும் உரிமையும் கொண்டதொரு இயக்கம் மரியாயின் சேனை. எனவே செல்வி எடல் குயின், திரு. ஆல்பி லாம்பே என்பவர்களின் முன்மாதிரியைக் கண்முன் வைத்து, ''கிறிஸ்துவுக்காக அலை தல் ''மரியன்னைக்காய்ப் பயணம்'' மேற் கொள்ளச் சேனையார் முன்வரவேண்டும். ''புறப்படுவோம்'' என்னும் போர் முழக் கத்துடன், சேனையார் நாடு நாடாகச் செல்லும் காலம் அதிக தூரத்திலில்லை.

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்

மரியாயின் சேனையாளரும் மறைக் கல்வியும்

R. M. G. நேசநாயகம்,
இயக்குநர்,
மறைக்கல்வி நிலேயம்,
யாழ்நகர்.

"இல்லறத்தோரே, இதுதான் உங்கள் யுகம்" என்றும், "நீங்களே வருங்காலத் திருச்சபையின் அப்போஸ்தலர்கள்" என்றும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் அறைகூவல் விடுக்குமுன்னரே இல்லறத்தோருக்கென்று திருச்சபையின் அப்போஸ்தலிக்க சேவையாற்ற பணித்தளம் ஒன்றை அகில உலகிற்குச் சவாலாக சமர்ப்பித்தவர் திரு. பிராங் டவ் அவர்கள். அவரின் அழைப்பு மாசு மறு படிந்திருந்த உலகை நிவர்த்தி செய்வதற்கு, அதன்கண் வாழும் மக்களாகிய இல்லறத்தோரைத் "தன்னேயே தூய்மைப்படுத்தி, மற்றவர்களேயும் தூய்மைப்படுத்துக" என்ற விருது வாக்கியத்தோடு, மரியாயைப் பாதுகாவலியாகக் கொண்டு தொடக்கி வைக்கப்பட்ட பணித்தளமதான் மரியாயின் சேனே. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்பதற்கொப்ப ஒரே சகோதரர்களாக, ஒரே மனப்பான்மையோடு, ஒரே அன்புறவிலே, ஒரே நோக்கோடு செயலாற்ற அழைக்கும் பணித்தளமே மரியாயின் சேனே யாகும்.

மரியாயின் சேனே பலதரப்பட்ட மக்களுக்கு — பாலர், இளேஞர், வளர்ந்தோர், முதியோர் — சேவையாற்றும் பணித்தளம் ஆகும். அதனுடைய சேவைகளில், பல பணிகளில், மறைக்கல்வி புகட்டுவதே முக்கியமான இடத்தை வகிக்கின்றது. மறைக்கல்வி என்பது ஞானமுழுக்குப்பெற்ற ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட விசுவாச வித்தான கொடையை வளர்ப்பதும், இதன் அடிப்படையில் புரியக்கூடிய விதத்தில் அந்தந்தப் பருவத்தினர்க்கு ஏற்ற வகையில் அறிவூட்டலுமேயாகும். "நீங்கள் உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினே அறிவியுங்கள்" என்ற சேவையின் செய்தியை நாம் ஆராய்ந்து பார்த்தால், இறைவனேப்பற்றிய அறிவு புகட்டலும் முக்கியமான சேவை என்று புலப்படுகின்றது. இவற்றையே நாம் மறைக் கல்வி என்கிறோம். இயேசுவின் கடைசிக் கட்டளேயைச் சேனேயார் நிறைவேற்றும் முறையைக் கொண்டுதான், சேனே நன்ருக இயங்குகின்றதா? இல்லேயா? என்பதைத் தீர்ப்பிடலாம். "சேனேயார் தங்களேச் சூழ்ந்துள்ள சமூகத்தில் வாழும் மக்களுள் ஒவ்வொருவரோடும், விசேடமாக ஞான முழுக்குப்பெற்ற ஒவ்வொருவரோடும் ஏதேனும் ஒருவகையில் தொடர்பு கொள்வதை முக்கிய முதற்றரக் கடமையாகக் கொள்ள வேண்டும். சேனே எல்லா இடங்களிலும் பரவி, மக்கள் அனேவரோடும் தொடர்பு கொள்ளத் தொடங்கினுல், நமது ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தந்த கடைசிக் கட்டளே நிறைவேறும்" என்று கூறுகிறது மரியாயின் சேனேக் கைநூல்.

மறைக்கல்வி முறையை, அறிவுள்ளவர்கள் எல்லோருமே எடுத்தியம்ப முடியாது. காரணம், மறைக்கல்வி எனும் அறிவூட்டும் பணியானது, கற்பித்தலில் மட்டும் அமைவதில்லே. அந்த மறைக்கல்வியை யார் யார் தம் அறிவாலும், அனுபவத்தாலும் பயனுள்ளதாக்கிக் கொள்கிருனே, அவனே மறைக்கல்விக்கு உகந்த ஆசிரியன் ஆகின்ருன்.

புனித கன்னிமரியாளோடு ஒன்றித்து அவளுடைய மனப்பான்மையோடு மறைக் கல்வி கற்பிப்பவர்கள் தங்கள் வாழ்க்கை

யில மறைக்கல்வி புகட்டும் குறிக்கோளில் வெற்றிகண்டடைவார்கள். "இது எவ்வாறு ஆகும்" என்று புனித கன்னிமரியாள் அன்று எவ்வளவு தாழ்ச்சியோடும், நேர்மையோடும் வானதூதனிடம் விளக்கம் கேட்டாள் என்பதை நற்செய்தியிலிருந்து நாம் அறிந்துகொள்கின்றோம். அவளுடைய தாழ்ச்சி, மறைக்கல்வியை எவ்வாறு என்ஞல் பயிலமுடியும், எவ்வாறு படிப்பிக்க முடியும் என்று தயங்குவோருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. சேனையார் மறைக்கல்வியைப் பயிலும்போது, தங்கள் புத்தியை விருத்தி செய்யவேண்டும் என்பதோடு, தம் பக்தியையும் வளர்க்க வேண்டுமென்று கைநூல் கூறுகின்றது. அப்போதுதான் கடினமான மறைக்கல்வியை ஊட்டும் பணியில் மனச்சோர்வு அடையாமல் சேனையாளர் சேவை செய்ய முடியும். நன்ருகக் கற்றதை நன்ருகச் செயற்படுத்துவதே சேனையினுடைய சேவையின் மகத்துவமாகும்.

இதை நோக்குமிடத்து மரியாயின் சேனை மறைக்கல்விப் பணித்தளமானது, அதன் ஆசிரியர்களை இயன்றளவுக்கு இறைவனின் வார்த்தையை அனுபவித்தவர்களாக, அதனுல் தங்களையே புனிதப்படுத்தியவர்களாக மறைக்கல்விப் பணிபுரிவதற்கு ஈடுபடுத்துகிறது. இக்காலத்தில் எல்லாவற்றிலும் பலவிதமான முன்னேற்றங்களைக் கண்டுவரும் இவ்வுலகில் மரியாயின் சேனையினது தொண்டுகளில் முன்னேற்றம் காணவேண்டும் என்பதற்காக, பணிசெய்யும் வழிகளைப் புது மெருகிட்டு, பணியாற்றுபவர்களை உருவாக்க வேண்டும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். எனவே சிறப்பான முறையில் சேனையின்கண் வாழும் அங்கத்தவர்களை அறிவூட்டப்பெற்ற பயிற்சியின் வழியாக மறைக்கல்விப் பணியாளர்களாக்குவதே சிறப்பான அம்சமாகும். பணிசெய்யப் புறப்படுபவர்கள், பணியின் முறைகளை ஆழமாக அறிந்து, அனுபவித்து அதை மற்றவர்களுக்கு அளிக்க இறைவனின் தாய் புனித மரியன்னை துணை புரிவாராக!

வளர்க! உங்கள் மறைக்கல்விப் பணி

வாழ்க! இறைவனின் சேவையாளர்கள்

புகழ்க! இறை நாமம்.

மனிதர்கள் கும்பல் கூடும்பொழுதெல்லாம் அவர்கள் ஒவ்வொருவரிலும் மறைந்து கிடந்த பேரார்வம், பிடிவாதம், அகந்தை, அவிசுவாசம் முதலாம் துர்க்குணங்கள் திடீரென்று கொழுந்துவிட்டெரிந்து விடுகின்றன. அவர்களுக்கு இயற்கையாயுள்ள மனித பெலவீனம் வெளிப்பட்டுவிடும். இதையேதான் வேதாகமம் "உலகம்" என்று கூறும்.

— காடினல் நியூமன்

★ ★

மரியாயின் சேனை திருச்சபையின் உண்மையான முகத் தோற்றத்தைப் பிரதிபலிக்கின்றது.

— 23-ம் அருளப்பர்

மரியாயின் சேனையின் ஸ்தாபகர்

சகோ. பிராங் டவ்

மரியாயின் சேனையை உருவாக்கியவர்

பிராங்க் டவ்

1917 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 7ஆம் நாள் லெனின் தலைமையில் ஒரு சதிப்புரட்சி ரஷ்யாவில் ஜார் மன்னரின் ஆட்சியைப் பொறுப்பேற்ற, மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்த்தது. இந்த ரஷ்யப் புரட்சி தங்கு தடையின்றி வளர்ந்துவந்த அதேகாலத்தில் உலகின் மறுகோடியில் உள்ள அயர்லாந்து நாட்டில் வாழ்ந்த கத்தோலிக்க இளைஞனுடைய உள்ளத்தில் ஓர் ஆன்மீகப் புரட்சிக்கு வித்திடப்பட்டு வளரத் தொடங்கியது. பிற்காலத்தில் டப்பிளின் நகரவாசி பிராங்க் டவ் இதுபற்றி அடிக்கடி பேசுவார். கடவுளை எதிர்த்துப் போராடும் பொதுவுடைமைப் படைகள் உருவான அதே காலத்தில், அவைகளை எதிர்க்க ஒரு கிறிஸ்தவ இயக்கமும் உருவானது. இறைவனின் அன்னையான மரியாளின் தலைமையிலும், தூண்டுதலிலும் உருவெடுத்த இவ்வியக்கம், ரஷ்ய தீவிரவாதிகளின் அழிவுக் கோட்பாடுகளை இயேசுவின் நற்செய்திக் கருத்துகள் கொண்டு தாக்கித் தகர்த்தெறிய உதவும். இவ்விரு இயக்கங்களுக்கும் இடையே உள்ள இத்தொடர்பு தற்செயலானதோ, அன்றேல் மனித வரலாற்றில் தலையிடத் தயங்காத கடவுளின் கைவரிசையோ என்பதைப் பற்றிய முடிவு வாசகரைப் பொறுத்தது.

1921ஆம் ஆண்டு புரட்டாதி 7ஆம் நாள் ஏழ்மையே உருவான இந்த ஐரிஷ் குடிமகன் இறைபற்றுள்ள சில கத்தோலிக்கருடன் ஒரு மேசையைச் சுற்றிக் கூட்டம் கூடினார். அற்புத வரவணிக்கத்தில் உள்ளதைப் போன்ற அமலோற்பவ அன்னையின் திருவுருவம் தூய வெண்ணிறத் துணிமீது எரியும் இரு மெழுகுதிரிகளுக்கும் பூச்செண்டுகளுக்கும் நடுவே அமைந்து மேசையை ஒரு எளிய சிறு பீடமாக்கியது. மரியன்னையின் பிறப்பு விழாவுக்கு முதல்நாள் நடந்த இக்கூட்டத்திலிருந்து ஓர் அனைத்துலக ஆன்மீக இயக்கம் உருவெடுத்தது. இதுவே ஆன்மாக்களை மீட்க ஆன்மீகப் போர்பொருதும் புதிய மரியாளின் சேனை என்னும் அப்போஸ்தலிக்க திருத்தொண்டு.

தாழ்ந்தவர் உயர்வர்

கைப் புத்தகத்தில் உள்ள முதல் வாசகம் சேனையின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது. '' மரியாயின் சேனை கத்தோலிக்கரை அங்கத்தினராகக் கொண்ட ஒரு கூட்டம். திருச்சபை உலகத்தையும் அதன் தீய சக்திகளையும் எதிர்த்து ஓயாமல் புரியும் போரில் அதன் அனுமதியுடன் அணி வகுத்து நின்று உதவ அருள்வளம் பொழியும் அமலோற்பவ மரியன்னையின் ஆற்றல் மிக்கத் தலைமையின்கீழ் பணி செய்வதே இச் சேனையின் நோக்கம்.''

புனித வின்சென்ற் டீ போல் சபையில் அங்கத்தினராக இருந்து உதவிய பதினைந்து பெண்கள், திரு. பிராங்க் டஃப், அப் பங்குக் குரு ஆகியோர் முதலில் தயாளநாயகியின் கூட்டமாய் இயங்கி, 1925ஆம்ஆண்டு கார்த்திகைத் திங்களில் மரியாயின் சேனை ஆயினர்.

சேனை உருவாகி மூன்று மாதங்களாய் இருக்கும் பொழுதே, அது உலகமெங்கும் பரவுமென இவர் கூட்டத்தில் கூறினார். அதற்குப் பதில் ஒரே சிரிப்புத்தான். அவர்களுக்கு அது பகிடியாகவே தோன்றியது. ஏனெனில் தங்கள் சிறிய தொண்டு அப் பெரும் அளவிலான தாக்கம் தருமென அவர்களுக்குப் படவில்லை. ஆனால் திரு. ஃபிராங்க் டஃப் அவர்களுக்கோ அது தெட்டத் தெளிவாய் இருந்தது. பண்டைய

உரோமரது சேனைப் படைகள் உலகத்தைக் கைப்பற்றியதுபோல, மரியாயின் சேனையும் ஒருநாள் ரஷ்யாவும் சீனவும் உட்பட உல கின் மூலைமுடுக்கெல்லாம் சென்றடையும். 1930ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் அள வில் சேனையின் சொற்பட்டியல், உலகில் எங்கும் இலகுவாக வழக்கில் வரத்தக்கதாக, திருச்சபையின் பொது மொழியான இலத் தீனில் பண்டைய உரோமரது சேனை முறைப்படி அமைக்கப்பட்டது. இதிலிருந் தே பிரசீடியம், கியூறியா, செனத்துஸ், கொன்சீலியம் என்ற பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன.

புனித வின்சென்ற் டீ போல் சபை மட்டில் சேனைக்கு இருந்த கடமைப்பாட்டை திரு. டஃப் மறக்கவில்லை. வாராந்தக் கூட் டம், ஒழுங்கான ஒதும் முறை, கிழமைக்குக் கிழமை சுமத்தப்படும் ஊழியம், அதுபற்றிய அங்கத்தினர் அறிக்கை, இருவரிருவராக ஊழியம் செய்யச் செல்லுதல், கூட்டத்தில் இரகசியப் பை மூலம் பணம் சேர்த்தல், ஆன்ம இயக்குநரை உள்ளடக்கிய பதவிப் பட்டியல் முதலிய யாவையும் சேனை அச் சபையிடம் இருந்தே கையாண்டது. அவ் வண்ணமே அச்சபைக்குரிய பிறர் சேவை யில் கெட்டியும் விடாப்பிடியுமான ஈடுபாடு ள்ள போக்கையும், பாரம்பரியத்தையும் சேனை தனது அங்கத்தினர் மத்தியில் ஊட்டி வளர்த்தது.

1919ஆம் ஆண்டு மீரா இல்லத்தில் (Myra House) தொடங்கப்பட்ட வின் சென்ற் டீ போல் சபையின் புனித பத்திரிசி யார் கிளை (St Patrick's Conference) இப் புதிய மரியாயின் சேனைத் தொண்டு உரு வாக வழி கோலியது எனலாம். அக் கிளை யின் மாதாந்தக் கூட்டங்களில் மது அருந் தாமையை ஆதரிக்கும் அங்கத்தினர் குழு ஒன்றுக்கு திரு. ஃபிராங்க் டஃப் சிற்றுரை ஆற்றிவருவார். புனித லூயி மரி தெ மோன் போர்த் போதிக்கும் கன்னிமரியம் மாள் மீதுள்ள உண்மையான பக்தியைப் பற்றி இவர் அக்குழுவினருக்கு விளக்கி வந் தார். அப்புனிதரின் பக்தி முறையே சேனை க்கு மூலைக்கல்லாய் அமைந்தது. அதை இன்று திருச்சபையில் அப்போஸ்தலிக்க தொண்டாற்றும் பொதுநிலையினரின் மிகப் பெரிய நிறுவனம் ஆக்கியது.

இவ்வியக்கத்தைப் பிறப்பிக்கக் காரண மாக இருந்தது லூயி தெ மோன்போர்த் கற் பிக்கும் கன்னி மரியம்மாள் மீதுள்ள உண் மையான பக்தி முறையில் தான் கொண்ட ஆர்வமே என மீண்டும் மீண்டும் திரு. ஃபி ராங்க் கூறுவார். சேனையை நடத்துவதிலும் ஊக்குவிப்பதிலும் கடவுளின் திருவன்னைக்கே முதலிடம் உரியது என அவர் வற்புறுத் துவார். ''புரட்சிகள் பல வல்லமை உடை யவர்களை ஆசனத்தில் நின்று தள்ளிய துண்டு. ஆனால் எந்தப் புரட்சியும் தாழ்ந்த வர்களை உயர்த்தியதில்லை'' என செஸ்ரெட் டன் கூறியதன் உண்மையைத் திரு. டஃப் உணர்ந்திருந்தார்.

ஆனால் திரு. பிராங்க் டவ் பின் மரி யாயின் சேனையாளர் செய்ய முடியாததைச் செய்யக் கங்கணம் கட்டியவர்கள். அதா வது, உலகத்தைக் கிறிஸ்துவின் ஆட்சிக்கு உட்படுத்துவது, மரியாள் மூலம் எல்லாம் இயேசு மயம் ஆக்குவது. இதுவே அவர்கள் குறிக்கோள். இந்த இலக்கைக் கொண்ட சேனைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு அவர் தனக்கு இயல்பாகவும், இறை அருளாகவும் இருந்த பெருமளவான கொடைகளை எல் லாம் செலவழித்தார். அயர்லாந்திலுள்ள நாட்டுப் புறங்களில் அவருடன் 12 ஆண்டு களாக அடிக்கடி சைக்கிள் வண்டியில் சுற் றித் திரிந்த ஒரு குருவானவர் கூற்றுப்படி: '' பிராங்க் ஒரு மெய்யான புரட்சிவாதி. அவர் உடலுக்கு உணவும், உள்ளத்துக்கு உணவுமாக ஏழைகளை நலன்களால் நிரப்பி அவர்களிடையே இறந்தவர்.''

உலகளாவிய நற்செய்தி அறிவிப்பு

பிராங்க் டவ் வழிகாட்ட எவரும் தேடாத ஏழைப் பொது மக்கள் சேனையின் கொடியை நாட்டுக்கு நாடு எடுத்துச்

சென்று ஏற்றி வைத்தனர். 1928இல் ஸ்கொட்லாந்து நாட்டுப் பெருநகரான கிளாஸ்கோவிலும், 1929இல் லண்டனிலும் கிளைகள் திறபட்டன. 1931இல் டவ்வின் படையெடுப்பாளர் கடல் கடந்து எட்டத்திலுள்ள இந்தியாவையும் அமெரிக்காவையும் அடைந்தனர். நியூமெக்சிக்கோவில் முந்த முந்த ஒரு சைனியத்தை நிறுவியவர்கள் பற்பல ஐரோப்பிய இனங்களைச் சேர்ந்த ஒரு கூட்டம் சுரங்கத் தொழிலாளர் ஆவர். அடுத்த ஆண்டில் உலகம் எங்கும் இருந்து கத்தோலிக்கர் நற்கருணை மகாநாட்டுக்காக டப்ளினில் கூடினர். அங்கு சேனையைப்பற்றிப் பலர் அறியவந்து மரியாளின் இயக்கத்தைத் தங்கள் மறை மாவட்டங்களுக்குக் கொணர்ந்தனர். 1932இல் கனடா, அவுஸ்திரேலியா, மேற்கு ஆபிரிக்கா ஆகிய நாடுகள் கிளைகளை நிறுவிச் சேனையை ஐந்து கண்டங்களுக்கும் பரப்பின.

எனினும் எல்லாம் இலகுவாக அமையவில்லை. டப்பிளின் மறைமாவட்ட அதிகாரிகள் சிலர் டவ்பின திட்டங்களுக்கு அவ்வளவு ஆதரவாக இருக்கவில்லை. பிராங்க் வத்திக்கான் சென்று திருத்தந்தை 11ஆம் பத்திநாதரைத் தனியாகப் பேட்டிகண்டார். 1933ம் ஆணடு புரட்டாதித் திங்கள் 16ம் நாள் விடுத்த ஒரு கடிதத்தில் திருத்தந்தை பின்வருமாறு எழுதினார்: "மரியாயின சேனை எனப்படும இந்த அழகிய திருத்தொண்டுக்கு மிகச் சிறப்பான ஆசி அளிக்கின்றோம். அதன் பெயரே அதற்கு விளம்பரம். அதன் கொடியல் உள்ள மாசலலாத மரியாளின் உருவம் அதன் பெருமைக்கும், புனிதத்துக்கும் எடுத்துக்காட்டு."

இறைவனின் அன்னை மட்டில் பற்று

கடவுளது திருஅன்னை மட்டில் ஃபிராங்க் டஃப் கொண்ட அளப்பரும் பற்று, சேனைக்காக அவர் பட்ட பாடுகளுக்கு எல்லாம் எரிபொருள் ஆனது. நற்செய்தி நவில்வதே அவருக்கு வாழ்க்கையின் குறிக்கோள். அவரது நெடுநாளைய நண்பன் அருட்திரு.பிரான்சிஸ் ரிப்ளி கூறுவதுபோல்: "திரு. டவ் கட்டாயமாகப் பரிசுத்த ஆவியின் மிகச் சிறப்பான கொடைகளைப் பெற்றிருந்தார். இவருக்குச் சிறப்பான இறையியல் பயிற்சி எதுவும் இல்லாதபோதிலும், திருச்சபையின் படிப்பினைகள் பற்றியும், வாழ்க்கையின் நுணுக்கங்களுக்கு. சிறப்பாக அப்போஸ்தலிக்க தொண்டுக்கு அவைகளைப் பயன்படுத்தும் முறைபற்றியும் உண்மையான ஆன்ம நோக்குடன் பேசவும் எழுதவும் அவரால் முடிந்தது......மெய்யுணர்வு என்னும்பரிசுத்த ஆவியின் கொடையால் அவரது விசுவாசம் குறிப்பிடத்தக்க அளவு வலுப்பெற்றிருந்தது. மகனுடன் ஒன்றித்திருக்கும் வழியாக மரியாளுடன் பிராங்க் டவ் பிற்ந இருந்த ஒன்றிப்பு அவரது வாழ்க்கையை ஆண்டு நடத்தியது. மற்றதெல்லாம் அதிலிருந்தே வந்தது."

மரியாள் மட்டில் டவ் கொண்ட பற்று அவரை எல்லாரும் விரும்பவைத்தது. மரியன்னை அவரைப்போலத் தன்னை மதித்தவர்கள் அவரை அணுக உதவினாள். உள்ளத்தை உருக்கும் தயாள சிந்தைகொண்ட இவரது ஆன்மீகப் போக்கு காந்தம்போல மரியாளின் சேவைக்கு ஆட்களைச் சேர்த்தது.

1913ஆம் ஆண்டு தவக்காலம்தொட்டு நாட்பூசை கண்டு திவ்விய நன்மை வாங்கப் பழகிய பழக்கத்தை 91ஆம் வயதில் இறக்கும்வரை அவர் கைவிடவில்லை. 1917ஆம் ஆண்டுதொட்டு குருமார் ஓதும் திருமுறையை (Divine Office) தானும் கைவிடாது ஓதிவந்தார். ஆனல் இறைவனடி சேருங்கால் இதை ஒரு பொருட்டாகத் தான் அவரண்டை சாதிக்கப்போவதில்லை என்பார்.

நீதிபதி கொஸ்ரெல்லோ 'பிராங்க் டவ் எங்கள் காலத்து மிகப்பெரிய ஐரிஸ்காரர்" எனக் கூறியுள்ளார். எனினும் எவரும் அறியாத மூலை முடுக்குகளிலிருந்து மரியாயின் சேனையை உலகப் புகழ்பெற்ற ஒரு இயக்கமாக்கிய இப்பெருந்தகை, 1889ஆம்

ஆண்டு டப்பிளினில் ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர். தாயும் தந்தையும் அரசாங்க ஊழியர். பிராங்க் ஏழு பிள்ளைகளில் ஒருவர், இயேசு சபைக் குருமார் நடத்திய கல்லூரியில் கல்வி கற்றவர். தனது சாதனைகளைப்பற்றி அடக்கஒடுக்கமாய் இருந்தபோதிலும் மாணவனுய்ப் பெரும் புகழ்பெற்ற ஒருவர். தாய் தந்தையரைப் பின்பற்றித் தானும் அரசாங்க சேவையில் சேர்ந்து கொண்டார். ஆனுல் 1933இல் 44 வயதானபோது சேனை ஊழியத்துக்குத் தன்னை முற்றும் அர்ப்பணிக்குமாறு அதிலிருந்து விலகினுர். ஏனெனில் சிலகாலமாக முழுநேர அரச ஊழியம் செய்துகொண்டு சேனையில் ஈடுபடுவது முடியாத காரியம் என இவருக்குப் பட்டது.

சேனையில் பொதுநிலையினர்

அக்காலமுதல் சேனையிலும், பொது மக்களை அப்போஸ்தலிக்க தொண்டில் ஈடுபடுத்துவதிலும் ஒழிய வேறெதிலும் பிராங்க் டவ் அக்கறை கொள்ளாதவர் ஆயினர். சேனையைச் செம்மையாக இயங்க வைத்து, மனிதப் பிறவி ஒவ்வொன்றையும் திருச்சபையில் சேர்ப்பதே அவரது குறிக்கோள்: '' திருச்சபைக்கு வெளியேயுள்ள ஒவ்வொருவரும் அதிற் சேர அழைக்கப்பட வேண்டும் என்பதுபற்றி எவ்வித ஐயப்பாடும் இருக்கக்கூடாது. கூச்சம், ஒருவருடைய முகத்தை முறிக்கப் பயம், அல்லது இவ்வாறுன வேறெந்த வில்லங்கமும் விசுவாசம் என்னும் கொடையை இல்லாதவர்களுடன் பகிர்ந்துகொள்ள எமக்குள்ள தணியாத ஆசைக்குமுன் புகையாய்ப் பறக்கவேண்டும். படைப்புக்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப் பட்டே ஆகவேண்டும்'' இதுவே அவர் கொண்ட கோலம்.

திருச்சபையில் உள்ள சாதாரண பொது மக்களிடம் திறம் சரக்கு உண்டு என நன்கு அறிந்த பிராங்க் டவ் அதைப் பயன் படுத்தி மரியாயின் சேனை மூலம் வலிமை வாய்ந்த ஒரு நற்செய்தி இயக்கத்தை உண்டு பண்ணுவதே அவர் கையாண்ட வழி. சாதாரண கிறிஸ்தவ பொது மக்களிடம் பிறருக்கு தன்னலம் கருதாத வீர உள்ளத்துடன் உதவும் தகைமையும் திறனும் உண்டென முழுநம்பிக்கை கொண்ட ஒருவரே அவர். 2ஆம் வத்திக்கான் சங்கம் கூடுவதற்கு முன்னமே 40 ஆண்டுகளாக அவரது சேனை கிறிஸ்தவர்களுக் கிடையே ஒற்றுமையை வளர்ப்பது உட்பட நற்செய்தித் தொண்டாற்றுவதில் பொதுநிலையினரை ஈடுபடுத்தி வந்தது. பொதுநிலையினரின் பங்கு, பணி பற்றி அவருக்கிருந்த தூரநோக்கு, ஒழுங்கு செய்யும் ஆற்றல், இறையியல் புலமை, பிறருடன் தொடர்புகொள்ளும் திறமை, ஆழ்ந்த ஆன்ம ஞானம், அன்னையாம் திருச்சபையுடன் பற்றறுத ஒன்றிப்பு இவை யாவும் அவரைச் சேனைக்கு ஓர் இலட்சிய தளபதி ஆக்கின காரணத்தால் இன்று அது பத்து இலட்சத்துக்கும் மேலான ஊழிய அங்கத்தினரைக் கொண்டதாக உலக நாடு ஒவ்வொன்றிலும் பரவித் திகழ்கிறது.

'' தாழ்ந்தவர் உயர்வர்......... சாந்த முள்ளவர் நாட்டைப் பெறுபவர் '' என்ற திருவாய் மொழிக்கு எடுத்துக் காட்டாக பிராங்க் டவ் விளங்கினுர். '' எமக்கு வெறுப்பூட்டக்கூடியது ஒன்றும் அவரிடம் இருக்கவில்லை. அவருடைய செயல் திறனுல் ஆனவை தவிர வேறெவ்வித புதுமைகள் செய்யும் ஆற்றலோ, பகட்டோ அவரிடம் இருக்கவில்லை. பெருங் காரியங்களைச் செய்து முடிக்கக் கடவுள் அவரைத் தெரிந்துகொண்டார் எனின் அதற்குத் தகுந்த ஒரு கருவியையே அவர் தெரிந்துகொண்டார். காற்றில் அசையும் ஒரு நாணல் அல்லரே அவர் என்பது பலருக்கு வியப்பைத் தந்தது. மேய்ப்புப் பணியில் சாதாரண மக்கள் கொள்ளக் கூடிய பெரும் பங்கைத் திருச்சபைக்கு உணர்த்தத் தேவையான திறமையை ஆண்டவரும், அவர் அன்னையும் சகோதரர் டவ்பில் கண்டனர்.'' இதுவே சேனையின் கொன்சீலியத் தலைவர் டன்லீவி இவருக்கு அளித்த பாராட்டு.

அகில உலக சேனைப் பொன்விழா யாழ்நகரில் கொண்டாடப்பட்டபோது உரையாற்றுபவர்
ஆன்ம இயக்குநர் அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவேல் அவர்கள்
ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை, கொமிற்சியத் தலைவர் சகோ. ஒப்ளேற் பெணடிக்ற்,
சகோ. கொட்வின் மெண்டிஸ் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

1971இல் அகில உலக சேனைப் பொன்விழாவின்போது,
யாழ். கொமிற்சியத்தினால் நடத்தப்பட்ட தேவ அழைத்தல் கண்காட்சியில் ஒரு பகுதி.

தன் வாழ்வில் பிராங்க் டவ் பல வாறு கௌரவிக்கப்பட்டார். இதிலெல்லாம் சிறந்ததாக விளங்கியது 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் பொதுநிலையினர் சார்பில் பங்கு பற்ற அவருக்குக் கிடைத்த அழைப்பு. ஆயர்கள் இன்மேலும் பொது நிலையினர் வாழாவிருக்க முடியாது என்பதை வலியுறுத்த அவருக்கு இது வாய்ப்பளித்தது: ''பொது நிலையினர் திருச்சபையில் செயற்பாட்டு வினை முதல்களாகவே இருப்பது கடவுள் கருத்தாகாது. தாங்களும் அனுமதி அளித்தாற்போல் பொதுநிலையினர் இன்று வகிக்கும் செயப்படுபொருள் நிலை, வேறெதையும் விட அதிகமாகத் திருச்சபைக்குத் தீங்கு இழைத்திருக்கிறது எனலாம். பொது நிலையினர் ஏனோதானோவென்று இவ்வாறு இருப்பதனால் அவவிசுவாசிகள் ஆகின்றனர். பங்கு, பணி அற்ற நிலையில் திருமறையைப் பொறுத்த அளவில் ஒருவருக்கு அக்கறை ஏற்படுவது மிகக் கடினம்.''

ஆங்கில மூலம் :

MESSENGER OF ST. ANTHONY, PADUA
(NOVEMBER 1983)
BY EDWARD R. WALSH

தமிழில் : அருட்திரு. ஜோ. அ. கருணாகரர்,
சாவகச்சேரி.

★ ★ ★

இன்றோடு ஐம்பது ஆண்டுகள்

(எல்லோரும் சேர்ந்து பாடுங்கள்) என்ற இராகம்

பல்லவி

இன்றோடு ஐம்பது ஆண்டுகள்
எல்லோரும் சேர்ந்து பாடுங்கள்
இசைபாடுங்கள் இறைபாடுங்கள் புகழ்பாடுங்கள்

அனுபல்லவி

1. ஏனோ இன்று பரவசம் பரவசம்
பாடும்போது குதூகலம் குதூகலம்—2 (இன்றோடு)

சரணம்

ஆண்டவரின் பாதையில் அழைத்துச்செல்ல
ஆயிரம் நினைவுகள் உதயமாகும்
மாதாவின் சேனை யாழ்நகரிலே ஆக்கியே (இன்றோடு)

2. பாவத்தில் மூழ்கிய மாந்தர்களை
பரமனே மன்னித்து ஏற்றுக்கொள்ள
சேனையார் வழிதனை காட்டியே மாற்றியே (இன்றோடு)

3. மாதாவின் தலைமையில் சேனை கூடியே
மாநிலம் எங்குமே பணிகள் ஆற்றியே
சாத்தானை வீழ்த்தவே சைனியம் வந்துமே (இன்றோடு)

மரியாயின் சேனையும் சமூக சேவையும்

மாசில்லா மரியன்னையைத் தலைவியாகக் கொண்டு, அவள் தந்த மணிமாலையைத் தாரகமந்திரமாகக் கொண்டு, இத்தரணியில் தம்மை அவள் பணிக்கெனக் கையளித்த படையினர், தமக்கும் தம் இல்லத்துக்கும் மட்டுமே சேவை செய்வார்களானுல், அன்னையவளுக்கு மீட்புப் பணியில் உரிய இடத்தை வழங்காதவர்களாகிவிடுவர்.

மரியாயின் சேனையும், சமூக சேவையும் என்ற தலைப்பை விளங்குமுன் மரியும் சமூக சேவையும் என்ற தலைப்பை ஆழமாக விளங்குதல் வேண்டும். உலகை மீட்கும் இரட்சகர் பிறப்பை இறைத்தூதன்வழியாக அறிவித்தார் இறைவன். மரியாய் இந்தச் செய்தியைக் கேட்டதும் திடுக்குற்ருள்.இந்தப்பெரிய பணியைத் தான் ஏற்பதற்குத் தகுதியற்றவள் என அஞ்சினுள். ஆனல் இறைத்திட்டத்தை அறிந்த அவள், இறைவன் செயலுக்குத் தன்னை உடன்படுத்தினுள். மெசியா பற்றியும், அவர் தம் மீட்புப் பற்றியும், அதற்காக அவர் தொடரவேண்டிய பாதை பற்றியும் வேதாகமவாயிலாக அறிந்திருந்தாள். உலகை மீட்கும் உன்னத பணிக்கு அருகதையற்ற தன்னை இறைவன் தெரிந்ததினுல் - அதை உளமார ஏற்ருள். இதை விடப் பரந்த சமூக உணர்வு எங்குண்டு?

ஆம், என்று விடை பகர்ந்தவள்-தன் உதரத்துக் கனிக்கு வழியை ஆயத்தம் செய்ய இறைவனுல் தெரியப்பட்ட தன் பந்துவாகிய குடும்பத்தையும் ஏற்கிருள். இறைத்தூதன் வாக்கைக் கேட்டதும் விரைகின்ருள். மலைநாடு நோக்கி, வயதானவள் கருத்தாங்கி மகவை எதிர்நோக்கும் மகிழ்வில் பங்கு கொள்ளவும், அவளுக்கு உறுதுணையாய நின்று உதவிடவும் விரைகின்ருள். என்னே அவளது பிறரன்பு! சமூக உணர்வு!!

சமூக சேவை செய்வதற்கு - முதலில் சமூக உணர்வுவேண்டும். நோயைத் தெரியாமல் மருந்தைக் கொடுக்க முடியுமா? சமூகத்தின் தேவைகள், அதன் பிரச்சினைகள், எதிர் நோக்குகள், தெரியாது சேவையுள் நுழைவதெப்படி? கானு ஊர்த் திருமணத்தில் என்ன நடந்தது? வரவேற்கப்பட்டவர் கட்ட வேண்டிய இரசம் இல்லை. நானும் வரவேற்கப்பட்டவள், எனக்கென்ன அக்கறை, பிறரைப்போல நானும் ஒருவள் என்று பேசாதிருந்தாளா? இல்லை, இரசம் போதாமையால் அவர்கள் பட்ட இக்கட்டான நிலையை உணர்ந்தாள். வந்தவர்கள் வாயில் வந்தபடி பேசும் இழிசொல்லுக்குத் தம்பதிகள் ஆளாவார்கள் என்பதை உணர்ந்தாள். உணர்ந்தாலும் செயற்படாதிருக்க வில்லை. உணர்ந்ததைச் செயற்படுத்த வழி தேடினுள். தன் மகனின் வல்லமையையும் உணர்ந்தாள். தேவையையும், தேவையைத் தீர்க்கும் வழிமுறையையும் இணைத்துச் செயற்பட்டாள், சமூகமரபை அறிந்தவள் என்ற வகையில் மணமக்கள் மதிப்பைக்காக்க முயன்ருள்.

— அருட்செல்வி சோபியா —

சமூக உணர்வு ஏன் இருக்கவேண்டும்? உலகில் நாம் தனித்து வாழவோ, வளரவோ முடியாது. சமூகத்தில் உள்ள அமைப்பு, சமூகக் கலை கலாச்சாரம், பண்பாடு, பொருளாதார நிலை இவற்ருேடு ஒட்டியே வாழ வேண்டும், திரியேக கடவுளில் நம் வாழ்வைக் கட்டும் நாம்-அறிந்த மூவொரு கடவுளின் அன்பு, பகிர்வு, ஐக்கியத்தின் உணர்வில் நம் வாழ்வை அமைக்கவேண்டும். அன்பு செய்தல் என்பது ஒரு தனி மனிதனுடன் தங்கும் தத்துவமல்ல. அது இறைவனையும், அயலவனையும் சாரும், பிறனை அன்புசெய்தல் என்பது அவனது தேவைகள் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள். தவிப்புகள் என்பவற்றுக்கு உணர்வுள்ளவர்களாயிருத்

தலையே குறிக்கும். 'அழுவாரோடு அழுங்கள், மகிழ்வாரோடு மகிழுங்கள்' என்றால் சமூக உணர்வின் செயற்பாட்டையே சுட்டிக் காட்டும்.

மரியாயைத் தம் தலைவியாகக் கொண்டவர்கள், தம் வாழ்க்கையில் அவள் மாதிரிகையைக் கைக்கொள்ளும் கடப்பாடுடையவர்களாகின்றார்கள். சமூகமாகிய குடும்பம், சமூகமாகிய திருச்சபை - என்பவற்றில் அன்பு கொண்டு, கிறிஸ்துவின் வாழ்வை இங்கு ஆழப்படுத்த, மரியன்னையின் துணையோடு, அவள் மக்கட்குச் சேவையில் தம்மைக் கட்டுப்படுத்துபவர்களே சேனையாளர். சேனைமூலமாகச் சமூகத்தில் அப்போஸ்தலப் பணி புரியப்படுகின்றது. வியாதியஸ்தரைச் சந்தித்தல், குடும்பத் தரிசிப்பு, தனிப்பட்டவர்களையும் வயோதிபர்களையும் சந்தித்தல், முறிந்த குடும்பங்களைச் சீர்படுத்தல், செபமாலைப் பக்தியைப் பரப்பல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக, மனித தொடர்புகளின் ஊடாக, இறையுணர்வையும், கிறிஸ்தவ மதிப்பீடுகளையும், மரியாய் பக்தியையும் ஆழப்படுத்துகின்றனர் சேனையாளர். சமூகத்தில் மக்கள் அன்புடனும் பண்புடனும், சகோதரத்துவத்துடனும் வாழவேண்டும். இதற்காக வழிகளைச் செய்வதோடு இறைமக்களாக வாழவும், மரியின் வேண்டுகோளை வாழ்வில் கடைப்பிடித்துவாழ செபம், தபம் என்பவற்றின் கருத்துக்களையும் மறைமுகமாகத் தெரியவைக்கின்றனர் சேனையாளர்.

இன்றைய சமூகம், எத்தனையோ சூழல்களுள் உழன்று உலகப் போககில் உருண்டோடுவதனால் இறையுணர்வையும், கிறிஸ்துவ மதிப்பீடுகளையும் மறந்து-மனித மதிப்பீடுகளில் தம்வாழ்க்கையை அமைக்கின்றது. மரியாயின் படையினர் தம்மிடையேயுள்ள ஆழமான செபவாழ்வு, கிறிஸ்துவ வாழ்வு சேவை மனப்பான்மை இவற்றால் இச் சேவைக்கு வேண்டிய இயக்காற்றலைப் பெறுகின்றனர். இறைவனில் நாம் பிள்ளைகள், கிறிஸ்துவில் நாம் சோதரர் மரியன்னையின் மீட்கப்பட்ட மக்கள் என்ற வகையில் அவர்கள் சேவை சாதி, சமய அடிப்படையைத் தாண்டி, சிறியோர் பெரியோர் என்ற நிலையைத் தாண்டி அனைவரையும் அரவணைக்கும் தன்மையது. மரியின் வாழ்வில் அமைந்த பிறரன்பு, எதற்கும் தயாரான நிலை துன்பத்தில் நீடிய பொறுமை, அவமானங்களில் கடைப்பிடித்த தாழ்ச்சி, இறுதிவரை இயேசுவின் பாடுகளில் பங்கு இப்பேர்ப்பட்ட மனநிலைகளையே அவளின் படையினர் தம் ஆயுதமாகக் கைக் கொண்டு பணித்தளம் நோக்கி விரைகின்றனர். உதாசின வார்த்தைகள் புறக்கணிப்பு, ஒத்துழையாமை இவற்றைக் கண்டு அஞ்சாது மரியின் மனநிலையைக் கடைப்பிடித்தும் சேவை புரிகின்றனர்.

மரியின் படையினர் பெருகவும், மரியாயின் மனநிலையுடன் பணிபுரியவும், அவள் மூலமாக அவள் மைந்தனை அடையவும் வேண்டிய அருள்களை - அவர்கட்காய் செபிக்கும் உதவி அங்கத்தவர் தம் செபத்தால் அடைந்து கொடுக்கின்றனர்.

மரியாளின் சேனையாளர் பங்குக் குருவுக்கும், பங்கின் பணிகட்கும் ஊற்றும் உறுதுணையுமானவர்கள். பங்கைக் கட்டும் பணியில் பங்குக் குருவுடன் கைகோர்த்துச் செயற்படுகின்றனர். திருச்சபை வளர்ச்சியில் மரியாயின் சேனையின் பங்கு பெரும் இடத்தை வகிக்கின்றது.

மரியன்னையோடு ஒருமித்துச் செல்லாதவர்களுக்கு ஒரு வார்த்தை :
''நீ நன்றாக ஓடுகிறாய்; ஆனால் வழிதவறி ஓடுகிறாய். இறுதியில் எங்கே போய்ச் சேர்வாயோ தெரியவில்லை.''

— பெத்தித்தலோ

எடல் குயின்

(மரியாயின் சேனை அப்போஸ்தலி)

— மாகிறேட் எஸ்பிரியர்

கத்தோலிக்க திருமறையின் உத்தம புதல்வியாக, மரியாயின் சேனையின் சிறந்த அப்போஸ்தலியாகத் திகழ்ந்தவள் எடல் குயின் என்னும் வீரமங்கை. பரிசுத்த வேதாகமத்திலும், கத்தோலிக்க ஏடுகளிலும் பல வீரப் பெண்களின் வரலாற்றைப் படிக்கின்றோம்.

இஸ்ராயேல் மக்களை, அசிரிய மன்னனுடைய கையில் இருந்து விடுவிக்க பகைவனின் பாளையத்துக்குச் சென்று ஆண்டவருடைய வல்லமையினால் படைத்தளபதி ஒளோபொனசின் தலையை வெட்டி, அவனைக் கொன்று வீரத்துடன் திரும்பினாள் யூதப் பெண் யூதித்.

உண்மையான இறைவனுக்கு மட்டும் தலைவணங்குவோம் என்று அந்தியோச்கஸ் மன்னன் முன்னிலையில் சூளுரைத்து தன்னுயிரையும் தனது பிள்ளைகளின் உயிரையும் கொடுக்க முன்வந்தாள் மக்கபேயர் என்னும் ஏழு பிள்ளைகளின் தாய்.

1925ஆம் ஆண்டில் மெக்சிக்கோ நகரில் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வாலிபன் ஒருவன் வேதத்தை மறுதலிக்கும்படி வற்புறுத்தப்பட்டு அவனது தாயின் முன்னிலையிலேயே துன்புறுத்தப்பட்டான். இதனைக் கண்ணுற்ற அவன் தாய் "மகனே உன்னைக் கொன்றாலும் சரி வேதத்தை மறுதலியாதே. உயிரைவிட விசுவாசமே மேலானது" என்று கூறித்தன் மகனை உற்சாகப்படுத்தினாள்.

இவ்வாறு நம் திருமறைக்குப் புகழ் ஈட்டிக் கொடுத்தார்கள் பல வீர மங்கையர்கள். ஆனால் சேவை என்னும் செந்தணலாகத் தன்னை எரித்து, இறை பணிக்காகத் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து, திருச்சபை வியப்புறும் வகையில் சாதனைகள் பல புரிந்து, வீர வரலாறு படைத்தவள்தான் எடல் குயின்.

இவள் அயர்லாந்து தேசத்தைத் தாயகமாகக் கொண்டவள். வேத விசுவாசத்தில் உறுதியும், ஆன்மீக வாஞ்சையும் கொண்ட அயர்லாந்து நாட்டின் பெருமைக்கு மேலும் மெருகூட்டினாள் எடல் குயின். இவள் தியாகத்தின் சின்னம். எடல் வெய்ஸ் என்பது ஒரு மலர். இவளுக்குப் பொருத்தமாக அமைந்த பெயர். பனி படர்ந்த மலை உச்சியில் வளரும் இம்மலரைப் போன்று இவளும், பெண்மைக்கு களங்கம் ஏற்படாமல், வாழ்வின் தூய்மையும், புண்ணிய நெறியில் உச்ச நிலையும் அடைந்திருந்தாள்.

1921ஆம் ஆண்டு திரு. பிராங்டவ் அவர்களால் அயர்லாந்து நாட்டில் மரியாயின்

சேனை ஆரம்பிக்கப்பட்டது. இளமையிலேயே பிறர் அன்புப் பணி புரிவதிலும், பிறரை மகிழ்விப்பதிலும் ஆர்வம் காட்டிய எடல் மரியாயின் சேனையில் சேர்ந்து, தன் முழுப் பலத்தோடும் சேவைபுரிய முன்வந்தாள். சேனையார்க்குரிய பண்புகள் யாவும் இவளிடத்தில் ஒருங்கே அமையப்பெற்றிருந்தது ஒரு சிறப்பு அம்சமாகும். பிரமாணிக்கம், ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய நற் பண்புகளே இவளை ஓர் சிறந்த சேனையாளராகப் பணி புரிவதற்கு உதவியது எனலாம். அன்பும் அறமும் முதலில் இல்லத்திலேயே பிறக்கின்றது. எடல் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்தபோதிலும் தன் குடும்பப் பொறுப்புக்களை மறக்கவில்லை, தனது குடும்பத்துக்காக தொழில் புரிந்து அவர்களையும் வாழ வைத்த உத்தமப் பெண்.

சேனையின் விருத்திப் பணியே, அதன் நோக்கத்தை நிறைவுபடுத்துகின்றது. அயர்லாந்து நாட்டில் வித்திடப்பட்ட மரியாயின் சேனை அதன் கிளைச் சங்கங்களை பல்வேறு நாடுகளில் நிறுவி, அதன் விருத்திப் பணிகளை மேற்கொண்டது. அவ் வேளைதான் எடல் மரியாயின் சேனையின் தூதுவராக, மத்திய, கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் பரந்த பகுதிகளுக்கு மரியாயின் சேனையை நிறுவுவதற்காகப் புறப்பட்டாள். அப்போது அவளுக்கு வயது 28. இளமை தரும் இன்பத்தையும், சொகுசான வாழ்க்கையையும் ஒதுக்கிவிட்டு மிகத் தொலைவிலுள்ள ஆபிரிக்க நாட்டுக்குச் செல்ல உறுதி பூண்டாள். பிரிவின் துயர், தனிமை, நீண்ட கடற்பயணத்தின் கஷ்டங்கள் மத்தியிலும் புன்னகை தவழ்ந்த வதனத்துடன் பிரயாணத்தைத் தொடங்கினாள். பொங்கி வரும் கடலலைகள் போல் அவளது நினைவலைகள் தோன்றி மறைந்தன. இவளிடம் காணப்பட்ட தெளிவான அறிவும், நிர்வாகத் திறமையும், அசைக்க முடியா மனத் திடனும், ஆழ்ந்த மனிதாபிமானமும் பொறுப்பான இப்பணியை மேற்கொள்வதற்கு உறு துணையாக இருந்தன. மேற்கு நாடுகளுடன் ஒப்பிடும்போது மத்திய, கிழக்கு, ஆபிரிக்க நாடுகள் கல்வி அறிவிலும் பொருளாதாரத்திலும், ஒழுக்கம், பண்பாட்டிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தன. எங்கு தேவை உண்டோ அங்கே சேவை வேண்டும் என்பதை உணர்ந்தவள் எடல். எனவே அங்கு சென்று துணிவுடன் பணி புரிந்தாள்.

1936ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் காலடி எடுத்து வைத்த எடல் குயினுக்கு அனைத்தும் சாதகமாக அமையவில்லை. மனிதனை மனிதனாக மதித்து வாழ்வதே உயர்ந்த பண்பாகும். ஆனால் இப்பண்பு அங்கு மிகக் குறைவாகவே காணப்பட்டது, சிக்கலான சூழ்நிலை, பல தரப்பட்ட மக்களினங்கள், மாறுபட்ட நாகரீகமும் வாழ்க்கை முறைகளும், முற்றிலும் வேறுபட்ட கால நிலை இவை அனைத்தும் அவள் மேற்கொள்ளவிருந்த சேனைப் பணிகளுக்கு இடையூறாக இருந்தன. எனினும் அவள் கொண்ட இலட்சியத்தைக் கைவிடவில்லை. இடையூறுகளைக் கண்டு தயங்கவில்லை. ''அக ஒளியைப் பெற்றுக் கொண்டவர்கள் புற இருளைக் கண்டு அஞ்சுவதில்லை''. அவ்விதமே ஞான வாழ்வில் நிறைவைப் பெற்றிருந்த எடலும் திடமனதுடன் பணிபுரியத் தொடங்கினாள். அன்பு உறவுக்காக ஏங்கித் தவிக்கின்ற பல உள்ளங்களை அவள் அங்கு கண்டாள். எனவே விவேகத்துடன் செயற்பட்டாள் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதையே தனது முதற் பணியாகக் கொண்டு மக்களைத் தியான வாழ்வுக்கு அழைத்தாள். மரியாயின் சேனையை நிறுவுவதன் மூலம்தான் மக்களிடையே ஐக்கியத்தையும் சமூகங்களிடையே உறவையும் வளர்க்க முடியும் என எண்ணித் துரிதமாகச் செயற்பட்டாள். மத்திய ஆபிரிக்காவிலும், நைரோபியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள நாகரீகமற்ற மக்கள், தோட்டத் தொழிலாளர், ஆடு மேய்ப்பவர்கள் போன்ற மக்களில் அதிக கவனம் செலுத்தினாள். துன்பச் சுமைகளைத் தாங்கி நிற்கும் ஏழை மக்களுக்கு இன்ப வழி தேடி உழைத்தாள். ''எனக்கு மிகவும் இன்பம்

தருவது பிறரன்பிற்காகத் துன்பப்படுவதே'' என்ற குறிக்கோளோடு வெய்யில், மழை பாராது மிகக் கடினமான பிரயாணங்களை மேற்கொண்டு பல பங்கு மக்களைச் சந்தித்தாள். வளமையிலும் வறுமையிலும் வாழக் கற்றுக்கொண்ட எடல் சூழ்நிலைக்கேற்ப தன்னை ஆக்கிக்கொள்ளும் தன்மை பெற்றவள். எனவே தனது கவலைகளை மறக்க ஆபிரிக்காவின் வனப்பு மிகு காட்சிகளில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து மகிழ்ந்திருப்பாள். செயற் திறனும், எல்லோர் உள்ளங்களையும் கவரும் தன்மையும், தாராள சிந்தையும் கொண்ட எடல், ஆபிரிக்க நாட்டு மக்களின் இதயங்களையும் கவர்ந்ததில் வியப்பில்லை. அவர்களை விசுவாச ஒளிக்கு அழைத்ததுடன் ஒவ்வொரு கத்தோலிக்கனையும் தேவ ஊழியத்துக்கும் அழைத்தாள். தேவ அன்னையின் கருவியாகிய 'சேனை' அப்போஸ்தலிக்க கடமையை நிறைவேற்ற உதவுகின்றது. என்பதை ஊழியங்கள் வழியாக எடுத்துக் காட்டினாள். மரியாயின் சேனையின் பிரசிடியங்களைப் பல இடங்களில் நிறுவி, சாதாரண மக்களையும் தேவ ஊழியம் புரிய அழைத்தாள், கிறிஸ்தவர்களைப் பூசைக்கு அழைத்தல், குழந்தைகளின் கல்வியைக் கவனித்தல், நோயாளிகளைச் சந்தித்தல், கெட்ட கிறிஸ்தவர்களை நேர்மைப்படுத்தல், ஞானோபதேசம் கற்றுக்கொடுத்தல் போன்ற பணிகளுக்கு வழிகாட்டி, கிறிஸ்தவர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தை ஊட்டினாள். இவள் ஆற்றிய அளப்பரிய பணியைக் கண்டு, மிஷனரிமாரினால் சாதிக்க முடியாதவற்றை இவள் சாதித்தாள் என்ற பாராட்டைப் பெற்றாள். ''நம்பிக்கை என்னும் நறுமணம் நிறைந்த உள்ளம் கொண்டவள் எடல் குயின்'' என்று மகா வந்தனைக்குரிய ஸ்யுனென்ஸ் ஆண்டகை அவர்கள் அவளை வாழ்த்தினார்.

இவளுடைய தன்னலமற்ற சேவை ஆபிரிக்க மக்களை வியப்பில் ஆழ்த்தியது. வெகு காலமாக ஐரோப்பியர்கள், ஆபிரிக்கர்களைத் தாழ்வாகக் கருதினர். இவ்வாறிருக்க ஒரு ஐரோப்பிய பெண்மணி தங்களுடன் சகோதர அன்புடன் பழகுவதையும், தங்களுக்காக உழைக்க வந்துள்ளதையும் அறிந்து உள்ளம் பூரித்தனர். ''சேனை ஒரு பங்கின் செல்வம்'' ஆகவே சேனைப் பணியின் அவசியத்தை உணர்ந்த ஆபிரிக்கநாட்டு மேற்றிராணிமார், குருக்களிடமிருந்து சேனையை திறுவுவதற்கான அழைப்பைப் பெற்றாள், எனவே இவளுடைய சேவையானது ஆபிரிக்க நாட்டின் ஏனைய பகுதிகளான மொம்பாசா, ஐான்சியா, உகண்டா, தங்கனீக்கா, போன்ற பிரதேசங்களைக் கடந்து மௌரீசியஸ் தீவு வரை பரந்தது. அவள் எங்கு சென்றாலும் அன்புடன் வரவேற்கப்பட்டாள். சென்ற இடமெல்லாம் சேனைக் கிளைகளை நிறுவினாள். சேனைப் பணிகளை வியந்து பாராட்டிய மகா. வந். ரிபேரி ஆண்டகை அவர்கள் ''நவீன உலகில் சேனை புதுமையான கருவி'' எனக் குறிப்பிட்டுள்ளார். மரியாயின் சேனையின் பயனாக தேவ அன்னை பல பெரிய புதுமைகளைச் செய்துள்ளார் என இன்னொரு குருவானவர் குறிப்பிட்டுள்ளார். ஆம், அவள் தேவ அன்னையின் அருமைப் புதல்வி; ஒரு புனிதவதி.

எடலின் 10 ஆண்டுகாலப்பணி, ஆபிரிக்க நாட்டுத் திருச்சபை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. எடல் இட்ட சிறுவிதை ஆல் என வளர்ந்து பயனளித்தது. 10 ஆண்டுகளில் 60 பிரசீடியங்களையும் 750 ஊழிய அங்கத்தவர்களையும் 5000 துணை உறுப்பினர்களையும் கொண்டு திகழ்ந்தது. அவள் ஆற்றிய அரும் பணிகளின் தொகுப்பு இவை. இது பெரும் சாதனை அல்லவா?

சகோதர சேனையாளர்களே! எடல் குயின் சேனைப் பணிகளில் அடைந்த வெற்றியின் இரகசியந்தான் என்ன? அவளது இடையறாத செபப் பற்றும், நற்கருணையின் மீது அவள் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியும்தான் அவளுடைய பணிக்கு ஊட்டம் அளித்தது. 'எங்களுடைய திறத்தினால் அல்ல, செபத்தினால் தான் மற்றவர்களுக்கு நன்மை செய்ய

வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளாள். அவ ளிடம் காணப்பட்ட அப்போஸ்தல ஆர்வம் எமக்குச் சவாலாக அமைகின்றது. எனவே ஆவலுடன் பணிபுரிவோம்.

இள நங்கையரே! திருமணமாகாத இளம் பெண் எடல் தான் பிறந்த பொன் னாட்டை விட்டு, வேற்றுநாட்டினருக்காக உழைக்க முன்வந்தாள் என்றால் உங்கள் ஈழ நாட்டை நீங்கள் எவ்வாறு வாழ வைக்கப் போகின்றீர்கள்? யாழ். மறை மாவட்டம் உங்கள் பணிக்காகக் காத்திருக் கிறது. மரியாயின் சேனை மூலம் பணிபுரிய மரியாள் உங்களை இருகரம் நீட்டி வரவேற் கின்றாள். உங்கள் பதில் என்ன? எடல் குயின் 38வது வயதில் பரமபதம் சேர்ந் தாள். எது அழிந்தாலும் தியாக வாழ்வு அழியாப் புகழ் பெறுவது உண்மை. எனவே எமக்கு வழிகாட்டும்படி எடல் குயின் மூல மாக மன்றாடுவோம். அவள் புனிதர் வரிசை யில் இடம்பெற இறைவனை வேண்டுவோம். எடல் குயினுக்கு எமது வீர வணக்கங்கள்.

மரியாயின் சேனையர்

படைப்பின் சிகரமாம் மனுக்குலத்தின்
மாண்புறு மங்கையாக இம் மண்ணுதித்து
மங்கா விளக்காய் ஒளிர்ந்திட்டாள்
மாபரன் யேசுவின் அன்னையாம் கன்னிமரி

மரியன்னையின் மாண்பினை ஒலிக்கும்
மணிகளெனத் திகழ்ந்துகொண்டிருக்கின்ற
மரியாயின் பெரும் சேனையரின்
மகிழ்வைத்தான் என்னென் றெடுத்துரைப்போம்

பொன்விழா ஆண்டை இங்கு
நுகர்ந்து நிற்கும் சேனையினர்
நுண்ணிேனோர் அனைவருக்கும் நல்
நூலாகத் திகழ்கின்றனரே

பசியால் வாடும் பாமர மக்களும்
பாசத்திற்காகத் துடிக்கும் பச்சிளம் குழந்தைகளும்
பரதவித்து நிற்கும் அகதிகள் அனைத்தும்
அன்னை மரியாயின் சேனையர்க்கே சொந்தமாம்

சேனையின் சேவை இச் செகத்தினில் சிறந்திட
சீரிய செயல்கள் நாம் செய்திட்டால்
சேயாம் யேசுவின் செவ்விய மலரிதழ்
சேயர் நம்மிலும் பதிந்திடச்செய்வாளே

— அருள்திரு A. M. ஸ்ரீபன் C. R.

மரியாளின் சிறப்பு

இருள் சூழ்ந்த பாருலகிற்கு ஒளியேற்றப் பிறந்தாள் அன்னைமரி. பாருலகை மீட்க மாதவனைப் பெற்றெடுத்தாள் மாமரி. எவராலும் சுமக்கமுடியாத சிலுவையை ஏற்றுச் சுமந்தாள் இரட்சகி. அருள் வரங்களின் அக்ஷி; மாட்சிகள் நிரம்பிய நீள்கடல். அற்புதங்களின் இருப்பிடம் என்று நாம் பலவாறு கூறிப் போற்றி வாழ்த்தத் தகுதியுடையவள் மரியாள்.

கலிலேயாவின் ஒரு மூலையில் அறியப்படாத ஒரு கிராமத்துக்குத்தான் இறைவன் கபிரியேல் அதிதூதனை அனுப்பினர். ''நசரேத்தில் இருந்து ஏதேனும் நன்மை வரமுடியுமா?'' என்று கேட்டார் நத்தானியேல். அந்த நசரேத்திலே வானமும் பூமியும் வியந்து போற்றும் செல்வம்; பரமபிதா இவ்வுலகின்மீது கொண்ட ஒப்பற்ற அன்பின் அறிகுறி ஒன்று அங்கிருந்தது. வானத்தையும் பூமியையும்விட மாட்சி பொருந்திய கன்னிகை ஒருத்தி சிறு குடிசையில் வாழ்ந்தாள். எல்லாம் வல்ல இறைவனை ஈன்றெடுத்தாள். சிறந்த உரோமையின் மாட்சியோ; ஏதன்சின் பெருமைகளோ அவளுடைய சிறப்புகளின்முன் ஒன்றுமில்லை. மனிதர்களின் மாட்சிகளோ; சம்மனசுகளின் மாட்சிகளோ அவளுடைய மாட்சிகளுக்கு நிகராகா. அந்தக் கன்னிகைதான் நம் அன்னை மரியாள்.

யேசுவின் தாயும், பரிசுத்த ஆவியின் தலைசிறந்த படைப்பும், உயிருள்ள கடவுளின் திருக் கோவிலுமாகிய கன்னி மரியம்மாள் அமைதியும் சாந்தியும் தாழ்ச்சியும் மிக்கவள். ஒரு தாயின் வயிற்றிலிருந்து குழந்தை பிறப்பதுபோல் பரிசுத்த ஆவியின் அருட் செயலால் மரியம்மாளிடமிருந்து திருச்சபை பிறந்தது. இந்தப் புதிய ஏவாள் இன்னும் திருச்சபையின் தாயாக விளங்கி அதைப் பாதுகாக்கின்றுள்.

மரியம்மாள் ஒரு கருவூலத்தின் காவலி. அக்கருவூலத்திலுள்ள செல்வம் யேசுக்கிறிஸ்துநாதர். யேசு அவளுக்குச் சொந்தம். யேசுவை அவள் பிறருக்குக் கொடுக்கிறுள். பரிசுத்த திரித்துவத்தின் திராட்சை இரச நிலவறையின் பாதுகாவலியாக விளங்குகிறுள் மரியம்மாள். பரிசுத்த ஆவி என்னும் திராட்சை இரசத்தை அவள் தான் விரும்புவோர்க்கு விரும்பியளவு பகிர்ந்து கொடுக்கிறுள்.

மரியாயின் சேனையாளரும் கன்னிமயம்மாள் உதவியை மன்றுடிக் கேட்டபிறகு, நன்மை செய்யக்கூடியது என்ன என்பதை மனதில் கண்டுபிடித்து; தங்கள் அப்போஸ்தலப் பணியைச் செபத்தாலும், சேவையாலும் ஆற்றி; இன்று மரியாயின் சேனை உலகமடங்கிலும் 'ஆல்போல் தழைத்துச்' செழிப்புற்றிருக்கிறது.

ஆன்மாக்களைக் கண்காணிக்கும் அலுவல் நம் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டவை. நாம் பிறருக்கு நம்மிடம் வருபவர்களுக்கெல்லாம் ஆன்ம உணவளிக்க வல்லமையற்றவர்கள். ஆனுல் மரியாள்மூலம் ஆண்டவரிடம் வேண்டினுல் அவர் நம் கைகளை நிரப்புவார். நம் முகத்தைத் திருப்பாது எந்த அலுவலையும் செய்ய முடியும். சுவைமிக்க உணவைக் கொடுக்க முடியும்.

மரியாள் வாழ்ந்த நசரேத்தூர் வீடு மிக எளிய வீடாக இருந்தது. அங்குள்ள பொருட்கள் மிக எளியவை. ஆனுல் அந்த வீடு அழகு வாய்ந்தது. வாழ்ந்த வாழுகின்ற தாய்மார், மனைவிமார்களுக்குள் மரியம்மாளைப்போல் சிறந்த ஒருவர் வேறில்லை. பண்பாடும், கைத்திறனும் ஒருங்கே அவளில் அமைந்திருந்தன. அவள் தன் குடும்பத்தில் செய்த ஒவ்வொன்றிலும் கைத்திறன் சிறந்து விளங்கியது. குடும்ப வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு



யாழ். கொமிற்சிய அங்கத்தவர்கள் — 9-2-86

யாழ். நிருவாகசபைத் தற்போதைய உறுப்பினர்

இடமிருந்து வலம் : சகோ. சிசிலியா றொட்றிக்ஸ் (*துணைத் தலைவர்*),
சகோ. ஜசிந்தா இராயப்பு (*துணைச் செயலர்*),
சகோ. வயலற் இம்மானுவல் (*தலைவர்*),
அருட்திரு. ஏ. சி. கிறிஸ்தோப்பர் (*ஆன்ம இயக்குநர்*),
சகோ. வ. சி. கிறிஸ்றி (*செயலர்*),
சகோ. நிர்மலவாசன் (*பொருளர்*).

செயலிலும் ஒரு தனிப்பட்ட வனப்பும் கவர்ச்சியும் இருந்தது. இதற்கெல்லாம் காரணம் மரியம்மாள் ஒவ்வொரு பொருளையும் கடவுளின் பொருட்டு தனக்கே உரிய சிறந்த முறையில் நேசித்து அந்த நேச உணர்ச்சியோடு எல்லாவற்றையும் செய்தாள்.

மரியாளின் சேவைக்கு அர்ப்பணம் செய்துள்ள மரியாளின் சேனை அங்கத்தவர்களாகிய நாம் அனைவரும் மரியாளின் சிறப்பான வாழ்க்கையைக் கடைப்பிடித்து; கடவுளின் உண்மையான நேச உணர்ச்சியோடு நமது கடமைகளையும் அப்போஸ்தலப் பணியையும் செய்வோமானல் இன்னும் பன்மடங்கு மரியாயின் சேனை பரவி உலகெங்கும் கிறிஸ்துவின் ஒளி பரவச் செய்வோம். மரியாயின் சேனைப் பொன்விழாக்கொண்டாடும் மகிழ்ச்சியான இக்காலகட்டத்தில், எங்கள் இலங்கையைச் சூழ்ந்திருக்கின்ற களவு, கொலை, கோபம், பகை, மோகபாவம் ஆகிய இருள் நிலைகளை அகற்றி; மரியன்னையைப் போல் தூய ஒளியை ஏற்றி வாழ்வோமாக. மரியாயின் சேனை வளர்க! அவளின் சேவை ஓங்குக! வாழ்க! வாழ்க! மரியாயின் சேனை.

கற்பிலொரு கன்னிகையாள்
கனிமொழியாள் வாழ்க!
குடும்பத்தின் குல விளக்கே
கன்னிகையாள் வாழ்க!
மாசு மறுவில்லாத நெஞ்சு
உடையாள் வாழ்க!
மாபரனைப் பெற்றெடுத்த
கன்னிமரி வாழ்க!

பாரிருளைப் போக்க வந்த
பரம் பொருளே வாழ்க!
அண்டசராசரம் எல்லாம்
ஆள்பவளே வாழ்க!
நீதியுறுஞ் செங்கோனின்
தூய தாயே வாழ்க!
நிகரற்ற பாருலகின்
செல்வத் தாயே வாழ்க!

இங்ஙனம்
இரணைதீவு வேதசாட்சிகளின் இராக்கினி
வளர்ந்தோர் பிரசீடியம்
திருமதி. தா. செல்ராணி
தலைவர்.

நாம் தியானத்தின் அமைதியில் தூய்மையும் ஒளியும் பெறவேண்டுமென்று யேசு திருவுளம் கொண்டார். ஒரு அறையில் பத்து நாட்களாக ஒருமனமாய்ச் செபத்தில் நிலைத்திருந்தபோதுதான் தூய ஆவியை பெறச் சீடர்கள் தகுதியுள்ளவர்களானார்கள். — 11ஆம் பத்திநாதர்.

மரியன்னை தன் மைந்தர்களையும் பற்றுறுதியுள்ள ஊழியர்களையும் ஆதரித்துப் பாதுகாக்கிறாள். படையைப்போல் அவர்களைச் சூழ்ந்து நிற்கிறாள்; அவர்களுடன் செல்கிறாள். — டி மொன் போர்த்

ஒரு கிறிஸ்தவன் செபிக்கும்போது கிறிஸ்துநாதர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் செபித்த செபங்களைத் தொடர்ந்து செபிக்கிறான். அவன் ஊழியம் புரியும்போது கிறிஸ்துநாதருடைய மீட்புப் பணியில் குறைவாயிருந்ததை நிறைவு செய்கிறான். — புனித யூத் அருளப்பர்.

மனம் மாறுகிறபோது....?

அவன் நடந்துகொண்டேயிருந்தான். வாழ்க்கை அவனுக்கு ஓர் கேள்விக் குறி. அன்பைத் தேடியலையும் அவனது ஒரே அவா...தானும் ஒரு மனிதனாக சமுதாயத்தில் வாழ்ந்து காட்டவேண்டும் என்பதே... அவன் பெயர் 'ரொபட்'. சொந்தபந்தம் என்ற உறவு இல்லாதவன். அவனுக்கு அவனே துணை. அவன் நடந்துகொண்டேயிருக்கிறான்...அவனது சிந்தனைப்பறவை மனவானில் சிறகடித்துப் பறக்க அவனது பழைய வாழ்க்கை நிழற்படமாகத் தெரிகிறது.

குடி, கூத்து, கொள்ளை இவற்றின் கதாநாயகன் அவன். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவன். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த அவன் தன்னிச்சையாக நடக்கத் தொடங்கினான். இது யாரின் வேலை? இந்த சமுதாயத்தின் வேலை! சிறுவனாக இருந்தபோது அவன் பட்டபாடு...எத்தனை பேரின் கால்களைப் பிடித்திருப்பான் வேலைக்காக. எத்தனை பேரிடம் அடிவாங்கினான் பேச்சு வாங்கினான் பிச்சை எடுக்கப் போய்......... முடிவு அவன் ஒரு திருடனாக மாறினான். நல்லனாக வாழ வேலை கேட்டு பிச்சை எடுத்த அவன்..இன்று..?

அவன் நல்லவனாக வாழ ஆசைப்பட்டாலும் சமுதாயம் விடவில்லை. இது நல்லவர்களை உருவாக்குவது கடினம். ஆனால் நல்லவர்களையும் தீயவர்களாக உடன்மாற்றி விடுகிறது.

மனச்சாட்சி இல்லாதவன் மனிதனா..? ரொபட் மனச்சாட்சியுள்ளவன். அவனும் மனிதன்தானே? அவனது மனச்சாட்சி குத்தியது..........

''சீ...நீயும் ஒரு மனிதனா...? ஒரு கிறிஸ்தவன் அல்லவா நீ .? இயேசு மக்களுக்காக மரித்தார்; நீ மக்களை அல்லவா மரிக்க வைக்கிறாய். நீ திருடுகிறாய். பொருளை இழந்த எத்தனை குடும்பங்கள் பசியால் அழுகின்றன. பார்த்தாயா...? பார். நன்றாகப் பார்..........இன்று அவன் புதிய மனிதன்.

ஆம் மனச்சாட்சி அவனை மாற்றிவிட்டது. அந்த தேவாலயத்தின் அருகே அவன் சென்று கொண்டிருந்தான். பசிக்களை அவனை சோர்வுறச் செய்திருந்தது.

''திருகோணமலை புனித மரியாயின் சேனையினரின் 23வது கூட்ட அறிக்கை—மேற்படி கூட்டம்...''

அந்த ஒலி அவனைக் கட்டுப்படுத்தியது. அவன் அங்கேயே நின்றான்.

கூட்டம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது......

'மரியாயின் சேனையினரின் முக்கிய கடமைகள்' எனும் தலைப்பில் சில கடமைகள் வாசிக்கப்பட்டன.

''அகதிகளாக அநாதைகளாக உள்ளோருக்கு உதவுதல். திருவருட்சாதனங்கள் பெறாத கிறிஸ்தவர்கள் உடன் திருவருட்சாதனங்கள் பெற வைப்பது. வீடு வீடாக செபமாலையைப் பற்றியும் அதன் சிறப்பையும் பயனையும் எடுத்துக் கூறுவது ...... இப்படியே தொடர்ந்து வாசிக்கப்பட்டது.

ரொபட்டின், உள்ளத்தில் ஒரு ஒளி. இதுதான் அருள் ஒளியா. ''நாமும் மரியாயின் சேனைக்கூட்டத்தில் சேர்ந்து ஏன் பணியாற்றக்கூடாது? தம்மை சிலுவையில் அறைந்தவர்களை இயேசு மன்னித்ததுபோல் என்னை ஒதுக்கிய இந்த சமுதாயத்தை மன்னித்து நானும் உதவி செய்யவேண்டும். இன்றில் இருந்து நானும் ஓர் கிறிஸ்தவனாக வாழவேண்டும்......'' இந்த எண்ணங்கள் எழ எழ ரொபட் ஒரு புதிய மனிதனாக மாறிக்கொண்டிருந்தான். அசுத்தமான தீயகொள்கையுடைய அவனது மனம் இயேசுவின் பால் மாறிக்கொண்டிருந்தது. எந்த மனிதனின் அசுத்தமனமும் நல்லதாக மாறுகிறபோது அந்த மனிதனுமே தெய்வமாகின். மரியாயின் சேனைக் கூட்டத்தில் சேருவதற்கு அவனது கால்கள் கூட்டம் நடந்துகொண்டிருக்கும் மரியாள் தேவாலயத்தை நோக்கி விரைந்தது.

இன்றில் இருந்து அவனும் தெய்வம், ஆம் மனங்கள் மாறுகிறபோது அனைவரும் தெய்வங்களே......

(யாவும் கற்பனை)

—வீ. மைக்கல் கொலின், திருமலை

பேட்டியில் கண்ட புதையல்

மரியாயின் சேனை முதிய ஊழிய அங்கத்த வருடன் பேட்டி :

சகோதரரே உமக்குச் சமாதானம் உண்டாவதாக. நீர் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் பிரசீடியத்தில் ஆரம்பகால முதல் இருந்தவராக அறிகிறோம். நீர் எவ்விதம் சேனையின் ஊழிய அங்கத்தினனைச் சேர்ந்தீர்.

எங்கள் முன்னாள் பங்குத்தந்தை J.A. இராசநாயகம் சுவாமியவர்கள் ஒரு சேனையாளை என்னிடம் அனுப்பி கூட்டத்துக்கு வரும்படி பணித்திருந்தார். நான் எதுவித தடங்கலும் சொல்லாமல் சேனைக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டேன். பங்குத் தந்தையோ சேனையாட்களோ எமது நன்மையின் பொருட்டே செயற்படுபவர்கள், ஆனபடியால் ஒன்றையும் விசாரியாது அமைந்து போவது நல்லது.

பின் மரியாயின் சேனையைப்பற்றித் தெரிந்து கொண்டீரா?

கூட்டங்களில் வாசிக்கப்படும் ஞான வாசினை, ஆன்ம இயக்குனரின் புத்திமதி, கூட்டச் செபங்கள், கூட்ட நடபடி, கைப் புஸ்தகப் படிப்பு, ஊழியஞ் செய்தல் முதலியவற்றின் மூலம் சேனையைப்பற்றி நன்றாக அறிந்துகொண்டேன் சேனையின் ஒழுங்குகளும், நிர்வாக அமைப்பும் எவரையும் வசிகரிக்கக் கூடியனவாயிருப்பதைக் கண்டேன். மரியாயின் சேனையின் அழகுதான் என்னே! அதை நான் மிகவும் நேசித்தேன். அதன் நிமித்தம் எவ்வித தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தேன்.

சகோதரரே சேனையின் நோக்கங்கள் ஏவை எனக் கூறுவீரா?

சேனையின் நோக்கம் அங்கத்தினரைப் புனிதப்படுத்துதான். இந்நிலையை அங்கத்தினர் கொள்வதற்கு இரண்டு பிரதான கடமைகளை அது விதித்துள்ளது. அவை செபமும் தேவ ஊழியமுமாகும் செபம் எமது ஆன்ம இரட்சணியத்துக்கு இன்றியமையாததென்று அறிவோம். அத்துடன் தேவ சேவையும் சேரும்பொழுது ஒரு ஆன்மா எவ்வளவு புனிதமாகுமென்று சேனை அறிந்துதான் இந்த இருகடமைகளையும் அங்கத்தினருக்கு விதித்துள்ளது.

ஆம். கிறிஸ்துநாதரும் கிறிஸ்தவர்கள் மட்டில் இதே நோக்கத்தைத்தான் கொண்டுள்ளார். எனவே அங்கத்தினருக்கு இந்நோக்கத்தை அடைவதற்கு சேனை ஏதாவது கடமை விதித்துள்ளதா?

ஆம் வாரந்தவறாது நேரந்தப்பாது கூட்டங்களுக்குச் சமூகம் கொடுப்பது. சேனையில் குறிக்கப்படும் பிரயாசை ஊழியங்களை தேவ தாய் யேசுநாதருக்குச் சேவை செய்த மனப்பான்மையோடு தவறாது செய்வது. ஒவ்வொருநாளும் சங்கிலிச் செபம் சொல்லுவது. கூட்டத்து நடவடிக்கைகளையும் சேனை ஊழியத்தின் பொழுது அறியும் காரியங்களையும் இரகசியமாய் வைத்துக் கொள்ளுவது. இந்த நான்குமே பிரதான் கடமைகளாகும்.

பிரசீடியங்களைப் பெருக்குவதில் ஏதாவது பங்காற்றியிருக்கிறீரா?

நான் தொழில் புரியச் சென்ற இடங்களிலெல்லாம் புதிய பிரசீடியங்களை நிறுவினேன். மூன்று வளர்ந்தோர்க்கான பிரசீடியங்களையும் நான்கு கலாசாலைப் பிரசீடியங்களையும் தொடங்கி நடத்தினேன். ஒரு முதியோர் பிரசீடியத்தை நடைபெறச்

செய்வதற்காக 16 மைல் தொலேவில் உள்ள இடத்திற்கு கிழமை தோறும் புகையிரதத்தில் பிரயாணம் செய்திருக்கின்றேன்.

சேனையில் நீர் ஊக்கமாய் தொண்டு செய்திருக்கிறீர் போலத் தோன்றுகின்றது. இதற்கு என்ன காரணமென்று சொல்ல முடியுமா?

சேனேயாள் எப்போதும் ஆயுதமும் கையுமாய் இருக்க வேண்டும். சேனையின் செயற்பாடுகள் சேனயாளே ஓய்ந்து இருக்க முடியாதபடி செய்கின்றன, வாராந்த கூட்டம், வாராந்த ஊழியம். வருடாந்த விழாக்கள் ஞான ஒடுக்கம், வேறு கருத்தரங்குகள், நாளாந்த கடமைச் செபம் இன்னும் பல பத்தி முயற்சிகளும் ஊழியங்களும் சேனயாளுக்கு உண்டு. இயந்திரத்தின் பகுதி எப்போதும் இயங்கிக் கொண்டிருந்தாலே யந்திரம்சரிவர வேலே செய்யும். எனவே ஒவ்வொரு சேனயாளும் ஊக்கமாய் வேலே செய்யவேண்டியது தானே.

நீர் மேற்கொண்ட சேனே ஊழியத்தில் துணிகரமான ஒரு ஊழியத்தைச் சொல்ல முடியுமா?

கணவன் ஒருவன் சொந்த மனேவியை விட்டு ஒரு பிறமதப் பெண்ணோடு கூடி வாழ்ந்து நான்கு பிள்ளேகளுக்குத் தந்தையாயிருந்தான். அக்குடும்பத்தைச் சீர்செய்ய முடியாதிருந்தாலும் பிள்ளேகளுக்கு திருமுழுக்குக் கொடுப்பிக்கலாம் என்று கருதப்பட்டபடியால் எனக்கும் வேருெரு அனுபவம் மிக்க சேனயாளுக்கும் இவ்வேலே குறிக்கப்பட்டது. நாம் பல முறை சந்தித்தும் பெற்ருேர் சம்மதிக்கவில்லே. ஒரு நாள் நாங்கள் அவர்களுடைய வீட்டுக்குப்போய் மூத்த பையனே சுவாமி பார்க்கவேண்டுமாம் என்று சொல்லி எனது சைக்கிளில் ஏற்றிக்கொண்டு கோவிலுக்கு வந்து ஞானஸ்நானம் கொடுப்பித்து விட்டு வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் விட்டுவிட்டோம். மகன் மூலம் மகனுக்கு திருமுழுக்குக் கொடுகப்பட்டதென்பதை அறிந்தபெற்ருேர் சந்தோஷப்பட்டனர். இப்பொழுது அந்தப் பையனும் அவனுடைய சகோதரர்களும் கத்தோலிக்க குடும்பஸ்தராயிருக்கிருர்கள். நாம் இம்முறையாய் முயற்சி செய்யாவிடில் அவ்வளவு பேரும் மனம் திரும்பியிருக்க மாட்டார்கள். சில வேளேகளில் நன்மை செய்வதற்காக இப்படியும் செய்யத்தான் வேண்டும்.

சேனேயால் உமக்கு ஏதாவது நன்மைகள் உண்டாயிருக்கிறதா?

சேனேயாள் என்ருல் கூட்டத்தின் பொழுதும் ஊழியஞ் செய்யும் பொழுதும் மாத்திரம் சேனேயாள் அல்ல அவன் சீவியம் முழுதும் சேனேயாளனுகவே இருக்கிருன். மரியாளுக்கு நாங்கள் தொண்டு செய்தால் எங்களுக்குரிய வேலேகளே அவளே பார்த்துக் கொள்ளுவாள். நானும் எனக்குச் சேர்ந்ததும் அவளுக்கே சொந்தம். நான் புதிய வீடு கட்டுவதற்கு தேசிய வீடமைப்புப் பகுதியில் கடன்கேட்டு விண்ணப்பித்தேன். பெருந்தொகைப் பணமும் செலவு செய்து மிகவும் பிரயாசைப்பட்டுப் பார்த்தேன் காரியம் கைகூடவில்லே. எனவே அவ்வேலேயைக் கைவிட்டுவிட்டேன். ஒரு நாள் சேனேக் கூட்டத்தின் பிறகு ஒரு சேனே நண்பன் எனது புது வீடு கட்டும் விஷயமாய் என்னே விசாரித்தார். நான் எல்லாம் கைகழுவி விட்டேன் என்றேன். அவர் என்னேக் கோபத்தோடு பேசிவிட்டு கடன் விபரங்களே எழுதி தனக்குத் தரும்படி சொன்னுர். நான் எழுதிக் கொடுத்தேன் என்ன ஆச்சரியம் ஒருகிழமையால் எனக்கு கடன் சம்பந்தமான கடிதம் தேசிய வீடமைப்புக் கடன் கந்தோரில் இருந்து வந்தது கூடிய கெதியில் பணமும் கிடைத்தது. கெதியில் நல்ல வீடொன்றுக்குச் சொந்தக்காரனுகிவிட்டேன். நான் பெற்ற ஆன்மீக நன்மைகளேவிட எனது குடும்பத்தில் இன்னும் எத்தனேயோ நன்மைகளே மரியாயின் சேனேயாள் என்ற முறையில் நான் பெற்கொண்டதை உணர்ந்து கொண்டேன்.

சேனையைப்பற்றி உமது அனுபவத்தி லுள்ள அபிப்பிராயம் சொல்லும் பார்ப் போம்

உத்தமனாக வாழ்ந்து தனது கதியை அடைய விரும்பும் ஒரு கத்தோலிக்கனுக்கு சேனை உத்தம வழிகாட்டியாகும்.

கிறிஸ்துநாதர் தமது அப்போஸ்தலரை யும் சீடர்களையும் இருவர் இருவராக அனுப்பி எவ்வளவோ நன்மைகள் செய்வித் தார். அதுபோல ஒரு பங்குத் தந்தை தக்க முறையாகச் சேனையைக் கையாளுவாராயின் எவ்வளவோ நன்மைகளைத் தம் பங்கில் காண்பார். வணக்கம் தேவன் உம்மை ஆசீர் வதிப்பாராக.

2-ம் வத்திக்கான் பொதுச் சங்கம் பொது நிலையினரிடம் எதிர்பார்க்கும் மறைபணிக் குப் மிகப் பொருத்தமான தொன்றாக மரி யாயின் சேனை விளங்குகிறது. குறிப்பாக இல் லறத்தாருக்கென்றே அமைக்கப்பட்டதாகும் என மனப்பூர்வமாக நம்புகிறேன் மரியாயின் சேனை வாழ்க. சரி சகோதர, உம்மைச் சந் திக்க அருள் புரிந்த கடவுளுக்கு நன்றி. உம் மைப் போன்ற ஆர்வமும் ஆவலும் கொண்ட வர்கள் பலர் இதற்கு முன்வர வேண்டு மென்பதே எனது தீராத ஆசை. அன்பின் வணக்கம். சென்று வருகிறேன் தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக.

— மலர் ஆசிரியர்

தேவ அன்னை நல்லவள் — தேவனுடைய தாயவள்
தேடி எம்மை அணைப்பவள் — தேசமெல்லாம் காப்பவள்

தேவகுமாரனைப் பெற்றவள் — தேனிலும் இனிமை மிக்கவள்
தேவ ஆவியின் கொடைகளால் — தேகம் நிரம்பப் பெற்றவள்

தேவனுக்கு அடிமையானவள் — தேவமகனுக்குத் தாயுமானவள்
தேற்றி எம் கவலை தீர்ப்பவள் — தேன் மழைபோல் அருள் பொழிபவள்

தேய்ந்து போகும் சேயின் — தேவைகள் பூர்த்தி செய்பவள்
தேவமகன் பணியைத் தொடர்ந்தும் — தேனை எமக்கு ஊட்டுபவள்

— உடுவில் செபஸ்

ஒழுங்கான கிறிஸ்தவ வாழ்க்கை நடந்த மக்களுக்குத் துணைசெய்ய வேண்டு மென்பதுதான் சேனையின் நோக்கம்.

— சுவனென்ஸ்

கடவுள் அருள் எப்பொழுதுமே ஒரு சிலர் மூலமாகத்தான் செயலாற்று கிறது. ஒருசிலரின் அறிவுக் கூர்மை, திடநம்பிக்கை, மனவுறுதி ஆகிய வற்றைக் கடவுள் தமக்குகந்த கருவிகளாகக்கையாள்கிறார்.

— காட்டினல் நியூமன்

சேனையின் வளர்ச்சியும் எதிர்காலமும்

சூரிய உதயத்துக்குமுன் வானில் ஒளி மெல்ல மெல்லப் பரவுவதைக் காண்கிறோம். பூமி முழுவதும் இருண்டு கிடப்பது போல் தோன்றுகிறது. ஒளி சிறிது சிறிதாகவே பரவுகிறது. ஆனால் இருந்தாற்போல் பூமி முழுவதும் ஒரே ஒளிவெள்ளம். இது போன்றதுதான் சேனையின் வளர்ச்சி.

சேனையின் ஆரம்பம் மிக எளிமையானது. 1921ம் ஆண்டில் டப்ளின் நகரிலுள்ள மைரா இல்லத்தில் சேனை எவ்வாறு ஆரம்பித்தது என்பதை நாம் அறிவோம். பிராங் டவ் என்னும் வாலிபரும் அவரது ஆர்வத்துக்கு ஈடுகொடுக்கும் மங்கையர் சிலரும் கூடி எது வித திட்டமோ ஆயத்தமோ இன்றி உருவானதுதான் மரியாயின் சேனை. அதன் ஆரம்ப கால வளர்ச்சி மிகத் தாமதமாகவே இருந்தது. முதல் ஐந்து வருடங்களில் 9 பிரசிடியங்களே நிறுவப்பட்டன. ஆறுவது ஆண்டிலே அது அடுத்த மேற்றிராசனத்துக்குப் பரவியது. ஏழாவது ஆண்டில் அது அடுத்த நாட்டுக்குப் பரவியது. எட்டாவது ஆண்டில் முதல் ஆண்கள் பிரசிடியம் உருவாகியது

சேனை இன்று முளைத்து, நாளை வளர்ந்து மறுநாள் கருகிப்போகும் காளான் அல்ல. மெல்ல மெல்ல வேரூன்றி, கிளைபரப்பி ஆயிரம் ஆண்டு நிலைத்திருக்கும் ஆலமரம் ஆகும். சேனையின் வளர்ச்சியானது எப்போதும் கிரமமானது. சேனை அன்று பாப்பரசராக இருந்த XIம் பத்திநாதரின் ஆசியைப் பெற்றபோது உலகில் பல நாடுகளில் பரவியிருந்ததுடன் தனது குழந்தைப்பருவம் நீங்கி முதிர்ச்சி பெற்ற இயக்கமாக விளங்கியது. 1932ல் டப்ளின் நகரில் சர்வதேச நற்கருணை மகாநாடு நடந்தபோது யாத்திரீகர்களுக்கு சேனையார் ஆற்றிய பணி சேனையை உலகறியச் செய்தது என்று கூறலாம்.

அடுத்த கட்டமாக உலகெங்கும் சேனை தீவிர வளர்ச்சி அடைவதைக் காண்கிறோம். சீனாவை இதற்கு ஒரு நல்ல உதாரணமாகக் கூறலாம். 1947ம் ஆண்டுதான் அங்கு சேனை அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் ஒரு வருடத்தில் ஆயிரம் பிரசிடியங்கள் நிறுவப்பட்டன. இந்த வியத்தகு வளர்ச்சி பிராங் டவ்வையே திகைக்க வைத்தது. இந்த வேகமான வளர்ச்சி தரக்குறைவான பிரசிடியங்களை உருவாக்கிவிடுமோ என அவர் அஞ்சினார். ஆனால் தேவதாய் தனது திட்டத்தை அறிந்திருந்தாள். இரண்டே ஆண்டுகளின்பின் கொம்யூனிஸ்ற் ஆட்சியினர் சட்டவிரோதமான இயக்கம் எனத் தடைசெய்தனர். ஆனால் அந்தக் குறுகிய காலத்துக்குள் ஆதிக் கிறிஸ்தவர்கள் போன்ற வேதசாட்சிகளைச் சேனை உருவாக்கிவிட்டது.

— வைலற் இம்மனுவேல் —

சேனை மிக விரைவாக வளர்ச்சி பெற்ற மற்றொரு நாடு பிலிப்பைன் தீவுகள். கத்தோலிக்கரைப் பெரும் பான்மையினராகக் கொண்ட இந்நாட்டில் நாளுக்கொரு பிரசிடியம் நிறுவப்பட்டது. இதேபோன்று ஆசிய ஆபிரிக்க நாடுகளில் மட்டுமல்ல, நவநாகரிகத்திலும் ஊறிக்கிடந்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் ஆயர்கள் சேனையை ஒரு வரப்பிரசாதமாகக் கருதினர். மத்திய ஆபிரிக்காவில் சேனை வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் சேனை வீராங்கனை எடல் குயின். தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் சேனைக்கு அர்ப்பணித்து களத்திலேயே வீரமரணம் அடைந்தவள் அவள். அவளைப்போன்றே தென்னமெரிக்க நாடுகளில் சேனைத் தூதுவராக விளங்கிய அல்வி லாப்பும் அப்பிரதேசத்தில் சேனையின் வளர்ச்சிக்கு இணையற்ற பணிபுரிந்தவராவர்.

இவ்விதமாக உலகம் முழுவதும் சேனை பரவிச் சென்ற சமயத்தில் அது ஆரம்பித்த இடத்தில் தளர்ச்சி காணத் தொடங்கியதா? இல்லவேயில்லை. தனது முன்னைய நிலையிலும் பார்க்க நன்கு முன்னேறியிருக்கின்றதென்றே சொல்ல வேண்டும். அனைத்துலக சேனைக்கு வழிகாட்டும் தகுதி அதற்கு முற்றும் உண்டு. மற்றும் இயக்கங்கள் போல் சேனையும் கொள்கை, கருத்து வேற்றுமை காரணமாகப் பிளவுபட்டுப் போகலாம் அல்லவா? இந்நிலையைத் தடுக்க வல்லது அதன் ஆன்மீகத் தன்மையும், அது தன் தலைமைப்

பீடத்துக்குக் காட்டும் பிரமாணிக்கமும் கீழ்ப்படிவுமாகும்.

தற்போது சேனை அணி உலகைச் சுற்றி வளைத்துத் திரண்டுள்ளது. எமது போராட்டம் ஒன்றுதான். அதுதான் கடவுளின் அரசுக்காக வீரப்போர் புரிவது. ஆயினும் ஒவ்வொரு இடத்திலும் ஒரு விசேட பிரச்சினை அல்லது எதிரியை அது முகம் கொடுக்க நேரிடலாம். அறிவுக்கண் கொண்டு மட்டும் பார்க்கும்போது இப் பிரச்சினைகள் எம்மை மலைக்க வைக்கலாம். ஆனால் ஆண்டவர் எம்மோடிருக்கிறார் என்ற சிந்தனை, தைரியத்தைக் கொடுக்கும் சேனை இது வரை ஈட்டியுள்ள வெற்றிகளை நினைத்துப் பார்த்தால் இது விளங்கும்.

முதல்தரமான சேனை, எதையும் எதிர்த்து வெற்றி காணலாம். ஆனால் மூன்றாந்தரச் சேனையால் அது முடியாது. எமது சேனையில் குறைபாடுகள் இருக்கலாம், ஆனால் அக் குறைபாடு தொழில் முறை அல்லது அறிவின்மையால் ஏற்பட்டதாக இருக்கலாமே யொழிய விசுவாசக் குறைவு அல்லது பிரமாணிக்கக் குறைவால் ஏற்பட்டதாக இருக்கக் கூடாது.

சேனை வீரத்துவம் பொருந்திய பணிகளைச் செய்யலாம். ஆனால் அதன் அங்கத்துவம் சாதாரணமானது. சேனையார் வடிகட்டி எடுத்த திறமைசாலிகள் அல்லர். சாதாரண, எளிய பலவீனமுள்ள, அதிக படிப்பறிவற்ற மக்கள்தான், ஆனால் இதே மூலப் பொருளில் மரியாளின் இரசவாதத்தைக் காண்கிறோம். இந்த சாதாரண மக்களைக் கொண்டே அவள் தனது வெற்றிகளை நிலை நாட்டுகிறாள். அங்கத்தவர்களிடம் வேண்டப்படும் தகுதி இவ்வளவு குறைவாக இருப்பதால் சேனைக்கு அங்கத்தவர்களைத் திரட்டுவது கடினமல்ல. நன் மனமும் சேவை யார்வமும் கொண்ட மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

ஆனால் சேனையின் வெற்றிக்கு வேறொரு ஏது தேவையாக இருக்கிறது. சேனையைப் பயன்படுத்த சமுதாயம் முன்வரவேண்டும். சேனை அணி திரட்டுவதையும், இயங்க முயற்சிப்பதையும் பார்த்துக் கொண்டு வாளா இருப்பது போதாது. சேனை தனக்குப் புறம்பானது எனக் கருதி அதன் போராட்டத்தைப் பக்கத்திலிருந்து வேடிக்கை பார்க்கும் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சிலசமயம் காண்கிறோம். சேனை ஒரு கருவி. அதைத் தக்கவாறு பயன் படுத்துவது திருச்சபை அதிகாரிகளின் கடமை மட்டுமல்ல சமுதாயத்தின் கடமையுமாகும்.

இன்று சேனை எதிர் நோக்குவது என்ன? சேனையின் பணி முன்னெப்போதுமில்லாத அளவுக்கு உலகிற் தேவைப்படுகின்றது. அதே சமயத்தில் அப்பணியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் குறைந்துள்ளது. இந்நிலையைச் சேனை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ளுமா?

சேனையின் பணி காலத்தாலும் இடத்தாலும் வேறுபடுகின்றது. செல்வந்த நாடுகள் மூன்றும் மண்டல நாடுகள் பொதுவுடைமை நாடுகள் ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் மட்டுமல்ல, பல்வேறு சமய, கலாச்சாரப் பின்னணிகளிலும் சேனைப்பணியின் அணுகுமுறைகள் வேறுபடவேண்டியிருக்கின்றது தற்போது ஒரு சாராரிடத்தில் ஒழுக்கச் சீர்கேடுகள், கருத்தடை, போதைப்பொருள் பாவனை முதலிய சீர்கேடுகளும் மற்றொரு சாராரிடத்தில், மூடநம்பிக்கைகள், கல்வியறிவின்மை, ஏற்றத் தாழ்வுகள் முதலிய குறைபாடுகளும் காணப்படுவது உண்மையாயினும் இன்று முழு உலகிலும் பரந்துபட்டுக் காணப்படும் பல தீங்குகளையும் நாம் மறந்துவிடலாகாது. பொதுவாக இன்று ஆன்மீக மதிப்பீடுகள் அலட்சியம் செய்யப்படுகின்றன. சுகபோகங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கருதப்படுகின்றன. மக்கள் மத்தியில் அன்பு குறைந்து வன்செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. இந்நிலைமை நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே செல்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். எமது சொந்த நாட்டிலேயே உறவுகள் சிதைந்து இனி ஒன்றுபடமுடியாதென்னும் படிக்கு பிளவுண்டாயிருக்கின்றது.

இப்படிப்பட்ட ஒரு பூதாகாரமான எதிரியின் முன் மரியாயின் சேனை கோலியாத்தின் முன் தாவீதைப் போல் நிற்கின்றது.

இந்த மாபெரும் தீமைகளையெல்லாம் ஒழிக்கக்கூடிய வாள் இறைவன் கையிலேயே இருக்கின்றது. சேனை அந்த வாளாக இருக்க முடியாவிட்டாலும் தாவீதின் கவணிலிருந்து புறப்பட்ட கூழாங் கல்லாகவாயினும் இருக்க முடியுமல்லவா?

யாழ் மறை மாவட்டத்தில்

சேனையின் உதயமும் வளர்ச்சியும்

1921 புரட்டாசி மாதம் 7-ந் திகதி மாலே டபிளின் நகரில் திரு. பிறுங்டல் அவர்களால் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது.

1936 i யாழ்/பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் முதன் முதல் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது.

ii ஆன்ம இயக்குனர்: அருட்திரு J. A. இராசநாயகம் அடிகள்

iii தலைவர்: திரு. பிரான்சீஸ் ஒவ் மேரி அவர்கள்

1939 மன்னாரில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது.

1940 i யாழ்ப்பாணத்தில் கியூறியா ஆரம்பிக்கப்பட்டது.

ii சகோதரன் பிரான்சீஸ் ஒவ்மேரி தலைவராக நியமிக்கப்பட்டார்

1948 இளவாலையில் கியூறியா ஆரம்பிக்கப்பட்டது.

1951 மருதமடுப்பதியில் முதலாவது சமாகமம் நடத்தப்பட்டது

1954 மன்னாரில் கியூறியா ஆரம்பிக்கப்பட்டது

1955 i யாழ்.இளைஞர் கியூறியா ஆரம்பிக்கப்பட்டது

ii யாழ். கியூறியா கொமிற்ஸிய அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது

iii அருட்திரு S. A. மைக்கல்சாமி அடிகள் ஆன்ம இயக்குனராகவும் சகோதரி கிறிஸ்ரியன் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்

1956 இரண்டாவது பொதுச்சமாகமம் மடுவில் நடைபெற்றது

1959 ஊர்காவற்றுறை கியூறியா ஆரம்பிக்கப்பட்டது

1962 சேனையின் வெள்ளீயூபிலி விழா கொண்டாடப்பட்டது

1969 மன்னாரில் இளைஞர் கியூறியா ஆரம்பிக்கப்பட்டது

1971 மரியாயின் சேனை அயர்லாந்தில் ஆரம்பமாகிய பொன்விழா கொண்டாடப்பட்டது

1979 முருங்கனில் கியூறியா ஆரம்பிக்கப்பட்டது

1981 யாழ்ப்பாணத்தில் மரியாயின் சேனைப்பயிற்சி நடத்தப்பட்டது

1982 மன்னார் கியூறியா கொமிற்சியமாக்கப்பட்டது

1986 யாழ்ப்பாணத்தில் மரியாயின் சேனை ஆரம்பமாகி 50-ம் வருடநிறைவு

முதற் பிரசீடியத்தின் தலைவர் திரு. A. S. பிரான்சீஸ் ஒவ் மேரி

முதற் பிரசீடிய அங்கத்தவர்கள்

1. திரு. A. மிக்கேற்பிள்ளை உபதேசியார்
2. திரு. A. P. முத்தையா ,,
3. திரு. பாக்கியநாதர் ,,
4. திரு. S. ஆரோக்கியம் ஆசிரியர்
5. திரு. S. அடைக்கலமுத்து ,,
6. திரு. ஞானப்பிரகாசம் ,,
7. திரு. பெனடிற்

முதற் பிரசீடியத்தின் ஞானத் தலைவர் : அருட்திரு. J. A. இராசநாயகம் அடிகள்

இதுவரை காலமும் வழிநடத்தி வந்த ஆன்ம இயக்குநர்கள்:

1. அருட்திரு. J. A. இராசநாயகம் அடிகள்
2. ,, S. A. மைக்கல்சாமி ,,
3. ,, சாள்ஸ் நவரட்ணம் ,,
4. ,, S. J. இம்மனுவேல் ,,
5. ,, G. E. மேரியோசவ் ,,
6. ,, M. றெஜி இராசேஸ்வரன் ,,
7. ,, J. E. பஸ்ரியாம்பிள்ளை ,,

தற்போதைய ஆன்ம இயக்குநர் அருட்திரு. A. C. கிறிஸ்தோப்பர் அடிகள்.

கியூறியாத் தலைவர்கள் :

1. திரு. A.S. பிரான்சீஸ் ஒவ் மேரி 1940
2. திரு. பெனடிற்

கொமிசியத் தலைவர்கள் :

1. திருமதி கிறிஸ்ரியன் 1955—1959
2. திரு. B. அன்று 1959—1965 வரை
3. திரு. A. சிப்பிரியன் 1965—1971
4. திருமதி பெனடிற் 1971—1977
5. திரு. A. சிப்பிரியன் 1977—1982

தற்போதைய கொமிற்சியத் தலைவர் : செல்வி. வயலற் இம்மனுவேல் 1982 இற்றைவரை

சேனைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த ஆயர்கள் :

அதி மேன்மைதங்கிய J. A. கியோமார் ஆயர் அவர்கள்

அதி மேன்மைதங்கிய ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை ஆயர் அவர்கள்

அதி மேன்மைதங்கிய L. R. அன்ரனி ஆயர் அவர்கள்

தற்போது அதி மேன்மைதங்கிய B. தியோகுப்பிள்ளை ஆயர் அவர்கள்

இந்த ஐம்பது வருடகாலமும் சேனையாளரை வழிநடத்தி வந்த புனித கன்னிமரியாளுக்கு எமது நன்றியைக் கூறுகிறோம்.

திருமதி மரியபாக்கியம்

சேனையில் இருந்து துறவற அந்தஸ்தைத் தெரிந்துகொண்டவர்களில் அறியக் கிடப்பவர்கள்.

அருட்செல்வி.	இம்மாக்குலற்,	திருச்சிலுவைக் கன்னியர் (வைத்தியர்)
,,	ஐறின்	,, ,,
,,	பெனடிற்	,, ,,
,,	மரியகொறற்றி	தருமக் கன்னியர் சபை
,,	லூாட்ஸ்	பிரான்சிஸ்கன் சபை
அருட்திரு.	S. J. இம்மனுவேல்	
,,	மைக்கல் சவுந்தரநாயகம்	
அருட்செல்வி	எமிலிஸா	நல்லாயன் சபை
,,	சகாய மேரி	,, ,,
,,	நிக்கலீனு	,, ,,
,,	றேசிற்ரு	திருக்குடும்ப சபை
,,	பிரான்சீஸ்கா	,, ,,
,,	அன்டனி ஜோசவ்	,, ,,
,,	புளொறன்ஸ்	,, ,,

மரியபாக்கியம்

கிறிஸ்துநாதர் குருத்துவத்தை ஏற்படுத்தினதன் நோக்கம் அந்தக் குருத்துவத்தின் வழியாக, அவர்தம தெய்வீக வல்லமையைக் காட்டத் திருவுளமானுர்.

— பென்சன்

ஆன்மாக்களைக் கண்காணிக்கும் அலுவல், என்னிடம் ஒப்படைக்கப் பட்ட நேரம் தொட்டு, நான் ஆற்றவேண்டிய அலுவல், என் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதென்பதை உணர்ந்து கொண்டேன்.

— புனித சின்னத் திரேசம்மாள்

நன்மை செய்யக்கூடிய காரியம் எது என்பதைக் கண்டுபிடிக்கும் வகையில் என் மனத்திற்கு வெளிச்சத்தைத் தருமாறு மரியாயை மன்றுடுவேன் : அதன்பின் நான் சொல்லித்தரும் காரியங்களை நினைத்து நானே பெரும் வியப்படைகிறேன். — புனித சின்னத் திரேசம்மாள்

செபம் செய்பவன் எல்லா ஆன்மாக்களுக்கும் உதவிபுரிகிறுன். விசுவாசமும் அறிவாற்றலும், செயலாற்றுத் திறனும் வாய்ந்த தன் ஆன்மாவின் காந்தசக்தியால் தன் சகோதரர்களுக்கு உதவிபுரிகிறுன்.

— கிராட்கி

மரியாயின் சேனைப் பாதுகாவலர்கள்

1. புனித வளனர்: திருச்சபைக்கும் மரியாய்க்கும் தலைவரும் பாதுகாவலரும் (விழா பங். 19)

2. புனித நற்செய்தி அருளப்பர் : சேனை ஆன்ம இயக்குனர்களுக்குப் பாதுகாவலர் (பங். 27)

3. புனித டி மொன்வேட் : சேனையின் ஆசிரியர், போதிக்கும், பணியாற்றும் சேனையாளருக்குப் பாதுகாவலர் (சித். 28)

4. புனித மிக்கேல் தூதர் : தேவனால் அழைக்கப்பட்டவர்களுக்குத் திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள பாதுகாவலர் (புர. 29)

5. புனித கபிரியேல் தூதர் : கன்னிமரியாயின் காவற்சம்மனசு. வேத விசுவாசத்தினதும், சேனையின் சிறப்பான ஊழியரினதும், யூதர் முஸ்லீம்களினதும் பாதுகாவலர் (பங். 24)

6. வானதூதர்கள் : சேனைத் தளபதியான மரியாயின் மாட்சிமை மிக்க வீரர்கள். சேனையாரின் காவற்சம்மனசுகளின் கூட்டம் (ஐப். 2)

7. புனித திருமுழுக்கு அருளப்பர் : மரியாளின் சேவைக்குப் பயிற்றப்பட்டவர். பயிற்சி நடைபெற்ற நேரத்தை சங்கிலிச் செபம் நினைவூட்டுகிறது. சேனையாருக்கு முன்னோடியும், சேனையாரின் வெளிக்களப் பணிகளுக்குப் பாதுகாவலரும். (ஆனி 24)

8. புனித இராயப்பர் - சின்னப்பர் : அப்போஸ்தல இயக்கத்துக்கும் பிறசாதியாருக்காக கிறிஸ்துவுக்காக அலையும் சேனையருக்கும் பாதுகாவலர் (ஆனி 29)

★ சேனையார் வருடத்தில் பாதுகாவலர்கள் விழாவுக்கு ஒரு நாளைக்குறித்து விழா எடுத்து அவர்களுக்கு நன்றி பாராட்டுவது விரும்பத்தக்கது.

சேனையாளரின் அர்ப்பணிப்பு

சேனையாளர்களாகிய உங்களைப் போல, இறையரசுக்காகத் தங்களை அர்ப்பணித் தவர்கள், இறை வார்த்தையினால் பிரகாசம் பெற்று, இறைவார்த்தையின் ஒளியில் மிளிரவேண்டும் நீங்கள் எதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்? உங்கள் அழைத்தலின் பணி என்ன? உங்களிடம் இருந்து திருச்சபை எதிர்பார்ப்பது என்ன? உங்களுக்கு நினைவூட்டுவது என்ன? என்பவைகளை, இறை வார்த்தையின் ஒளியிலும், மரியம்மாளின் முன்மாதிரிகையிலும் இருந்து நன்றாக விளங்கிக்கொண்டு, நீங்கள் செயற்படவேண்டும். திருச்சபையின் பணியில் ஈடுபட இருப்பவர்களுக்கும் இறைவார்த்தை, ஒளியும் ஊட்டமுமாக எப்பொழுதும் இருக்கின்றது.

நீங்கள் ஏன் சேனையாளர்களாக இருக்கின்றீர்கள்? ஏனென்றால் நீங்கள் எல்லோரும் முதன்முதலாகக் கிறிஸ்தவர்களாக இருக்கின்றீர்கள். நாங்கள் கிறிஸ்தவர்கள், ஏனெனில் இது எங்கள் ஒவ்வொருவரினதும் அடிப்படை அழைப்பு. பெரிய வியாழக்கிழமை, அசனசாலையில், கிஸ்றிது திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியபோது, தமது அப்போஸ்தலர்களைப் பார்த்து ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்'' என்று கூறினார். கிறிஸ்துவே உங்களையும் சேனைச் சேவைக்குத் தெரிந்து கொண்டார். அதே கிறிஸ்துவே, இன்று மீண்டும் ஒரு முறை அவருடைய குரலைக்கேட்க, உங்களை இங்கு அழைத்துள்ளார்.

உலகில் உள்ளவைகள் எல்லாம் யேசுக் கிறிஸ்து வழியாகவே வருகின்றன என்பது அடிப்படை உண்மை. இறையரசை நோக்கி எவரும் முதன்முதல் தானாக அடி எடுத்து வைப்பதில்லை. இறைவனே அவர்களை அழைக்கின்றார்.

''நானின்றி உங்களால் எதையும் செய்ய முடியாது. என் வழியாக அல்லாமல் எவனும் என் தந்தையிடம் வருவதில்லை.'' என்று கிறிஸ்துவே கூறியுள்ளார். எனவே யேசுக்கிறிஸ்துவே உங்களைச் சேனைச் சேவைக்கு அழைத்திருக்கின்றார். அசன சாலையில், அன்று அவர் செய்ததுபோல, கிறிஸ்தவர்களைக் கொன்றுகுவிக்க, டாமஸ்கஸ் நகருக்குச் சென்ற கொலைகாரன் சின்னப்பரை, வழியில் மின்னலினால் தாக்கி இறைவனின் நற்செய்தியை அறியாத அஞ்ஞானிகளுக்கு அதை அறிவிக்க அதிசய விதத்தில் அழைத்து, ஒரு கருவியாகப் பாவித்ததுபோல, பன்னிரு அப்போஸ்தலர்களை ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அழைத்தது போல, உங்களையும் இம்மகத்தான சேவைக்கு அழைத்துள்ளார்.

இறைவன், பரிசுத்த கன்னிமரியாயை இன்னொருவிதத்திலே தெரிந்துகொண்டார். அவர் தமது தூதன் கபிரியேலை யோசேப்பு எனும் நீதிமான் ஒருவருக்கு மண ஒப்பந்தமாகியுள்ள நசரேத் ஊர்க் கன்னிமரியாளிடம் அனுப்பி, அவளைத் தனது திருமகன் கிறிஸ்துவின் அன்னையாகத் தெரிந்து கொண்டார். இவ்வாறே, கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அவருடைய திருச்சபையாகிய மந்தைக்கு அழைக்கப்படுகின்றோம்.

இறைவன் எம்மைத் தமது சேவைக்கு அழைக்கும்போது, அவரின் அழைப்பை முழு மனதுடன், தாழ்மையோடு ''இதோ ஆண்டவருடைய அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே ஆகட்டும்'' என்று கன்னிமரி ஏற்றுக்கொண்டதுபோல நாங்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரது அழைப்பைப் பெற்ற நாங்கள் அனைவரும், அசைக்கமுடியாத, உறுதியான விசுவாசமுள்ள ஆண்களும் பெண்களுமாகத் திகழவேண்டும். எங்கள் சேனையினை விசுவாச

ஒளியில் பார்க்கவேண்டும். தாழ்மையே எங்கள் அழைப்பின் அடித்தளமாகக் கொள்ளவேண்டும். மாறாக நாங்கள் சேவையாளர்கள். மற்றைய கிறிஸ்தவர்களையும் பார்க்க மேலானவர்கள் என்று கருதுவது மடைமைத்தனம் ஆகும்.

ஏன் இறைவன் உங்களையும். எங்களையும் அழைத்துள்ளார்? ஏனெனில் உலகுட் போய்க் கனிகள் கொண்டுவருவதற்காக ஆகும். இதுதான் அப்போஸ்தல சேவையின் குறிக்கோள். இதுவே கிறீஸ்தவ அழைப்பின் நோக்கமும் ஆகும். ஏனெனில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டவன். எனவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த திருச்சபையின் உயிர்ப்புள்ள, துடிப்புள்ள ஒத்துழைக்கும் அப்போஸ்தலனாகி, உலகிற்போய் நற்கனிகளைக் கொண்டுவரவேண்டும். இக்கட்டளையை அப்போஸ்தலர்களுக்கு அன்று கொடுத்தபோது, அவர்கள் அதை நன்றாக உணர்ந்திருக்கமாட்டார்கள். ஆனால் பிற்பாடு, பெந்தகோஸ்தே தினத்தன்று தூய ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கி, தமது ஒளியிலும் அன்பிலும் அவர்களைத் திடப்படுத்தி உண்மையான, உறுதியான அப்போஸ்தலர்களாக மாற்றிய பொழுது, அவர்கள் அக்கட்டளையின் கருத்தை நன்கு புரிந்திருப்பார்கள். அப்போஸ்தலர்கள், சிறப்பாகப் புனித சின்னப்பர், கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதற்காக, நற்கனிகளைக் கொண்டுவருவதற்காக, செய்த நான்கு பெரிய பயணங்களையும் செய்த பணிகளையும் அப்போஸ்தலர்பணி, நமக்கு நன்கு சித்திரித்துக் காட்டுகின்றது.

அப்போஸ்தலர்கள் கொண்டுவந்த கனிகள் எவை? அவைகள்தான் அவர்களாலும், விசேடமாகச் சின்னப்பராலும், ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபைகள். அவைகள்தான் அப்போஸ்தவர்களுக்கு வலிமையையும் புதிய தெம்பையும், ஆர்வத்தையும் கொடுத்தன. அப்போஸ்தலர்களால் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்ட நற்செய்தி, எல்லா மக்களுக்கும் சமாதானத்தின் செய்தியாக, அன்பின் செய்தியாக, மகிழ்ச்சிச் செய்தியாக அமைந்துள்ளது. இந்த நற்செய்தியை உலகுக்கு எடுத்துச் செல்லத்தான் நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

ஒரு கிறிஸ்தவன் தன் ஆன்மீக வாழ்வில் ஒரே நிலையாகத் தேங்கி நிற்க முடியாது. தினம் தினம் வளரவேண்டும். எந்த ஒரு கிறிஸ்தவனும் தன்னுடைய ஆன்மீக வாழ்வில் தான் உச்ச நிலையை அடைந்துவிட்டேன் என்று கருதி, அதில் திருப்திகொள்ளுவானானால் அவன் ஒரு பரிசேயனுக்கு ஒப்பானவன். அவன் அப்போஸ்தலனாக இருக்க முடியாது. எனவே, அவன் தான் பெற்றுக்கொண்ட நற்செய்தியை, அதை அறியாதவர்களுக்கு அறிவிக்கும் பணியை, இறைவன் அவனுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை நன்கு உணர்ந்து, முன்னே சென்று, நற்செய்தியை அறியாதவர்களுக்கும் அதை அறிய ஆவலாயுள்ளவர்களுக்கும் அதை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளான். அப்போஸ்தலர்கள், நற்செய்தியைக் கேட்க மக்கள் தம்மிடம் வரும்வரை காத்திருக்கவில்லை. தங்கள் களைப்பையும் இளைப்பையும் பாராமல் மக்களை நோக்கிச் சென்றார்கள். அன்று இன்றிருக்குமாப்போல நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபை, ஸ்திரமான திருச்சபை இருக்கவில்லை; பங்குகள், ஆலயங்கள் இருக்கவில்லை; தொடர்புச் சாதனங்கள் இருக்கவில்லை, கியூரியாக்கள் இருக்கவில்லை. இருந்தாலும், அப்போஸ்தலர்கள் நாலாபக்கமும் சென்று, எல்லா மக்களுக்கும் நற்செய்தியை அறிவித்தனர்; கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றினார்கள். அதே போல, சேவையாளர்களாகிய நாங்களும் கஷ்டங்களையும் களைப்பையும் பாராமல், வெப்பத்தையும் தட்பத்தையும் பொருட்படுத்தாமல், எதிர்வரும் தடைகள் எல்லாவற்றையும் தாண்டி, முன்னே சென்று, இறைவார்த்தையை எல்லா மக்களுக்கும் அறிவிக்கவேண்டும். இறைவார்த்தை உயிருள்ளது; அது எவ்விதமான கஷ்டமான சூழலையும் எமது சகோதர,

சகோதரிகள் ஊடுருவிச் சென்று, எல்லா மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்க, அவர்களில் கிறிஸ்துவைச் சந்திக்க, அவர்களை இட்டுச் செல்லும்.

''நீங்கள் போய் எல்லா இனத்தவர்களுக்கும் நற்செய்தியைப் போதியுங்கள்'' என்ற கிறிஸ்துவின் கட்டளையில் கூறப்பட்டுள்ள நற்செய்தி என்ன? இறைவன் எமது அன்புத் தந்தை: அவர் எம்மேல் கொண்டுள்ள அன்புப் பெருக்கால் எம்மை இரட்சிக்கத் தமது ஏக குமாரனை இவ்வுலகுக்கு மீட்பராக அனுப்பினார். அவர் கன்னிமரியாளிடம் மனிதனைப் பிறந்து, கொடிய பாடுகளை அனுபவித்துச், சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, மனுக்குலத்தைச் சாந்திக்கும் சமாதானத்துக்கும் நீதிக்கும் அன்புக்கும் சகோதரத்துவத்திற்கும் அழைத்தார். தமது அன்பையும் மகிழ்ச்சியையும் தமது பிள்ளைகளுக்கு இவ்வுலக வாழ்விலும் அதன்பின் மறு உலக வாழ்விலும் அளிக்கின்றார். இறைத் தந்தையின் அன்பையும் மகிழ்ச்சியையும் நாங்கள் அவரை அறியாத எமது சகோதரர்களுக்கு வழங்குவதற்கே, சேனையாளர்களாகிய எங்களைத் தமது கருவியாக அழைத்துள்ளார்.

அந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட நாம், எங்களுடைய பாரிய பொறுப்பு, திருச்சபையை மேலும் மேலும் வளரச் செய்தல், எமது சூழலில் கிறிஸ்துவுக்குச் சான்று பகருதல் என்பதை நன்கு உணரவேண்டும். எமது சேவையை ''நான் உங்களை அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்'' என்ற கிறிஸ்துவின் கட்டளையை அடித்தளமாகக் கொண்டு செய்யவேண்டும். இதைக், கிறிஸ்து தமது செயலில் காட்டினார். ''தன்னுயிரைத் தனது நண்பனுக்காகக் கொடுப்பதிலும் பார்க்க, மேலான அன்பு வேறில்லை'', இதுவே கிறிஸ்தவ அன்பாகும்.

நாம் பெற்றுக்கொண்ட, இந்தக் கிறிஸ்துவின் அன்பை மற்றவர்களுக்கும் வழங்கி' அதை மேலும் மேலும் வளர்ப்போமாக.

மூலம்: மேன்மை தங்கிய கர்தினல் மிக்கேலி பெலகிறினோ பேராயர், ரியூதின்

தமிழ் ஆக்கம் : இ. அல்போன்சஸ்

கடவுளின் வல்லமை ஞானத்தாலும் நீதியாலும் ஆளப்படுகின்றது. நீதியும் அவருடைய அன்புக்குக் கட்டுப்பட்டது. அவருடைய அன்பு அளவற்ற தூய்மைக்குக் கட்டுப்பட்டது.

— காடினல் நியூமன்

கிறிஸ்துநாதருடைய போரில் நம்மையே நாம் திடமனதுடன் ஈடுபடுத்தி அவருடைய மாட்சிமிக்க ஆணைக்குப் பணிந்து நிற்போம்.

— புனித ளமென்ற்

மரியம்மாள், 'அவர் என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்' என்கிறாள். அவருடைய சொல்லுக்குச் செவிசாய்த்து, அன்பு தியாகமாகிய பாத்திரங்களில் நம் அலுவல்கள் என்னும் தண்ணீரை ஊற்றினால் கானாவூர் புதுமை மீண்டும் நிகழும்.

— கபின்

தேவதாயின் பாதையிலே....

தாய்...தாயின் அன்புக்கு ஈடு இணை எதுவுமேயில்லை. படைக்கப்பட்ட அன்பு அனைத்திலும் தலைசிறந்தது தாயன்புதான். வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டுக்குட்பட்ட, அழிந்து போகும் இவ்வுலகின் தாயின் அன்பு-இவ்விதமாயின் முடிவில்லாத - என்றுமே அழிந்து போகாத எம் பரலோகத் தாயாம் மரியன்னையின் அன்புக்கு ஈடேதும் சொல்லவும் முடியுமா?

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மூன், கல்வாரி மலைக் குன்றில் நாம் பெற்ற பரலோகத் தாய் தான் மரியாள். சொல்லொணுத் துயரங்களிடையே நாம் பெற்ற தாய் அவள் மன்னுயிர் வாழத் தன்னுயிர் மகனையே உலகிற்கு அளித்து மீட்பினை வழங்கியவள்தான் நம் தாய். இவள்தான் நமக்காகப் பரிந்து பேசுபவள். யேசு அன்று சிலுவையினடியில், வேதனையில் துவண்டு துடித்த தம் அன்புத் தாயையும், அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயை நோக்கி ''அம்மா! இதோ உன் மகன்'' என்றூர். பின்பு அன்புச் சிடரை நோக்கி ''இதோ உன் தாய்'' என்று மனுக்குலம் அனைத்துக்குமே அவளைத் தாயாக்கினுர். நசரேத்தூரில் சிறிய இல்லத்தில், ''ஆகட்டும்'' என்ற வார்த்தையால் இறைமகனின் தாயாராகத் தெரியப்பட்ட தேவதாய், உண்மையிலேயே ஒப்புயர்வற்ற ஓர் அன்புத் தாயாக அன்று தொட்டு அன்புப்பணி புரிந்துவருகிருள்.

அன்னை மரியாள் உலகின் அனைத்து மக்களிலும் மிக மிக மேலான பேறுடையவள் அவளே. இதனை, தன் நன்றிப்பாடலில் இயம்பியுள்ளாள். தம்மை வாழ்த்திய திருமுழுக்கு அருளப்பரின் தாயாம் எலிசபேத்தின் வாழ்த்துரைக்குப் பதிலாக ''என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது ...... இதோ எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே'' என இறைவனுக்கு நன்றிப் பாடல் இசைத்தாள். தேவதாய் மாசில்லாமல் உற்பவித்தமையும் தம் வாழ்நாள் முழுவதும் மாசில்லாமல் வாழ்ந்தமையும் அவளுக்குரிய மிக மிக மேலான தனிச் சிறப்புகளாகும். ஆதியிலே இறைவனின் திருச்சித்தத்துக்கு மரியாள் யேசுவின் தாயாக நியமிக்கப்பட்டமையால் அவள் மாசில்லாமல் உற்பவித்துப் பிறக்கும் சிலாக்கியத்தை இறைவன் அவளுக்களித்தான். வாழ்நாளில் அவள் ஒரு கணமேனும் பசாசுக்கடிமையாகாமல், பாவமில்லாமல் வாழ்ந்தமை அவள் அடைந்த மா பெரும் வெற்றியாகும். ஏனெனில் அவள் உண்மையான மனிதப் பாங்குடையவள். அப்படியிருந்தும் அவள் உலகம், சரீரம், பசாசு என்னும் சத்துராதிகளை மேற்கொண்டு மிக மிகப் பரிசுத்தவதியாக வாழ்ந்தாள். இதனுலன்றே தூதுரைக்க வந்த கபிரியேல் தேவதூதனும் ''அருள் நிறைந்தவளே வாழ்க'' எனவாழ்த்திப் போற்றினுர். இன்னும் பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள், நிறைமனிதத் தன்மையின் எடுத்துக்காட்டு, மானிட மீட்பு மறைபொருளின் நடுநாயகம் என்றெல்லாம் போற்றிப் புகழப்படுகின்ருள்.

மரியாள் முப்பொழுதுங் கன்னிகையாகத் திகழ்ந்த மாதரசி, வெண்பனிப் பளிங்கு, முட்கள் நடுவே விளங்கும் லீலிமலர், கற்பின் நிறைகுடம், என்றுமே தளம்பாத தூய்மையின் ஊற்று, பரிசுத்தத்தின் வானேங்கிய குன்று, பரிமளம் கமழும் தங்கச் சிமிழ். இதனுலன்றே பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்திலிருந்த ஏவாளை ஏமாற்றிய அந்தப் பசாசைக் குதிக்காலால் நசித்து அடக்கும் பெருமைக்குரியவளானுள்.

இத்தகைய சிறந்த வாழ்வின் பரிசாக இறைவன் மா பெரும் மகிமையை அவளுக்களித்தார் அவள் மரணத்தின் போது, அவளை, ஆன்ம சரீரத்தோடு பரலோகத்துக்கு எழச் செய்து பரலோக பூலோக இராக்கினியாக முடிசூட்டி அக்களிக்கச் செய்தார். அந்தப் பரலோக பூலோக

இராக்கினி அந்த மகிமையுடன் தாய்க்குரிய அன்போடு மனுக்குலத்தைப் பாதுகாத்து வருகிறுள். மனுக்குலத்தின் சகாயமான அவளிடம் ஒப்பிட இயலாச் செப வல்லமை உண்டு. அவளிடத்தில் நம் ஒவ்வொருவரினதும் தேவையையும், துன்பத்தையும், மன்ருட்டையும் உணர்ந்து அறியத் தக்க சக்தி படைத்த ஒரு தாயின் இதயம் உண்டு. மரியாள் கிறிஸ்து யேசுவின் மீட்புத் திட்டத்தில் பங்கேற்றவள். எனவே அவள் மன்ருட்டுக்குப் பெரு மதிப்புண்டு. அவளே அனைத்து அருள்களின் மத்தியஸ்தி. பங்கிடு செய்பவள். அவள் மூலமாகவே அவள் விரும்பும் அளவிற்கே. அவள் விரும்பும் நேரகாலத்திலே பங்கிடு செய்யப்படுகின்றன. ஆகவே வாடி வதங்கி, நொந்து கெட்டு, இரத்தக்கண்ணீர் வடித்து நாம் துன்புறும் இவ் வேளையில், பெற்ற தாய் நீயன்றி வேறுயார் இரங்குவார்? அபயம், சரணம், அம்மா தாயே என்று தஞ்சமடைய வேண்டியது அந்த இரக்கமுள்ள தாயின் மடியிலேயே, இவ்விதம் தஞ்சமடைவதற்கு அருகதை உள்ளவர்களாக அவளை நாம் அன்பு செய்ய வேண்டும், வணங்க வேண்டும், அவளை கண்டு பாவிக்க வேண்டும்.

இந்த நாட்களில் மாதாவின் பக்தியைக் குறைப்பதற்கு சாத்தான் பல பல முயற்சிகளைக் கையாளுகின்றது. தாயின் உண்மையான பக்தர்கள் தாயை மறந்து வீண் ஆரவாரங்களால் அளுப்புண்டு செயல்படுவதை நாம் கண்ணுரக் காண்கிறோம். இவர்கள் திரும்பவும் மரியாயைச் சரணடைய மரியாயின் சேனை அங்கத்தவர்களாகிய நாம் முயற்சிக்க வேண்டும். எம் தாயை அன்னையாக அரசியாக அடைக்கலமாக அருந்துணையாக அன்பு செய்வோம். அன்பு செய்வதாலுல் அவளே போல் இறைவனுக்குகந்தவர்களாக, அவர் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக வாழவேண்டும். இதுவே அவள் வாஞ்சை.

அவளை வணங்க அவள் புகழ்பாட எத்தனையோ வழிவகைள் உண்டு. மாதாவின் இதயத்தைத் தொடும் பக்தி முயற்சிகளுள் எளிமையானதும், வல்லமை மிக்கதுமான செபமாலைப் பக்தி, மாதாவின் அருட்களஞ்சியத்தைத் திறக்கும் திறவுகோலாக இது விளங்குகிறது. இன்னும் தாயின் பெயரால் பூசைப்பலி ஒப்புக்கொடுப்பது தான தருமங்கள் செய்வது, உபவாசமிருப்பது அவளுடைய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வது, மாதாவின் திருக்கூட்டத்தில் சேர்ந்து சனிக்கிழமைப் பக்தியை அனுசரிப்பது மரியாயின் சேனையில் ஊழியம் புரிவது, சதாசகாயமாதா நோவனையில் பங்குபற்றுவது, புதுமை வரவணிக்கம், உத்தரீயம் அணிவது என்பனவும் நாம் செய்யக்கூடிய பக்தி முயற்சிகளாகும்.

தாயின் பாதையில் அவள் பிள்ளைகளாம் நாம் நடக்கவேண்டும். பாவத்தை முற்ருக வெறுப்போம். கற்பினைக் கண்மணிபோல் காப்போம். இவளது தாய்மையின் நிறைவிலே, தூய்மையின் நிழலிலே, ஏழ்மையின் வழியிலே பிறரன்புப் பணியிலே நம் வாழ்வின் வழியாகப் பங்கு கொள்வோம். 'இதோ நம் தாய்' என்ற இறைவார்த்தையை முழுமையாகச் சுவைத்து, இவள் வழியாக இறைவனின் அன்பை அருளை நம் வாழ்விலே பெற்று மகிழ்வோம். தூய்மையின் பேரெழிலில் மூழ்கி, தெய்வீக குழந்தையை ஏந்தி நின்ற நம் அன்னையின் வழியாக இறை வார்த்தையைச் சிந்தித்தவர்களாக, வாழ்க்கைப் போராட்டத்தில் மற்றவர்களை அணைப்பவர்களாக, துன்பத்திலே பிறரோடு துணை நிற்பவர்களாக மனித உணர்வுகளுடன் மற்றவர்களுக்கு ஆறுதலளிப்பவர்களாக மாறி, நமது பணியால் தாய் புகழ் சாற்றி, நம் தாயின் பண்புகளைக் கொண்டவர்களாக வாழ்வோம் அவள் வழியாக நம் அகத்துள் உறையும். ஆண்டவனோடு உறவு கொள்வோம்.

— ஹெலன் பிரான்சிஸ்
லூர்த்துநாயகி பிரசிடியம், அரியாலை,

"செபமும் சேவையும் சேனையாரின் இணை சிறகேயாக"

கருவளர் சிசுக்கள் கூடக்
கலங்கிடுங் கண்ணீர்க் காலம்
தெருநிழல் தோப்பினுள்ளும்
திரள் பிணங் குவியுங் காலம்
உருவிலர் உறையுளின்றி
ஊர் தொறுமொடுங்குங் காலம்
திருமலரடி பணிந்தோம்
துயர் துடைத்தருள வேண்டும்

மண்ணினிலொன்றி வாழும்
மக்களே மாக்களாகி
நண்ணிய நேசர் தம்மை
நசுக்கிடுங் கொடிய காலம்
கண்ணினைக் களைந்தெறியக்
கரங்களே யெழும்புங் கோலம்
விண்ணினைக் கூவுகின்றோம்
விடையினை யருள வேண்டும்

நாவையு மடக்கி யாள
நன்மையே விரும்பி வாழ
சேவையுஞ் சேனையாரின்
செபமுமிணை சிறகேயாக
பாவையாற் புவி நுழைந்த
பாரங்கள் விலகிப் போக
தேவையாங் கருணை மழை
தாயே நீரருள வேண்டும்

இறைவனை மறந்து வாழும்
இருள்மயக்கொழிய வேண்டும்
கறையெனப் பரவும் பாவக்
கனவுகள் மறைய வேண்டும்
சிறையெனப் பிணிக்குந் தீய
சிந்தனை தெளிய வேண்டும்
பிறைமதிப் பாதம் வந்தோம்
பிழையெலாந் தீர்க்க வேண்டும்

படுதுயர் தீர வேண்டும்
பாரினி லமைதி வேண்டும்
நெடுமரந் துஞ்சுந் தேவ
நிர்மல னருளும் வேண்டும்
சுடுதழல் நரகிற் சேர்க்கும்
சூதுகளகல வேண்டும்
உடு முடி சூடுந் தாயே
உலகு காத்தருள வேண்டும்

—செ. ஜோண் ஓவ் ஆக்
நாவாந்துறை

மரியன்னையின் சேனைச் சேவையில் நான் பெற்ற இன்ப அநுபவங்கள்

— ஞானப்பிரகாசியம்மா —

காலச்சக்கரம் சுழன்று கொண்டிருந்தது.

அன்று நான் G. C. E. சதாரண பரீட்சையில் சித்தியெய்தியதும் சேனையில் சேவையாற்ற வேண்டும் என்ற ஓர் ஆர்வம் என்னைத் தூண்டியதாலும் ஒரு சிலரின் தூண்டுதலினாலும் சேனையில் சேர்ந்துகொண்டேன். ஆரம்பத்தில் சேனைபற்றிய விரிவான அறிவு எனக்கிருக்கவில்லை. பின்னர் படிப்படியாக சேனையின் வாராந்தக் கூட்டம், வாராந்த ஊழியம், சேனை விழாக்கள், சேனையின் கைப்புத்தகம் வாயிலாக சேனையின் நோக்கம், மனப்பான்மை, இலட்சியம் பற்றி அறிந்துகொண்டேன். மரியன்னைமீது அசைக்க முடியாத விசுவாசமும் அன்பும் கொண்டிருந்த எனக்கு அவவை முன்மாதிரியாகக் கொண்டு சேவையாற்ற ஆவலாக இருந்தது. சேனையில் என்றும் பிரமாணிக்கமாக செயற்பட்டு வருவதனால் சேனைக்குரிய கடமைகளை மனமகிழ்வுடன் செய்யக்கூடியதாக இருக்கிறது. பிறரோடு கூடிப்பழகி அவர்களுக்கு அன்பு காட்டி அவர்களது துன்பத்தில் துவண்டு இன்பத்தில் மகிழ சேனை வாழ்வு என்னைப் பயிற்றுவித்தது. இவ்வாறு சேனையின் இன்பத்தைச் சுவைத்துக் கொண்டிருக்கையில் பால் மணம்மாறி மழலை மொழி பேசும் பாலர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியப்பணி என்னை வந்தடைந்தது. இப்பணியைப் பொறுமையுடனும் அன்புடனும் மனமகிழ்வுடனும் செவ்வனே செய்யச் சேனை வாழ்வு எனக்குத் துணை தந்தது.

உலகின் நிலையாமையை உணர்ந்து உல்லாசப் பொழுது போக்குகளைத் தியாகம் செய்து செபம், சேவை செய்யக் கற்றுக் கொண்டேன். சில சந்தர்ப்பங்களில் மனதிலும் உடலிலும் உண்டாகும் சோர்வுகள், நன்றியின்மையால் ஏற்படும் மனப் புண்களை ஆற்ற இறைவார்த்தைகளை நல்ல மருந்தாகப் பாவிக்கத் தொடங்கினேன். சேவையின்போது உண்டாகும் ஏளனச் சொற்கள், வசைமொழிகள், கண்டனங்கள் ஆரம்பத்தில் என்னைக் கோபத்தில் ஆழ்த்தியபோதும் நாளடைவில் எதையும் மரியாளுக்காகத் தாங்கும் இதயத்தைப் பெற்றுக்கொண்டேன்.

இந்நிலையில் பல வருடங்களாக நோய்வாய்ப்பட்டு ஒரே இடத்தில் இருக்கும் எனது அன்னையையும் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்கவேண்டியவளானேன். எப்பொறுப்பும் எனக்கு சுமையாக அன்றி சுவையாக இருப்பதற்கும் நானும் எனது தாயாரும் சலிப்படையாமல் வாழ்வதற்கும் சேனை வாழ்வே உறுதுணையென்றால் மிகையாகாது.

சேனையாருள் பலர் நாளடைவில் துறவறத்திற்காகன தேவ அழைத்தல் பெறுகிறார்கள் என்பது சேனை ஊழியத்தின் தனிச் சிறப்பு என்பார்கள். ஒருவகையில் யானும் அத்தனிச் சிறப்பைப் பெற்றவள் என்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

தியாகம், உழைப்பு, துணிவு ஆகிய பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ சேனை வாழ்வு துணைதந்தது. எம் குடும்பத்திலுள்ள குறைகளை நீக்க, இறைவார்த்தைகளை நம்ப, அதன்படிவாழ ஆசிக்க நேரத்தைப் பொன் என மதிக்க, சிக்கனமாக வாழ, எல்லாவற்றிற்கும் மேலாக

நாளாந்தம் திருப்பலியில் பங்குகொண்டு திருவிருந்து அருந்தச் சேனைவாழ்வு உறுதுணை புரிந்தது.

பலரின் எதிர்ப்புக்களையும் பொருட்படுத் தாமல் ஆன்ம இயக்குநர்களின் உதவியுடன் சாதி வேறுபாட்டை இயன்றளவு தவிர்த்து அவர்களுக்கும் சேனையில் இடங்கொடுத்து பலரை ஊழிய, உதவி அங்கத்தினராக்கும் வாய்ப்பைப் பெற்றேன். இளைஞர்களுக்கு ஒரு பிரெசீடியம் நிறுவித் தற்கால நெருக்கடி களுக்கு மத்தியிலும் அப்பிரெசீடியம் வளர்ச் சியடைய முயற்சிக்க இச்சேனை வாழ்வு என் னைத் தூண்டிக் கொண்டிருக்கிறது.

இயற்கையாகவே மிகுந்த கூச்சமும் பய மும் கொண்ட நான், இன்று சமூகத்தில் துர்மாதிரிகையும், நாத்திகமும் தலைவிரித்துத் தாண்டவம் ஆடும் இடங்களிற்கூடப் புகுந்து அதைப் பரிகரிக்க, மனம் நொந்து இறைவ வனிடம் வேண்ட விடாமுயற்சியுடன் செயற்படப் பழகிக்கொண்டேன். எரிச்சல், தம்மிலும் பார்க்க மற்றவர் முன்னேறுது தடுப்போர், வாயால் வன்சொற்களைச் சொரி வோர், வரவிற்கு மிஞ்சிய செலவு செய் வோர், பணத்தைப் பதுக்கி வைப்போர், பிறரை மதியாது தான் என்ற தலைக்கனம் பிடித்தோர், பொறுப்புணர்ச்சியற்றோர், புரிந்து கொள்ளாமல் ஏற்றுக் கொள்ளாமல் பிரிந்திருப்போர், அருட்சாதனங்களைப் பெறு தோர், முரட்டுக் கொள்கை பிடித்தோர் யாவருடனும் அளவளாவித் தவறைச் சுட் டிக்காட்டி அவர்களும் தூய்மையாக வாழ என்னால் இயன்ற முயற்சிகளை எடுத்துள் ளேன். சிலவற்றுள் வெற்றியும் பெற்றுள் ளேன்.

எனது வாழ்வில் ஓர் இந்துமத ஸ்தாபனம் ஒன்றில் மூன்று மாதம் தொழிற்பயிற்சி பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.பயிற்சி யின்போது பல இந்து சகோதரர்களைக் கிறிஸ்துவின் பெயரால் அணுகச் சேனை வாழ்வு எனக்குத் தூண்டுதல் தந்துகொண்டி ருந்தது. அவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் நற்செய்தியை என் நாளாந்த கடமைகள் மூலமாகவும், முன்மாதிரிகையாலும் சந்தர்ப் பம் ஏற்படும் வேளைகளில் வார்த்தை மூலமும் எடுத்துக்காட்ட வழியாய் இருந்தேன். அவர் கள் என்னுடன் நெருங்கிப் பழகி அளவளாவி அன்பு செய்ததைக் கண்டு நான் மகிழ்ச்சி யும் மனநிறைவும் அடைந்தேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்து கற் பித்த தாழ்ச்சியைக் கடைப்பிடித்துக் கட வுள் முன்னிலையில் நாம் ஒன்றுமில்லை என் பதை உணர்ந்து கிறிஸ்து நமக்குப் பெற்றுத் தந்த மீட்பின் விலைமதிப்பற்ற பெறுமதியை அனுபவித்து என்னைப் புனிதப் படுத்துவ தோடு மற்றவர்களையும் தூய்மைப்படுத்தும் பணியையும் என்னால் இயன்றளவு செய்யச் சேனைவாழ்வு பக்கபலமாய் விளங்குகின்றது.

''யான் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம்''

நம் மோட்ச தந்தையின் வல்லமையைக் காட்டக் குறிப்பிட்டிருக்கும் காலமும் நேரமும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது. ஆகவே, உங்கள் அழைத்தலின் பொறுப்புக்களை அஞ்சா நெஞ்சத்தோடு ஏற் றுச் செயலாற்றுங்கள்.

—காவன் டஃபி

மரியாயின் சேனை என்பது அப்போஸ்தல அலுவல்தான். ஆனால் அது கவர்ச்சியான அப்போஸ்தல அலுவல். அழகும் ஆற்றலும் பொருந்திய அப்போஸ்தல அலுவல்.

— ஆயர் ரிபேரி

மரியாயின் சேனையும் அப்போஸ்தல பணியும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறைமகன் கிறிஸ்துவால் பேதுரு என்னும் பாறையின் மேல் கட்டப்பட்ட கத்தோலிக்க திருச்சபை இன்று நீண்டுவளர்ந்து நெடிதுயர்ந்து நிலமெல்லாம் விழுதுவிட்டு சான்ருேர் புகழும் ஆலவிருட்சம் போல் காட்சி தருகின்றது. திருச்சபையின் மகத்தான இவ்வளர்ச்சிக்கு பக்திச் சபைகள் பல உதவி புரிந்துள்ளன.

திரு ஃபிருங்டவ் என்னும் பொது நிலையினரால் 1921-ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் ஏழாம் நாள் மரியாயின் சேனை உருவாக்கப் பட்டது. கடுகுமணிபோல் இருந்த இந்தப் பத்திச்சபை இன்று அகில உலகிலும் கிளை பரப்பி ஆன்ம ஈடேற்றத்தில் அயராது உழைத்து வருகிறது. இறைவன் தனது நற்செய்திப் பணியை காலத்துக்குக் காலம் பல்வேறு விதங்களில் பலவித கருவிகள் மூலம் செய்து வருவதை யாவரும் அறிவர்.

மரியாயின்சேனை தன் அங்கத்தவர்களிடம் கேட்கும் அப்போஸ்தலப் பணியும் திருச்சபைக்குப் புரியும் தொண்டும் எத்தகையது என்பதை 11-ம் பத்திநாதர் பாப்பரசர் கத்தோலிக்க சேவையைப்பற்றி எழுதியிருக்கும் நிருபத்தில் பின்வருமாறு கூறுகிருர். ''கடவுளின் தனிப்பட்ட அருளினுல் அப்போஸ்தலப் பணிபுரியும் இந்த மேலான பணிக்காக அழைக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். இந்தப் பணிக்கும் குருமாரின் பணிக்கும் மிகுந்த வேற்றுமை கிடையாது. ஏனெனில் கத்தோலிக்க சேவை என்பது விசுவாசிகள் புரியும் அப்போஸ்தலப் பணியாகும் என்று அழகாகக் கூறியுள்ளார்.

நற்செய்தி ஏட்டை நாம் புரட்டும்போது யேசுபிரான் செபக் கூடத்திலே வாசித்த இசையாஸ் ஆகமத்தைச் சந்திக்கிருேம். ''ஆண்டவருடைய ஆவி என்மேலே ஏனெனில் என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோருக்கு நற்செய்தி சொல்லவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் குருடர் பார்வையடைவர் என அறிவிக்கவும். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும் ஆண்டவருடைய அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் என்னை அனுப்பினுர்'' (லூக். 4:18-19) என்ருர்.

மேலே கூறப்பட்ட நற்செய்தி வாசகங்களின் மூலம் யேசு உலக மீட்புக்காக தான் ஆற்றவந்த பணியை விளக்கமாக எடுத்துக் கூறுகிருர். அப்போஸ்தல பணிக்காக அழைக்கப்பட்ட சேனையாளரும் இக்கருத்தை மனதிற் கொண்டு பணிபுரிய வேண்டும். யேசுபிரான் உயிர்த்தபின் தன் அப்போஸ்தலருக்கு 'உலகெங்கும் போய் படைப்பிற் கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் மீட்புப் பெறுவான். விசுவசியாதவனுக்கு தண்டனை கிடைக்கும்''

(மாற்கு 16 : 15-16) என்ருர்.

திருச்சபை உலகத்தையும் அதன் தீய சக்திகளையும் எதிர்த்து ஓயாமல் போர் புரிந்து வருகிறது. ஓயாத ஒழியாத இந்தப் போரில் திருச்சபைக்கு உறுதுணையாயிருந்து ஊக்கமுடன் ஒத்துழைப்பதே சேனையின் அப்போஸ்தலிக்க பணி (கை நூல்) 2-ம் வத்திக்கான் சங்கம் ''இல்லற அப்போஸ்தலத்துவம் பற்றிய தீர்மானத் தொகுப்பில் அப்போஸ்தலத்துவத்தின் சேவைத் தளங்கள் என்ற பகுதியிலே அப்போஸ்தல பணி புரிவதற்கு இல்லறத்தோர்கண்முன் இரண்டு உலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று திருச்சபை, மற்றது உலகம். இந்த 2 உலகிலும் சேவை செய்வதற்கு எண்ணற்ற வாய்ப்புகள் இருக்கின்றன. 1. பங்குக் கோவில் 2. குடும்பம் 3. இளைஞர்

4. சமூக நிலையங்கள் 5. தேசிய நிறுவனங்கள், 6. அகில உலக நிறுவனங்கள். இவைகளில் இல்லறத்தோர் நுழைந்து நல்ல சேவை செய்யவேண்டுமென்று கூறுகின்றது.

1. பங்கு என்னும் தளத்திலே

சேனையார் அப்போஸ்தல பணி புரிவதற்கு நமது பங்குகள் சிறந்த சேவைத் தளங்களாகும். ஏனென்றால் பங்குகள் பல்வேறு பாடுகள் நிறைந்த மக்களைத் தன்னகத்தே அணைத்துக்கொண்டிருக்கும் பொதுச் சபையாகும். ஆதலால் சேனையாளர் பங்குக் குருவுடன் இணைந்து பணி புரியவேண்டும். பங்கிலுள்ள பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து தீர்வு காணவேண்டும். பங்கிலே நடைபெறும் சகல அப்போஸ்தலத்துவ சகல முயற்சிகளிலும் விசுவாசப் பரப்புதலைச் செய்யும் நற்பணிகளிலும் பெரிதும் ஒத்துழைக்க வேண்டும்.

2. குடும்பம் என்னும் தளத்திலே

பங்கிலேயுள்ள ஒவ்வொரு கிறீஸ்தவக் குடும்பமும் நசரேத்தூர் திருக்குடும்பத்தை முன்மாதிரியாகக் கண்டு பாவித்து திருமணத்தின் புனிதத்துவத்தை உணர்ந்து கணவன் மனைவியர்க்கிடையில் ஒற்றுமை பிரமாணிக்கம் தூய்மை அன்புடன் விளங்கச் செய்வது, நல்ல பிள்ளைகளைப் பெற்று அவர்களைத் தேவ நேசத்திலும் விசுவாசத்திலும் ஒழுக்கத்திலும் கல்வி அறிவிலும் சிறந்து விளங்கச் செய்வது, பங்குகளில் நடைபெறும் திருவழிபாடுகளில் குடும்பத்தினர்க்குள்ள தனிப்பங்கு இவைகள் மூலம் இல்லத்தை திருச்சபையின் புனிதஸ்தலமாக மாற்றுவது, இல்லத்தில் தேவ அழைத்தலை ஊக்குவித்து வளர்ப்பது, குடும்பத்தினர் ஒன்று கூடி நற்செய்தி வாசித்து தியானித்து நாளாந்தம் செபிப்பது இதன்மூலம் நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ்ந்து காட்டுவது.

3. இளைஞர் மத்தியிலே

இளைஞர் சமுதாயத்தை ஏற்றுக் கொள்வது. அவர்களுடன் அன்புடன் உறவாடுவது அவர்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, முதியோர் இளைஞர்களுக்குள்ள இடைவெளிகளை கருத்து வேறுபாடுகளை பரஸ்பரம் புரிந்து இணைக்கும் பாலமாக கிறிஸ்தவ மதிப்பீட்டின்படி தீர்வு காண்பது.

4. சமூக சேவைத் தளத்தில்

சமூகசேவை நிலையங்கள், தேசிய நிறுவனங்கள், அகில உலக நிறுவனங்கள் இவைகளிலும் தேவைகளுக்கு ஏற்றவாறு சேனையார் பங்குபற்றி ஊக்குவித்து கிறிஸ்தவ மதிப்பீட்டின்படி அவர்கள் நல்ல சேவைகள் செய்ய தம்மாலான உதவிகளைச் செய்து வரவேண்டும்.

5. தேவநற்கருணைப் பக்தி

சேனையாளர்க்கு தேவநற்கருணையில் ஆழமான பக்தியும், விசுவாசமும் இருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்விற்கும் சேனையின் அப்போஸ்தலிக்க பணிக்கும் இது அதி முக்கியமானது. இந்த உணவின் பலத்தால் ஆன்மீக எதிரிகளோடு போர் புரிந்து வெற்றியடைய முடியும்.

6. செபமாலையும் சேனைச் செபங்களும்

நற்செய்தியின் சுருக்கமே செபமாலை. சேனையின் அங்கத்தவர்களும் உதவி அங்கத்தவர்களும் நாளாந்தம் செபமாலையைத் தியானித்து ஓதிவரும்போது கிறிஸ்நாதரின் மனுஷ அவதாரத்தின் பரம இரகசியங்களில் ஆழமாக்கப்பட்டு மிகுந்த பேறு பலன்களை அடைகிறோம். அவ்விதமே சேனைச் செபங்களையும் நாளாந்தம் செபித்து வரும் போது அதிக நன்மைகளை அடைவோம்.

இவ்விதமாக செபத்தின் மூலமாகவும் சேவையின் மூலமாகவும் அப்போஸ்தலப் பணிபுரியும் சேனையாளர் மரியாளோடு

ஒன்றித்து 'என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது.' என்று இறைபுகழ் பாடக் கூடியவர்களாக இருப்பார்கள்.

மன்னாரில் சேனை விருத்தி

மரியாயின் சேனை இலங்கையில் யாழ். மறைமாவட்ட ஆயராயிருந்த அதி. வந். இயோமார் ஆண்டவர் அவர்களின் தூண்டுதலால் பாண்டியன்தாழ்வுப் பங்குக் குருவான J. A. இராசநாயகம் சுவாமி அவர்களால் 1938-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1952-ம் ஆண்டு மன்னார் பங்குக் குருவாக இருந்த வண. S. பீற்றர் அ. ம. தி. சுவாமியவர்களால் மன்னாரில் பிறிசீடியங்கள் ஆரம்பிக்கப்பட்டு 6-7-54-ல் கியூறியா நிலைக்கு வந்தது 2-8-65-ல் இளைஞருக்கென்று ஒரு கியூறியா உண்டாக்கப்பட்டது. 8-9-1971-ம் ஆண்டு வண. சந்தியாப்பிள்ளை சுவாமி அவர்கள் காலத்தில் சேனை உலகில் தனது ஐம்பதாவது ஆண்டின் பூர்த்தியை ஒட்டி பொன் ஜுபிலி விழா கொண்டாடியது. சேனைவளர்ச்சியின் காரணமாக வேலைப்பழுக் கூடியபடியாலும் தலைமன்னார் தொடக்கம் இரணைதீவு வரையுமுள்ள பங்குகளிலுள்ள பிரசீடியங்களில் போக்குவரத்துக் கஷ்டத்தாலும் 8-9-79-ல் வண. பிதா. ம. இ. பயஸ் அடிகளினதும் ஏனைய பங்குக் குருமாரின் ஆலோசனையின்படியும் முருங்கனில் ஒரு கியூறியா ஆரம்பிக்கப்பட்டது. மன்னார் புதிய மறைமாவட்டமானபடியால் மன்னார் கியூறியா "கொமித்சிய" நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்விதமாக மரியாயின் கொடியின் கீழ் பணிபுரியும் சேனையாளர் தமது அப்போஸ்தலப் பணியை மரியாயின் மூலமாக செய்து வருகிறார்கள்.

முடிவாக மரியாயின்சேனை வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த ஞானத் தந்தையர்கள் பங்குத் தந்தையர்கள் உதவிப் பங்குத் தந்தையர்கள் சங்க உத்தியோகத்தர்கள் அங்கத்தவர்கள் ஊக்கமும் ஆக்கமும் உதவியும் அளித்த சகலருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மரியாயின் ஆசி சகலருக்கும் நிறைவாய்க் கிடைப்பதாக.

[மன்னார் மறைமாவட்டத்தின் சார்பாக யாழ். கொமிற்சியத்தில் அங்கத்தவராகப் பணிபுரிந்து அதன் முதற்கனியாக மன்னார் மறைமாவட்ட முதற் கொமிற்சியத்தின் முதல் தலைவராகச் சேவை புரிந்து அமரரான சகோ. பெனடிற்றின் நினைவாக மன்னார் மரியாயின் சேனையின் வெள்ளிவிழா மலரிலிருந்து அவரது படைப்பு பொன் விழா மலருக்குச் சிறப்புச் செய்வதில் மகிழ்ச்சியுறுகியுறுகிறோம். அவரது ஆன்மாசாந்தி அடைக]

ஒரு தாயின் வயிற்றிலிருந்து குழந்தை பிறப்பதுபோல் தூய ஆவியின் அருட்செயலால் மரியம்மாளிடமிருந்து திருச்சபை பிறக்கின்றது இந்தப் புதிய ஏவாள், இன்னும் திருச்சபையின் தாயாக விளங்கி அதைப் பாதுகாக்கின்றாள்.

— பேரருட்திரு கெரான்ளேர்

பாம்பின் தலையை நசுக்கும் பணியுடைய கன்னிகையோடு ஒன்றித்திருப்பவர்கள் பாவத்தின்மீது வெற்றிகொள்ளும் வல்லமையைப் பெறுகின்றார்கள்.

— கிராட்ரி

மரியாயின் சேனைப் பொன் விழா நல்வாழ்த்து

மரியாயின் சேனை பொன்விழாவை ஈழத்தில் கொண்டாடும்
இவ்வேளையில் நம் நேசத்தாயிடம் நாம் வேண்டுவது
எம் நாட்டின் நித்திய சமாதானம் ஒன்றே.

புனித யூதாததேயு சென்ரர்

அரியாலை

பொன்விழா சிறப்புற வாழ்த்துகிறுர்கள்

விஞ்ஞானக் கல்வி நிலையம்

கரடிப்போக்கு — ஜெயந்திநகர்

கிளிநொச்சி

5ம், 6ம், 7ம், 8ம், 9ம், 10ம் ஆண்டுக்குரிய G.C E. (O/L) வகுப்புக்குரிய சகல பாடங்களும் [illegible] E. (A/L) வகுப்புக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்கள் அனைத்தும் திறமையும் அனுபவமுமிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.

விபரங்கட்கு
நிர்வாகி

For All Your Requirements of

DRUGS

VISIT

CITY MEDICALS

487, HOSPITAL ROAD

JAFFNA

களைப்பாறி, இளைப்பாறி, உண்டு மகிழ

நவீன குளிர்பான சிற்றுண்டிச் சாலை

- நெல்லி ரசம்
- முந்திரிகை ரசம்
- தேநீர்
- காப்பி

இன்னும் உங்களுக்குத் தேவையான ஜாம், கோடியல், இனிப்பு வகைகள், பிஸ்கட் வகைகள், மாஜரீன், பட்டர் அனைத்திற்கும்

பெமிலி காடின்ஸ்

(சிற்றுண்டிச் சாலை)

நவீன சந்தை (வங்கசாலை வீதி அருகில்)

குருநகர் (சின்னக்கடை)

யாழ்ப்பாணம்

ஊழியம்

"என்ன அம்மா, என்னை எங்கும் போக வேண்டாம் என்று மறிக்கிறீர்கள், இன்று எனது 'ஊழிய' நாளல்லவா"? என்று கவலையுடன் கேட்டார் பாலன் சகாய நாதன்.

"உனக்கிப்போது எத்தனை வயசு?" என்று தாயார் சகாயநாயகி கேட்க, உங்களுக்குத் தெரியாதா? பன்னிரண்டு வயசு தானே என்றார்.

"நல்லது மகனே, உமது ஊழியத்தின் பலனாக எத்தனை பெரியோரை மோட்சம் சேர்த்திருப்பீர்" என்று கேட்டா.

"அம்மா, நாங்கள் பாலர் பிரசிடிய அங்கத்தவர்கள்; ஆனால் நாம் நடமாடும் பகுதிகளில் வேதத்தை அனுசரியாத பெரியோர் இருந்தால், அவர்களைக் கெஞ்சிக் கேட்போம், சிலர் எங்களுக்கு மதிப்பளித்து மனம் திரும்பியுள்ளார்கள். அவர்கள் மோட்சம் போவார்கள் தானே" என்று பதிலளித்தார்.

"மகனே, நீ பெரியவர்களுடன் கதைப்ப தென்றால், உம்முடைய அப்பாவை மறந்தது ஏனோ? அறிவுடனிருக்கும் பொழுது உம்மைத் தமது 'கண்ணின் மணி' என்பாரே" என்று சொன்னார் சகாயநாயகி.

"அப்பா வீட்டில் இல்லாதபோது கேட்டது நல்லதாய்ப் போயிற்று. உங்களைப் பிடித்துப் பேயாட்டம் ஆட்டுபவர் என்னைச் சும்மா விடுவாரா? அவர் கோவிலை மறந்தது கெட்ட சிநேகிதராலேயல்லவா? நான் சொன்னால் மனம் மாறுவாரா? இன்று சீட்டு ஆடுவதற்கு எதைக் கொண்டுபோக வருவாரோ! நான் கண்ணின் மணி, ஆனால் புலமைப் பரிசில் கிடைத்திராவிட்டால் படிப்பு எப்படியிருந்திருக்கும். உங்கள் தையல்தானே எல்லோருடைய பசியையும் போக்குகின்றதே" என்றார்.

"மகனே, இன்றைக்கு எனக்கு ஒரே பயமாயிருக்கின்றது; எனது கலியாணத்தன்று உமதப்பா என் விரலிலணிந்த மோதிரம் தான் பாக்கி—சேலையும் ஒன்றே ஒன்றுதானுண்டு; இன்று நான் சாகுமட்டும் அப்பா அடித்தாலும் எனது அறிவிழந்தபின்பே மோதிரம் அகற்ற முடியும். அதுதான் மகனே நான் அடிபட்டு மரணத்தறுவாயில் இருந்தால் ஆண்டவரிடம் எனதாத்துமத்தை நீர் தான் ஒப்புக்கொடுக்க வேண்டும்; மறந்துபோக வேண்டாம்" என்று இதைக் கேட்டதும் விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டார், மகன்.

"அம்மா. நீங்கள் சாக நான் ஆத்துமம் ஒப்புக்கொடுக்க நான் கல்லறையில் உங்களுக்கு மண்போட — 12 வயது சென்று. லும் உங்களைத் தாபரித்துக் காப்பாற்றுவேன். சுருட்டுக் கொட்டிலுக்குப்போய் "வால்" சுருட்டுக் கட்டி என்றாலும் உங்களைக் காப்பாற்றமாட்டேனா? அப்பாவின் அடியிலும் உதையிலும் நின்று விலக வேறு வழியேயில்லையா?" என்று பொருமல்களுக் கிடையே கேட்டார்.

இந்த நேரம் மூன்றுபேர் வீட்டு விறுந்தையில் நின்று "வெலிச்சோர் அண்ணை இருக்கின்றாரா" என்று கேட்டார்கள்.

உடனே நாதன் ஆவேசத்துடனே இவர்கள் முன்வந்து அழுதுகொண்டே "பெரியவர்களே, எனது அம்மாவின் கோலத்தைக் காணுகின்றீர்களே. அப்பா அழிந்ததும் கெட்ட சிநேகிதரால்தான். உங்கள் கால்களில் விழுந்து கெஞ்சுகிறேன். அபகரித்த தெல்லாவற்றையும் வைத்துக்கொள்

ளுங்கோ. அம்மாவின் கலியாண மோதிரந்தை மட்டும் அவ கையில் இருக்க விடுங்கோ. அத்தோடு எனது அப்பாவையும் விட்டுப் போட்டுப் போங்கோ'' என்று சொல்லி முழங் காலில் விழுந்து ஒருவரின் பாதங்களைப் பிடித்துக் கொணடார்.

அவர் ''தம்பி, என் காலைவிடும்; கிழப்பில் நாம் இருக்கமாட்டோம்'' என்று மட்டும் அப்பாவிடம் சொல்லும் என்று சொல்லிப் போய்விட்டார்கள்.

தந்தையார் வந்தபோது அவர்கள் சொன்னதை மகன் அறிவித்தார். இன்று அவர் நிதானமாக நின்றார். மறுமொழி எதுவும் சொல்லவில்லை. இத் தருணத்தைக் கைவிடாது மகன் தகப்பனைப்பார்த்து ''அப்பா எனக்கு வயசு 12 தானே. இச் சிறுவயதிலும் என் ஆசை அம்மா படும் அவஸ்தையைக் காணச் சகிக்கமுடியவில்லை. இன்று என்ன சொன்னு தெரியுமா? நீங்கள் கலியாண மோதிரத்தைக் கேட்க அவ மறுப்பாவென்றும், அதற்காகப் பிராணன் போகும்வரை அடிப்பீர்களென்றும், அத் தருணம் தன்னுடைய ஆத்துமத்தை ஆண்டவரிடம் என்னை ஒப்படைக்கு படியும் சொன்னு இதை நினைக்கவே என் நெஞ்சு வெடிக்கின்றது.

அம்மாவை அடக்கம் செய்த பிற்பாடு உங்கள் கண்மணி சகாயனைக் காண வேண்டுமென்றால் ஏதும் ஒரு அறுதை இல்லத்தில் தான் தேடவேண்டும்'' என்று அழுதுகொண்டே சொன்னார்.

தகப்பன் விறைத்துப்போய்விட்டார். ''என் கண்மணியே நீயா எனக்கிப்படிச் சொல்லுகின்றாய், பொருள் பண்டமெல்லாம் இழந்தது மெய். இற்றைவரை எப்போது எது செய்தாலும் மதி மயங்கிய நிலையிற்தான் செய்தேன். இன்று அந்த நிலை ஏற்படாது வீட்டிற்கு வந்ததே புதுமை. இழந்தவற்றை மீட்க சீட்டாட்டத்தைத் தவிர வேறு மார்க்கமில்லையே'' என்றார்.

ஆட்டமும் வேண்டாம், மதி மாறாட்டமும் வேண்டாம். எங்கும் போகவும் வேண்டாம், பதிலாக வாருங்கள் மூன்றுபேரும் ஒரு செபமாலை சொல்லி, எனது அம்மாவைக் காப்பாற்றிய தாயாருக்கு நன்றி சொல்லுவோம்'' என்றார் மகன்.

''இந்தாருங்கள் உங்கள் செபமாலை'' என்று பல காலமாகக் கைபடாத மாலையைப் புருஷனிடம் கொடுத்தா சகாய நாயகி.

வணக்கம் முடிந்ததும் தாயார் மகனைப் பார்த்து ''இன்று ஒரு பெரியவரை மனம் திருப்பினேன்'' என்று செய்த ஊழியமாக நீர் வாய்மொழி கொடுக்கலாம்'' என்றா.

''மரியாயே வாழ்க'' என்றார் மகன்.

— யோசவ்

மரியாயின் சேனை ஒவ்வொரு குருவுக்கும் தெய்வீக வல்லமை வாய்ந்த ஒரு ஆயுதமாகவும், ஞானவாழ்க்கையைச் செழிப்புறச் செய்யும் நீரூற்றாகவும் ஆகிய சம மதிப்புள்ள இரண்டு வரங்களைத் தருகின்றது.

— கனன்கைரே

தூய ஆவியோடு மரியாய் கொண்டிருக்கும் ஐக்கியத்தின் வழியாக, கடவுளின் திருமகன் ஒவ்வொருநாளும் நமக்காக உருவாக்கப்பட்டு, பிறடபிக்கப்படுகிறார்.

—டிமொன்போர்த்

அன்பளிப்பு

தரமான

குணமான

சுவையான

சுத்தமான

தேனீருக்கு

முதற் பொருளாவது
எவர்-றெஸ்ற் தேயிலையே

எவர்-றெஸ்ற்

இன்டஸ்றீஸ் & டிஸ்ரிபியூட்டோஸ்
96, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்

யாழ். மரியாயின்சேனை பொன்விழா வாழ்த்து

நீண்டகாலமாக மாணவரினதும் பெற்றோரினதும்
நன் மதிப்புடன் திகழும் கல்வி நிறுவனம்

RADIANT INSTITUTE

PUNKANKULAM — ARIYALAI

OSSLO INSTITUTE

BARATHY LANE

JAFFNA

6ம் வகுப்புமுதல் க. பொ. த. உயர்தர வகுப்புகள் வரை

திறமைமிக்க அனுபவமுள்ள ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றன.

''மற்றவர்கள் கூறும் சத்தியத்தை நாங்கள் நிறைவேற்றுகின்றோம்''

120, PUNKANKULAM ROAD

BALA WELDING WORKS

ARIYALAI — JAFFNA

S. K. BALASUNDARAM

மரியாயின் சேனையின் ஐம்பதாவது வருட வாழ்த்துக்கள்

பீற்றேர்ஸ்

9, ஜுபிலி பஜார், யாழ்ப்பாணம்

சகலவித கிறைன்டேர்ஸ், மின்விசிறிகள், அவுட் மோட்டர் கொயில், தண்ணீர்ப் பம் கொயில், மற்றும் மக்னற்ரோ கொயில்கள் வைன்டிங் செய்துகொடுக்கப்படும்.

மரியாயின் சேனை பொன் விழா வாழ்த்து

கே. ஜே. வீடியோ சென்ரர்

பண்டத்தரிப்பு

★ T. V. Deck வாடகைக்கு உண்டு

★ புதிய பழைய, தமிழ் ஆங்கில இந்தி படங்கள் விற்பனைக்கு உண்டு.

★ "MAXELL செற்'' குறைந்த விலையிலுண்டு.

MEET K. J. VIDEO CENTER ONCE

மரியாயின்சேனை பொன்விழா வாழ்த்து

திருச்சிலுவை சுகநல நிலையம்
திருச்சிலுவை

ஆழமான அன்பின் அடையாளம்
குணமாக்கலின் அடையாளம்
மீட்பின் அடையாளம்
அடையாளம் எத்தனை! எத்தனை!!

கிறிஸ்து நோயாளிகளை அணுகியதுபோல் நாமும் அணுகிறோம் நடக்கிறோம், பணி புரிகிறோம், பாதுகாக்கிறோம்-

கிறிஸ்துவின் மாதிரிகையாக
இரக்கமும் பரிவும் கொள்கிறோம்
குணமாக்குகிறோம்
புதுமனிதராக்குகிறோம்
கிறிஸ்து வழிவாழும் நிலையக் கன்னியர்

நோயாளர் {
உளத் துன்பத்திலும்
போராட்டத்திலும்
சுகம் பெறுவதிலும்

அயராத தன்னலம் கருதாத சேவை
பாரபட்ச மில்லாமல்
அன்பைச் சொரிந்து
முழுமையாகக் கொடுத்து
மகிழும் இரகசியம் பாரீர்!
கிறிஸ்தவ — இந்துமத — இஸ்லாமிய
சகோதரர் மத்தியில்
விண்ணரசின் புளிக்காரமாக விளங்கும்
கிறிஸ்துவின் பிரசன்னம் நிறை பணிமனை

திருச்சிலுவை சுகநல நிலையம்
பீச் வீதி — யாழ்ப்பாணம்

மரியாயின் சேனைப் பொன் விழா வாழ்த்து

Dayanee Industries (Private) Ltd.

டயானி இன்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்ரட்

222, STANLEY ROAD, JAFFNA

SRI LANKA

Factory: **VEEMANKAMAM, TELLIPPALAI**

TELEPHONE: **23772**

TELEX:

Manufacturers of

"DAYAS" PUMPS

Govt. Approved Industries

Specialists in: **REWINDING OF ALL TYPE OF ELECTRIC MOTORS**

Dealers in: **S-LON PIPES AND FITTINGS**

ஞானம்ஸ்

• படப்பிடிப்பாளர்
• புளொக் தயாரிப்பாளர்
• போட்டோஸ்ரற் பதிப்பாளர்.

தொலைபேசி 23067

பிலிம், போட்டோ பேப்பர் மற்றும் போட்டோ உபகரணங்களுக்கும் வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

81, ஸ்ரான்லி வீதி, 301, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

உளமார்ந்த......

யாழ். மரியாயின் சேனையின் பொன்விழா சிறப்புற நிறைவு பெற எம்மைவழி நடத்திச் செல்லும் இறைவனுக்கும்,

எம்மோடிருந்து எமக்கு வேண்டிய அருள் வளங்களைப் பொழியும் மரியன்னைக்கும்,

ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை உற்சாகப் படுத்தும் எமது ஆயருக்கும், வேண்டிய ஆலோசனைகளைத் தந்து உதவி புரியும் ஆன்மீக இயக்குனருக்கும், குருக்களுக்கும், சங்கைக்குரிய சகோதரிகளுக்கும், சகல விதத்திலும் எமக்கு உதவி புரியும் பேராலயப் பங்குத் தந்தைக்கும், கல்லூரியை முழுமையாகப் பாவிப்பதற்கு மனமுவந்து உதவும் புனித சம்பதரிசியார் கல்லூரி அதிபருக்கும்,

வேண்டிய சந்தர்ப்பங்களில் எமக்கு வேண்டிய விபரங்களையும் ஆலோசனைகளையும் தந்துதவும் செனத்துஸ் தலைவருக்கும்,

மலருக்கு வேண்டிய விளம்பரங்கள் தந்துதவிய பேருபகாரிகளுக்கும், மலருக்கு வேண்டிய விடயதானங்கள் தந்துதவிய எழுத்தாளர் பெருந்தகைகளுக்கும், எமது சகல விதமான அச்சு வேலைகளையும் உரிய நேரத்தில் சிறப்புற செய்துதவும் புனித வளனர் அச்சக அதிபருக்கும் ஊழியர்களுக்கும், எமக்கு பல சந்தர்ப்பங்களில் பல விதமான உதவிகளையும் புரிந்து எம்மை உற்சாகப்படுத்தும் மறைக் கல்வி இயக்குனருக்கும் ஊழியர்களுக்கும், மேலும் எமக்கு உதவி புரிந்து உற்சாகப்படுத்தும் சகலருக்கும் எமது உளமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

விழாக்குழு

இலங்கையில் மரியாயின் சேனை

LEGIO MARIAE

பொன் விழா

* 1936 1986 *

22-2-86

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் 1986